உதயன்

வன்னி : ரூபா.20
யாழ். : ரூபா.20
கொழும்பு : ரூபா.30

UTHAYAN - A Lively National Tamil Daily


மழைக்கான சாத்தியம் உண்டு

27°c 26°c

பக்கம் 24 | சுடர்: 28 | கதிர்: 349 | வள்ளுவர் ஆண்டு: 2044 | ஐப்பசி 25, திங்கள் 11.11.2013

# ஆஸி., நியூஸி. எம்.பிக்களை திருப்பியனுப்பியது இலங்கை

## தமிழ்க் கூட்டமைப்பு கண்டனம்

கொழும்பு, நவ. 11

உண்மையைக் கண்டறியும்பயணத்தை மேற்கொண்டு கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வந்த ஆஸ்திரேலியா மற்றும் நியூஸிலாந்து நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருவரை குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் நேற்று விசாரணைக்குட்படுத்திய பின்னர் அவர்களை சொந்த நாடுகளுக்கு திருப்பி அனுப்பினர்.

ஆஸ்திரேலியா செனட் சபை உறுப்பினர் லீ ரைனோன், நியூஸிலாந்து கிறீன் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர் யான் லொக்கி ஆகியோர் நேற்றுக் கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்புடன் இணைந்து ஊடகவியலாளர்களைச் சந்திக்கவிருந்த நிலையிலேயே இவ்வாறு திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர் என்று கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் நேற்றுத் தெரி

# சர்வதேச ஊடகர்களும் வடக்குக்குச் செல்லலாம்

## அரசு அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

பொதுநலவாய மாநாடு தொடர்பான செய்தி சேகரிக்க இலங்கைக்கு வந்துள்ள சர்வதேச ஊடகவியலாளர்கள் வடபகுதிக்கு சென்று செய்தி சேகரிக்க விரும்பினால் அதற்கான ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும் என்று தகவல்திணைக்களத்தின் பணிப்பாளர் ஆரியரத்தின தெரிவித்துள்ளார்.

"இலங்கையில் இடம்பெறுகின்ற பொதுநலவாய அரசுத் தலைவர்கள் மாநாடு தொடர்பான செய்தி சேகரிப்புக்காக சுமார் 800 ஊடகவிய

# பொதுநலவாய மாநாடு: பங்கேற்கார் மன்மோகன்

## தமிழகத்தின் எதிர்ப்பால் தலைகீழானது டில்லியின் முடிவு



கொழும்பு, நவம்பர் 11

இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் கலந்துகொள்வது தொடர்பில் தீவிர ஆலோசனை நடத்தி வந்த இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன் சிங், இது விடயத்தில் தமிழகத்திலும் காங்கிரஸ் கட்சிக்குள்ளும் கடும் எதிர்ப்புகள் வலுத்ததால் கொழும்பு மாநாட்டில் பங்கேற்கும் முடிவை இறுதி நேரத்தில் கைவிட்டார்.

எனினும், பொதுநலவாய மாநாட்டை டில்லி முழுமையாக புறக்கணிக்க வில்லை. வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித் தலைமையிலான குழுவொன்றை கொழும்புக்கு அனுப்புவதற்கு அது தீர்மானித்துள்ளது. இந்தியப் பிரதிநிதிகள் குழுவுக்குத் தாம் தலைமையேற்கவுள்ளதை குர்ஷித் நேற்று உறுதிப்படுத்தினார்.

### மஹிந்தவுக்கு கடிதம்

அதேவேளை, மாநாட்டில் கலந்து கொள்ளாதது குறித்து ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங் கடிதம் எழுதியுள்ளார். அதில், மாநாட்டில் பங்கேற்க இயலாததற்கு பிரதமர் வருத்தம் தெரிவித்துள்ளார்.

தனக்குப் பதிலாக இந்தியா சார்பில் வெளியுறவு அமைச்சர் சல்மான் குர்ஷித் மாநாட்டில் பங்கேற்பார் என்றும் அக்கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார் என்று இந்தியச் செய்திகள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில், பிரதமர் மன்மோகன் சிங்கின் கொழும்பு மாநாடு முடிவு தொடர்பில் நேற்று டில்லியில் செய்தி



# உண்மை நிலையை அறிய சென்று பாருங்கள் வடக்கே

## சர்வதேச தலைவர்களுக்கு சொல்கிறார் கோத்தா

யாழ்ப்பாணம், நவ.11

பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் சர்வதேசத் தலைவர்கள் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வட பகுதிக்கு பயணம் மேற்கொள்ள வேண்டும். அப்போதுதான் அவர்கள் அந்தப் பகுதியில் அரசு மேற்கொண்டுள்ள அபிவிருத்திப் பணிகள் மற்றும் தீர்த்து வைக்கப்பட்டுள்ள மனித உரிமை விடயங்கள் என்பவற்றை நேரடியாகப் பார்வையிட்டு உண்மைநிலையை உணர முடியும் - இவ்வாறு அழைப்பு

# அரசுக்குத் தோல்வியில்லை

## வெளிவிவகார அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

கொழும்பு, நவ.11

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் இந்தியப் பிரதமர் கலந்து கொள்ளாதது தமக்குத் தோல்வி இல்லை என்று இலங்கை அரசு தெரி வித்துள்ளது.

உள்நாட்டு அரசியல் காரணங்களினாலேயே கொழும்பில் நடக்கும் மாநாட்டில் மன்மோகன் சிங் கலந்து கொள்ளாதிருக்க முடிவுசெய்துள்ளார் என்று வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் பீரிஸ் தெரிவித்துள்ளார்.

பொதுநலவாய உச்சி மாநாட்டில் கலந்துகொள்ளாதிருக்க இந்தியப் பிரதமர் எடுத்துள்ள முடிவு இலங்கைக்கு ஏற்பட்டுள்ள பெரும் பின்னடைவாக கூறப்படுகின்றது. இது குறித்து கருத்து வெளியிட்டபோதே பீரிஸ் இவ்வாறு கூறியுள்ளார்.

"மன்மோகன் சிங் வராமல் இருக்க

# தமிழர் பக்கமே இந்தியா

## பிரதமரின் முடிவு குறித்து ஞானதேசிகன்

கொழும்பு, நவ.11

இலங்கையுடன் உறவுகளைப் பேணினாலும் தமிழ் மக்களின் உணர்வு களை அவமதிக்கும் வகையில் இந்தியா எந்தவொரு முடிவையும் எடுக்காது என்பதையே பிரதமரின் முடிவு தெளிவாக எடுத்துக்காட்டுகின்றது என்று தமிழக காங்கிரஸ் தலைவர் ஞானதேசிகன் நேற்றுத் தெரிவித்தார்.

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்கப்போவதில்லை என இந்தியப் பிரதமர் மன்மோகன் சிங் எடுத்துள்ள முடிவு தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

"கொழும்பு மாநாட்டில் வெளிவிவகார அமைச்சர் சல்மான் குர்ஷித்தே பங்கேற்பார் என எமக்கு அறிவிக்கப்பட்டுள்

# 3 கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்வதற்கு அனுமதி

## நேற்று அரச அதிபர் திடீர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

வலி.வடக்கு மீள்குடியமர்வை வலியுறுத்தி நாளைய தினம் கவனவீர்ப்புப் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள நிலையில், வலி.வடக்கு உயர் பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் பலாலி கிழக்கு (ஜே/253), பலாலி வடக்கு (ஜே/254) மற்றும் வலி. கிழக்கு உயர்பாதுகாப்பு வலயத்தினுள் அடங்கும் வளலாய் (ஜே/284) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளில் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கப்பட்டுள்ளதாக திடீர் அறிவிப்பு வெளியிடப் பட்டுள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் இடம்பெற்ற விசேட கலந்துரையாடலைத் தொடர்ந்து அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகத்தால் இந்த அறிவிப்பு விடுக்கப்பட்

வலி.வடக்கில்

# மீள்குடியமர்வை வலியுறுத்தி உணவு தவிர்ப்புப் போராட்டம்

## அனைவரையும் கலந்துகொள்ளுமாறு மாவை அழைப்பு

யாழ்ப்பாணம், நவ.11

வலி. வடக்கு மக்களின் மீள்குடியமர்வை வலியுறுத்தி நாளை செவ்வாய்க்கிழமை முதல் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்படவுள்ள உணவு தவிர்ப்பு போராட்டத்துக்கு இணைந்து மக்களையும், அரசியல் கட்சியினரையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகோள் விடுத்துள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை.சேனாதிராசா.

வலி.வடக்கில் இராணுவத்தினரால் கையகப்படுத்தப்பட்டுள்ள 24 கிராம சேவையாளர் பிரிவுகளையும் விடுவிக்குமாறும், அங்கு இராணுவத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வரும் வீடழிப்பு நடவடிக்கைகளை தடுத்து நிறுத்தக் கோரியும் அந்தப் பகுதி மக்க

# சிறுமிகளைக் காணோம்

யாழ்ப்பாணம், நவ.11

வவுனியாவில் இரு சிறுமிகள் காணாமற்போயுள்ளனர் என அவர்களின் பெற்றோர் வவுனியா பொலிஸாரிடம் முறைப்பாடு செய்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை 14 வயது மற்றும் 17 வயதுடைய குறித்த இரு சிறுமிகளும் ஆலயம் ஒன்றுக்கு செல்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைத் தமிழருக்கு ஐ.நா துரோகம் இழைத்துவிட்டது

## கனேடிய ஊடகம் கவலை




கொழும்பு,நவ. 11
1000 மக்களைப் படுகொலை செய்த இஸ்ரேலுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபை 10 தீர்மானங்களை நிறைவேற்றியது. ஆனால் இதே ஐ.நா பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்களின் இழப்புக்கு காரணமாக உள்ள இலங்கை அரசுக்கு எதிராக எவ்வித தீர்மானங்களையும் நிறைவேற்றவில்லை. இவ்வாறு ரொரன்ரோ ஸ்ரார் ஊடகத்தின் பத்தி எழுத்தாளர் ரோசிடி மென்னோ எழுதியுள்ள கட்டுரையில் கேள்வி எழுப்பப்பட்டுள்ளது.

இதுகுறித்து அந்த ஊடகம் வெளியிட்டுள்ள கட்டுரையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

கண்ணீர்த் துளி போன்ற ஒரு வடிவத்தில் உள்ள ஒரு தீவே இலங்கை. இங்கு இடம்பெற்ற போரின் போது விழுந்த கண்ணீர்த் துளிகள் எண்ணுக்கணக்கற்றவை. அதே போன்று போரின் போது உயிரிழந்த மக்களின் எண்ணிக்கையும் அளவற்றது.

இலங்கையில் இறுதிக் கட்ட போர் நடைபெற்றபோது அதில் அகப்பட்டுத் தவித்த மக்களைப் பாதுகாக்கத் தவறிய ஐக்கிய நாடுகள் சபை, போர் முடிவடைந்து நான்கு ஆண்டுகள் கடந்த நிலையில் இப்போது 40,000 தொடக்கம் 70,000 வரையான பொது மக்கள் போரில் படுகொலை செய்யப்பட்டதை ஏற்றுக் கொண்டுள்ளது.

இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாம் எனவும் ஐ.நா. தெரிவித்துள்ளது.

2006 தொடக்கம் மே 2009 வரையான காலப்பகுதியில் இலங்கை இராணுவத்தினரால் அப்பாவிப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர். இறுதிக்கட்ட போரில் தமிழ்மக்கள் கொல்லப்படுவதை தடுக்க இலங்கை அரசு எந்த முயற்சியும் எடுக்கவில்லை.

அதுமட்டுமின்றி இலங்கை அரச படைகள் போரின் போது மிகக் கொடூரமான மீறல்களைப் புரிந்தன. போர்க் குற்றங்கள் மற்றும் மனிதாபிமானத்திற்கு எதிரான குற்றங்கள் எனப் பல்வேறு மீறல்களை அந்தப் படைகள் மேற்கொண்டன. செறிவான எறிகணை வீச்சுக்கள், அப்பாவி மக்கள் மீதான கண்மூடித்தனமான தாக்குதல்கள், வைத்தியசாலைகள் மீதான தாக்குதல்கள், மனிதாபிமான தொடரணிகள் மீதான தாக்குதல்கள் என எவ்வித பாகுபாடுமின்றி இலங்கை படைகள் தாக்குதல்களை மேற்கொண்டன.

போரில் இடம்பெற்ற மனித உரிமை மீறல்கள் தொடர்பில் 'நம்பகமான' விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என செப்ரெம்பரில் ஐ.நா மனித உரிமைகளுக்கான உயர் ஆணையாளர் நவிப்பிள்ளை அறிவித்திருந்தார்.

அத்துடன் இலங்கை அரசு உரிய முறையில் விசாரணையை மேற்கொள்ள முன்வராவிட்டால் அனைத்துலக சமூகமானது தனது சொந்த விசாரணைப் பொறிமுறைகளை உருவாக்க வேண்டிய கடப்பாட்டைக் கொண்டிருக்கும் எனவும் நவிப்பிள்ளை அறிவித்திருந்தார்.

1000 மக்களைப் படுகொலை செய்த இஸ்ரேலுக்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையானது 10 தீர்மானங்களை நிறைவேற்றியது. ஆனால் இதே ஐ.நா பல பத்தாயிரக்கணக்கான பொதுமக்களின் இழப்புக்கு காரணமாக உள்ள இலங்கை அரசுக்கு எதிராக எவ்வித தீர்மானங்களையும் நிறைவேற்றவில்லை. இது மிகவும் வருத்தத்துக்குஉரியது என அந்த ஊடகம் தனது பத்தியில் தெரிவித்துள்ளது.

(ஐ)

## வவுனியாவில் தீப்பந்த போராட்டம்

வவுனியா, நவ.11
காணாமற்போனோரை மீட்டுத்தரவும்,அரசியல்கைதிகளை விடுதலை செய்யவும் கோரி வவுனியா மாவட்ட பிரஜைகள் குழுவின் ஏற்பாட்டில் தீப்பந்தப் போராட்டம் ஒன்று நடத்தப்படவுள்ளது.

எதிர்வரும் 15 ஆம் திகதி இந்தப் போராட்டம் நடத்தப்படவுள்ளதாக தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான கூட்டம் நேற்று வவுனியா தெற்கு பிரதேச சபை மண்டபத்தில் வவுனியா மாவட்ட பிரஜைகள் குழு தலைவர் தியாகராசா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் வட மாகாண சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம், வட மாகாண சபையின் வவுனியா உறுப்பினர்கள் மற்றும் வவுனியா தெற்கு பிரதேச தலைவர் உட்பட பலரும் கலந்துகொண்டனர்.

(ஐ-402)

# ஈழத் தமிழரை ஏமாற்றாது இந்தியா அர்ப்பணிப்புடன் உதவ வேண்டும்

## தஞ்சையில் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கோரிக்கை

> இன்று தமிழின வரலாற்றில் மிக முக்கிய நாள். காலமே கதறி அழுத கடும் பேரழிவு களைச் சந்தித்த நாம், அந்த அழிவுகளை ஆயுதமாக்கி போராடுகிற காலகட்டத்தில், எங்கள் அவலங்களை ஆலய மாக்கி வழிபடுகிற நாள். வீரம் விளைந்த தஞ்சை மண்ணிலே, கோயில் வடிவில் எழுந்து நிற்கின்ற, வீரம் விதைக்கப்பட்ட முள்ளி வாய்க்கால் மண்ணை நாம் பூசிக்கிற முதல் நாள்.

யாழ்ப்பாணம், நவ.11
இறுதிக் கட்டப் போரின் இறுதி நிமிடம் வரையில் இந்தியாவை நம்பியே ஈழத் தமிழன் சாவைத் தழுவினான். தற்போதும் எங்களுக்கான தீர்வினை இந்தியாவே பெற்றுத் தரும் என்று நம்பிக்கொண்டிருக்கிறோன். இனியும் ஏமாற்றாமல் இந்தியா ஈழத் தமிழர்களுக்கு உதவ வேண்டும் என்று தஞ்சை மண்ணில் வைத்துக் கோரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண சபை உறுப்பினர் து.ரவிகரன்.

தஞ்சையில் திறந்து வைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுமுற்ற அரங்க நிகழ்வில் கலந்து உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து தெரிவித்ததாவது:

இன்று தமிழின வரலாற்றில் மிக முக்கிய நாள். காலமே கதறி அழுத கடும் பேரழிவுகளைச் சந்தித்த நாம், அந்த அழிவுகளை ஆயுதமாக்கி போராடுகிற காலகட்டத்தில், எங்கள் அவலங்களை ஆலயமாக்கி வழிபடுகிற நாள். வீரம் விளைந்த தஞ்சை மண்ணிலே, கோயில் வடிவில் எழுந்து நிற்கின்ற, வீரம் விதைக்கப்பட்ட முள்ளிவாய்க்கால் மண்ணை நாம் பூசிக்கிற முதல் நாள்.

மொழிக்காக தம்மை தியாகித்தவர்களையும், தொப்புள் கொடி உறவுகளுக்காக தம்மை எரித்து , தமிழினத்தின் தேசிய ஆன்மாவினுள் தம்மை ஐக்கியப்படுத்திக் கொண்டவர்களையும், ஈழத்தில் விதையானவர்களையும் ஒருங்கே காண்கிற முதல் நாள்.

இது எங்கள் அழிவின் காட்சி மட்டுமல்ல. ஆற்றலின் நீட்சி. தமிழரின் கலை ஆட்சிக்கு மகத்தான சாட்சி.

பயம் அறியாதவன் படை நடத்திய பூமியில் பள்ளிக் கூடம் போனவர்கள் நாங்கள். படுத்து உறங்கியவர்கள் நாங்கள். உண்மையை உரக்கச் சொல்வதில் யாருக்கும் அஞ்சமாட்டேன். வடக்கு மாகாண சபையில் வெற்றி பெற்றிருக்கிற 30 பேரும் எமது மக்களின் உரிமைகளுக்காக தொடர்ந்தும் போராடுவோம்.

பல்வேறு உலக நெருக்கடிகளின் போதும், ஈழத்தமிழர்கள் இந்திய ஆதரவு மன நிலையிலேயே இருந்திருக்கின்றனர். இந்தியாவைத் தவிர்க்க நாம் என்றும் எண்ணியதில்லை. காந்தியையும், சுபாஸ் சந்திரபோஸையும் இன்றும் எமது மக்கள் மதிக்கின்றனர்.

முள்ளிவாய்க்காலில் சாவடைந்த ஒவ்வொருதமிழனும் தனது இறுதி நிமிடம் வரை இந்தியா உதவிக்கு வரும் என்று தான் காத்திருந்தான். இன்று எஞ்சியிருக்கிற ஒவ்வொரு தமிழனும் இந்தியா எமக்கான தீர்வைப் பெற்றுத் தரும் என்றே நம்புகிறான்.

ஈழ மக்களின் ஆழமான ஆத்மீக ஏக்கமும் ஆசையும் அதுவே. எனவே இந்த இந்திய தேசம் எமது மக்கள் தொடர்பில் தீர்க்கமான உறுதியான முடிவை எடுக்க வேண்டும்.

எமக்காக இன்று தமிழகம் ஒரு வரலாற்றுச் சின்னத்தை அமைத்திருக்கிற இந்த வேளையில், உங்கள் அனைவருக்கும் எங்கள் மக்கள் சார்பாக அன்பையும் நன்றியையும் தெரிவிக்கிறேன் என்றார்.

(ஐ-5)

# இலங்கை வந்து சென்றால் மக்ரேயின் மனநிலை மாறும்

## ஹெகலிய நம்பிக்கை

இலங்கைக்கு வந்து சென்றதும் சனல்4 தொலைக் காட்சியின் பணிப்பாளர் கெலும் மக்ரேயின் மனநிலை கட்டாயம் மாற்றமடையும். இவ்வாறு தெரிவித்தார் ஊடக அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:

மக்ரே இலங்கைக்கு பயணம் செய்ததன் பின்னர் இலங்கை தொடர்பான அவரது நிலைப்பாட்டில் மாற்றம் ஏற்படும். பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனின் ஊடகவியலாளர் குழுவுடன் மக்ரே இலங்கைக்கு வரவுள்ளார்.

இவருடன் 30 ஊடகவியலாளர்கள் பிரிட்டனின் சார்பில் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளில் பங்கேற்க உள்ளனர். கெலும் மக்ரேக்கு இலங்கைக்கான நுழை விசைவு (வீஸா) வழங்குவதில் இலங்கைக்கு எவ்வித ஆட்சேபமும் கிடையாது.

இலங்கையில் உள்ள நிலைமைகளை நேரில் பார்வையிடுவதன் மூலம் அவர்கள் கொண்டுள்ள தவறான புரிதல்களை மாற்றிக்கொள்ள முடியும்.

ஆனாலும் பொதுநலவாய நாடுகள் தலைவர்கள் அமர்வுகளை சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி இலங்கைக்கு எதிராக மற்றுமொரு ஆவணப்படத்தை தயாரிக்க இவர்கள் முயற்சிக்கக்கூடும். அவ்வாறான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டால் நாம் அதனை முறியடிக்கத் தயாராக உள்ளோம் - என்றார்.

(ஐ)

# ரவிராஜின் நினைவு நிகழ்வு

யாழ்.மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் நடராஜா ரவிராஜ் நினைவு தின நிகழ்வும் நினைவுப் பேருரையும் நேற்று சாவகச்சேரி டச்சு வீதியில் உள்ள ஐங்கரன் மணி மண்டபத்தில் இடம்பெற்றது.

வடக்கு மாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் ஈகைச் சுடரை வட மாகாண சபை உறுப்பினர்களும் உள்ளுராட்சி சபைகளின் தவிசாளர்களும் உறுப்பினர்களும் ஏற்றினர்.

நடராஜா ரவிராஜின் உருவப் படத்திற்கு வட மாகாண சபை அவைத் தலைவர் சி. வீ.கே. சிவஞானம் மலர் மாலை சூட்டினார்.

வரவேற்புரையை வைத்தியர் எஸ்.எஸ். அருளானந்தமும் சிறப்புரையை வட மாகாண சபை அவைத் தலைவர் சி.வீ.கே. சிவஞானமும் நிகழ்த்தினர்.

ஜனநாயக மக்கள் கட்சி தலைவர் மனோ கணேசனால் அனுப்பப்பட்ட நினைவுரையை கொழும்பு மாநகர சபை உறுப்பினர் சு.பாஸ்கரா வாசித்தார்.

நடராஜா ரவிராஜின் நினைவுப் பேருரையாக "வட மாகாண விவசாய அபிவிருத்திக்கான கண்ணோட்டத்தில் வீட்டுத் தோட்டம் ஒரு விவசாய வளம்" என்னும் தலைப்பில் கலாநிதி சிவமதி சிவச்சந்திரன் உரையாற்றினார். நன்றியுரையை ரவிராஜ் நினைவு தின ஏற்பாட்டுக் குழுத் தலைவர் ஆதில்லைநாதன் நிகழ்த்தினார்.

(ஐ-9)

# மஹிந்த அரசு உணரவேண்டும்

## வெளிவிவகாரக் கொள்கை அம்பலம் என்கிறது ஐ.தே.க.

இலங்கையில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டை இந்தியப் பிரதமர் புறக்கணித்திருப்பதன் மூலம் இலங்கை அரசின் வெளிவிவகாரக் கொள் கையின் மோசமான நிலைமை வெளிச்சத்துக்கு வந்துள்ளது என்று பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சி குற்றஞ்சாட்டியுள்ளது.

டில்லியுடனான உறவைவிட தமிழகத்தின் உறவு மிக அவசியம் என்பதை இனியாவது அரசு புரிந்துகொள்ள வேண்டும் என்றும் அக்கட்சி குறிப்பிட்டுள்ளது.

இலங்கையில் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் 17ஆம் திகதிவரை நடை பெறவுள்ள பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்காதிருக்க இந்தியப் பிரதமர் முடிவெடுத்துள்ளார். இவ்விவகாரம் தொடர்பில் 'உதயனி'டம் கருத்து வெளியிடும்போதே ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவச் சபை உறுப்பினரான லக்ஷ்மன் கிரியெல்ல மேலும் தெரிவித்ததாவது:

"இந்தியாவுடன் சிறந்த உறவுகளைப் பேணமுடியாத இந்த அரசு வேறு நாடுகளுடன் எவ்வாறு உறவைப் பேணப் போகின்றது? இந்தியப் பிரதமர் பொதுநலவாய மாநாடு குறித்து எடுத்துள்ள முடிவானது அரசின் வெளி விவகாரக் கொள்கையிலுள்ள பலவீனத்தையே எடுத்துக்காட்டுகின்றது.

டில்லியுடனான உறவை விட எமக்குத் தமிழகத்துடனான உறவு மிக அவசியம் என நாம் ஆரம்பம் முதலே கூறி வந்தோம். எனவே, இனியாவது அரசு நிலைமையை உணரவேண்டும் - என்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேதன உயர்வை வழங்க நடவடிக்கை எடுக்குக

## முதலமைச்சருக்கு வடக்கு அரசசேவை பட்டதாரிகள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.11
மூன்று வருடங்களாகத் தமக்கு வழங்கப்படாதுள்ள வேதன அதிகரிப்பை வழங்க நடவடிக்கை எடுக்கு மாறு வடமாகாண அரச சேவை பட்டதாரிகள் சங்கத்தினர் மாகாண முதலமைச்சரைக் கேட்டுள்ளனர்.


வடக்கு மாகாணத் திணைக்களங்களில் நிகழ்த்திட்ட உதவியாளர்களாகக் கடமையாற்றிய அனைத்துப் பட்டதாரி உத்தியோகத்தர்களும் அரச வர்த்த மானி அறிவித் தலுக்கு அமைய கடந்த 2011 ஓகஸ்ட் முதலாம் திகதி தொடக்கம் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிக்கு உள்ளீர்க்கப்பட்டனர்.

மாகாண பொதுச்சேவைகள் ஆணைக்குழுவால் வழங்கப்பட்ட நியமனக் கடிதத்தில் பதவியின் வகுப்பு குறிப்பிடவில்லை. இதனால் வேதன அதிகரிப்பை வழங்குவதில் திணைக்களத் தலைவர்களிடம் தெளிவின்மை காணப்படுகிறது.

கடந்த மூன்று வருடங்களாக குறித்த உத்தியோகத்தர்கள் வேதன அதிகரிப்பைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளனர். எனவே பாதிக்கப்பட்ட உத்தி யோகத்தர்களுக்குத் தகுந்த நிவாரணம் கிடைக்க வழி செய்யுமாறு சங்கச் செய லாளர் கே.எஸ்.மயூரன் முதலமைச்சருக்கு கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (வ-9)

# வர்த்தக நிலையம் உடைத்து திருட்டு

## குஞ்சர்கடைப் பகுதியில்



பருத்தித்துறை.நவ.11
வடமராட்சி, குஞ்சர்கடையிலுள்ள வர்த்தக நிலையத்தில் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை இரவு திருடர்கள் தமது கைவரிசையைக் காட்டியுள்ளனர்.

இது குறித்து மேலும் தெரிய வருவதாவது:-


வர்த்தக நிலையத்தின் உரிமையாளர் நேற்று வந்த போது கடையின் பாதுகாப்புக் கம்பிகள் உடைக்கப்பட்டும், கதவின் பூட்டும் உடைக்கப்பட்டிருந்தது.

அதனைத் தொடர்ந்து கடையின் உள்ளே சென்று பார்த்தபோது 5 பண்டல் சிக ரெட் பெட்டியும் 15,000 ரூபா பணமும் களவாடப் பட்டிருந்தன. கணக் கெடுப்பின் பின்னரே வேறு பொருள்களும் திருடப்பட்டவை என்று தெரியவருமென்பது உரிமையாளர் கூறினார்.

இது தொடர்பாக நெல்லியடிப் பொலிஸார் விசாரணையை மேற்கொண்டு வருகின்றனர். (வ-422)

# 100 ஹெக்ரெயரில் உருளைக்கிழங்கு

## விவசாயத் திணைக்களத்தின் செய்கை



அச்சுவேலி, நவ.11
யாழ்.மாவட்டத்தில் இந்த வருடம் 100 ஹெக்ரெயர் நிலப்பரப்பில் உருளைக்கிழங்கு பயிர்ச் செய்கை மேற்கொள்ள விவசாயத் திணைக்களம் ஏற்பாடுகளை மேற்கொண்டுள்ளது. வெளிநாட்டில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கில் ஒரு பகுதி யாழ்ப்பாணத்துக்கு வந்ததும் திருநெல்வேலி களஞ்சியத்தில் களஞ்சியப்படுத்தப்பட்டு, உருளைக்கிழங்கு செய்கையாளர் கூட்டுறவுச் சங்கம் ஊடாக விவசாயிகளுக்கு வழங்கப்படவுள்ளது. ஆயிரம் பேர் விதை உருளைக்கிழங்கு பெறுவதற்கு விண்ணப்பித்துள்ளனர் என்று யாழ். மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் கே.அருந்தவநாதன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"உருளைக்கிழங்கு செய்கையை ஊக்குவிக்கும் நோக்கில் யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு 50 வீத மானிய விலையில் விதை கிழங்கு வழங்கப்படவுள்ளது. கடந்த வருடம் 50 கிலோ கொண்ட பொதி ஒன்று 13 ஆயிரத்து 500 ரூபா வரை விற்பனை செய்யப்பட்டது. தனியார் துறையினர் விதை உருளைக்கிழங்கை இறக்குமதி செய்து விற்பனை செய்தனர்.

இந்த வருடம் இறக்குமதி செய்யப்பட்ட விதை உருளைக்கிழங்கின் பெறுமதியில் 50 வீதத்தை விவசாய அமைச்சு வழங்குகின்றது. மிகுதி 50 வீதத்தை விவசாயிகள் செலுத்திப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

உருளைக்கிழங்கு செய்கையில் ஈடுபடும் விவசாயிகள் தொடர்பான தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்கு ஏதுவாக விவசாயிகளின் சுயவிவரம் பயிர் செய்வதற்குத் தயாராக உள்ள காணியின் அமைவிடம் மற்றும் பரப்பளவு, தேவையான விதை உருளைக்கிழங்கின் அளவு மற்றும் தகவல்களைப் பெற்றுக் கொள்வதற்கு தயார் செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஆயிரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்கள் விவசாய சம்மேளனம், பெரும்பாக விவசாயக் குழு மற்றும் உருளைக்கிழங்கு உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்தின் பரிந்துரையுடன் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பங்களை விவசாயத் திணைக்கள உயர் அதிகாரிகள், உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்க சமாசத்தின் நிர்வாகிகள் உள்ளடங்கிய உயர் மட்டக் குழு பரிசீலனை செய்வதோடு உருளைக்கிழங்கு நடுகை செய்யவிருக்கும் தோட்டங்களையும் நேரில் சென்று பார்வையிட்டு விவசாயிகள் விண்ணப்பத்தில் தெரிவித்துள்ள தகவல்களை ஒப்பு நோக்கி உறுதிசெய்வதற்குஏற்பாடுகள் மேற் கொள்ளப்பட்டுள்ளன.-என்றார். (வ-11)

# கையளித்த வீடுகளைப் பார்த்து மக்கள் அதிர்ச்சி



இவற்றுக்குப் பெயர்தான் வீடுகளாம்

வடமராட்சி, நவ.11
படையினரால் கையளிக்கப்பட்ட வல்வெட்டித்துறை சங்கப் பகுதியில் உள்ள வீடுகளைப் பார்வையிட்ட அவற்றின் உரிமையாளர்கள் அதிர்ச்சி அடைந்துள்ளனர். பருத்தித்துறையிலுள்ள 521 ஆவது படைப் பிரிவில் படையினர் வசம் இருந்த பருத்தித்துறை, சக்கோட்டை வல்வெட்டித்துறைப் பகுதிகளைச் சேர்ந்த 66 வீடுகள் நேற்றுமுன்தினம் உரிமையாளர்களிடம் கையளிக்கப்பட்டன.

வல்வெட்டித்துறையில் உள்ள வீடுகளைப் பெற்றுக் கொண்ட உரிமையாளர்கள் அவற்றைச் சென்று பார்வையிட்ட போது பல வீடுகள் தரை மட்டமாக்கப்பட்டும், வீடுகளின் கூரைகள் உடைத்து அகற்றப்பட்டும், மலசல கூட கோப்பைகள், குளியலறைத் தொட்டிகள் யாவும் அகற்றப்பட்டும், கதவு நிலைகள் பிடுங்கப்பட்டும் இருந்த நிலையைக் கண்டு பெரும் அதிர்ச்சி அடைந்தனர்.

இராணுவ முகாம்களாகப் பயன்படுத்தப்பட்டு வரும் பொது மக்களின் வீடுகள் கையளிக்கப்பட வேண்டும் என்ற அழுத்தங்கள் பல்வேறு தரப்பினரிடமிருந்தும் விடுக்கப்பட்ட நிலையில் வீடுகளை உரியவர்களிடம் கையளிக்கும் நிலை படையினருக்கு ஏற்பட்டது. கடந்த மூன்று மாதங்களாக வீடுகள் உடைக்கப்பட்டு வீட்டின் கற்கள், நிலைகள், கதவுகள் கூரைத் தடுகள் என்பன தினமும் இராணுவ வாகனங்களில் கொண்டு செல்லப்பட்டன என்று பிரதேச மக்கள் தெரிவித்தனர்.

இதனால் மக்கள் உடனடியாக குடியமர முடியாத நிலையிலேயே வீடுகள் கையளிக்கப்பட்டதாக குடியிருப்பாளர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யவுள்ளதுடன் மற்றும்வடமராட்சி இராணுவத் தளபதி பிரிகேடியர் டிக்கிரி திசநாயக்கா, பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன், வல்வெட்டித்துறை நகர சபைத் தலைவர் ந.அனந்தராஜ் ஆகியோரிடம் மனுக்கள் கையளிக்கப்பட்டுள்ளன. (வ-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எங்கள் சொந்தக் காணிகளில் நாங்களே குடியமரவேண்டும்

## பலாலி கிழக்கு, வடக்கு மக்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

"எங்கள் காணிகளில் எங்களைத்தான் குடியமர்த்த வேண்டும். எமது சொந்தக் காணிகளை வேறு யாருக்கும் தாரைவார்க்க நாம் தயாரில்லை" என்று பலாலி கிழக்கு மற்றும் வடக்கைச் சேர்ந்த மக்கள் தெரிவித்துள்ளனர்.

பருத்தித்துறை திக்கம் பகுதியில் அமைந்துள்ள பலாலி மீனவர் சங்கத்தில் நேற்றுக் காலை கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது. இதில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஈ.சரவணபவன் மற்றும் வலி.வடக்கு பிரதேச சபையின் தவிசாளர் சோ.சுகிர்தன் ஆகியோர் கலந்து கொண்டிருந்தனர்.

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்றார் பலாலி கிழக்கு மற்றும் பலாலி வடக்கு மக்கள்,

"எமது சொந்தக் காணிகளில் நலன்புரி நிலையங்களிலுள்ள மக்கள் விடுவிக்கப்படவுள்ளதாக செய்திகள் வெளிவருகின்றன.

மயிலிட்டி மற்றும் தையிட்டியைச் சேர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தாமல் எங்களது சொந்தக் காணிகளில் குடியமர்ந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அறிகிறோம். அதற்கு நாம் ஒரு போதும் இடமளிக்கமாட்டோம்.

அந்த மக்களும் மீள்குடியமர்த்தப்பட வேண்டும்தான். ஆனால் அவர்கள் அவர்களது சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும். நாங்கள் எங்கள் சொந்த இடங்களில் குடியமர்த்தப்பட வேண்டும். எங்களது சொந்த இடங்களில் மீளக்குடியமர்த்த தயார் எனின் இப்போதே நாங்கள் மீளக்குடியமர்வுக்கு வருவதற்கும் தயாராக இருக்கின்றோம்" என்று தெரிவித்துள்ளனர்.

அத்துடன் தமது காணிகளின் உறுதி ஆவணங்களையும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் அவர்கள் கையளித்தனர். (ங-5)

# அமெரிக்காவுக்கு பணிந்தது அரசு

அமெரிக்கா விடுத்த கடுமையான எச்சரிக்கைக்கு பணிந்து ஈரானிடம் இரகசியமாக எண்ணெய் கொள்வனவு செய்வதை இலங்கை அரசு நிறுத்தியுள்ளது. இதனால், ஈரானிய எண்ணெயை மட்டும் சுத்திகரிக்கும் வசதியைக் கொண்டுள்ள, சபுகஸ்கந்த எரிபொருள் சுத்திகரிப்பு ஆலை மூடப்பட்டுள்ளதுடன், இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்ற அச்சமும் எழுந்துள்ளது.

ஈரான் மீது அமெரிக்கா விதித்துள்ள தடைகளை மீறும் வகையில், மூன்றாவது தரப்பு ஊடாக, ஈரானிய எண்ணெயை இலங்கை அரசு கொள்வனவு செய்து வந்தது. இதுபற்றிய புலனாய்வுத்தகவல் அமெரிக்காவுக்கு கிடைத்ததை அடுத்து, அண்மையில் இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் மிச்சேல் ஜே சிசன் அலரி மாளிகையில், இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கடுமையான எச்சரிக்கை விடுக்கும் இராஜாங்கத் திணைக்களத்தின் செய்தியைக் கையளித்திருந்தார்.

ஈரானிடம் இருந்து எண்ணெய் கொள்வனவு செய்வதை இலங்கை அரசு நிறுத்திக்கொள்ளாவிடின் கடுமையான விளைவுகளைச் சந்திக்க நேரிடும் என்று அமெரிக்க இராஜாங்கத் திணைக்களம் எச்சரிக்கை விடுத்திருந்தது.

இதையடுத்து, கடந்த மாதம் 19 ஆம் மற்றும் 27 ஆம் திகதிகளில் இலங் கைக்குப் புறப்படவிருந்த இரண்டு எண்ணெய்க் கப்பல்களை இலங்கை நிராகரித்துள்ளது.

ஈரானிய எண்ணெய் ஏற்றப்பட்டிருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரிலேயே இவை நிறுத்தப்பட்டதாக இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைத்துவப் பணிப்பாளர் சுசந்த சில்வா தெரிவித்துள்ளார்.

சபுகஸ்கந்த சுத்திகரிப்பு ஆலை மூடப்படுவதால், இலங்கையில் எரிபொருள் தட்டுப்பாடு ஏற்படலாம் என்று அச்சம் எழுந்துள்ள போதிலும் அதை சுசந்த சில்வா நிராகரித்துள்ளார்.

இதனிடையே, சுத்திகரிக்கப்பட்ட எரிபொருளை வெளிநாடுகளில் இருந்து அவசரமாகப் பெற்றுக் கொள்வதற்கு இலங்கை அரசு அவசர நடவடிக்கைகளில் இறங்கியுள்ளது எனவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# தொடர்கிறது மீனவர் வேலை நிறுத்தம்

இராமஸ்வேரம், நவ.11

இலங்கை சிறையில் உள்ள தமிழக மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கக் கோரி இராமேஸ்வரம் பகுதி மீனவர்களின் வேலை நிறுத்தம் நேற்று 5 ஆவது நாளாகவும் தொடர்கின்றது. இதனால் 800 விசைப் படகுகள் கடலோரம் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. இந்த வேலை நிறுத்தத்தால் 10 ஆயிரம் பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இராமேஸ்வரம், ஜெகதாப் பட்டினம் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 30 மீனவர்களையும், 7 விசைப் படகுகளையும் இலங்கைக் கடற்படையினர் சிறைப் பிடித்தனர். மீனவர்களைக் கைது செய்த இலங்கை கடற்படையினர் வழக்குப் பதிவுக்குப் பின்னர் சிறையில் அடைத்துள்ளனர். இதேபோன்று நாகைப் பகுதியில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற மீனவர்களும் கைது செய்யப்பட்டுள்ளனர். அவர்களை விடுவிக்க மீனவர்களின் உறவினர்களும் மீனவ அமைப்புகளும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இராமேஸ்வரத்தில் 5 ஆவது நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபட்டுள்ள மீனவர்கள், நாளை முதல் உண்ணா விரதம் இருக்கப் போவதாக தெரிவித்துள்ளனர். (வ)

## காய்ச்சலால் பீடிக்கப்பட்டவர் சாவு

ஐந்து நாள்கள் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்த சரசாலை தெற்கைச் சேர்ந்த கந்தசாமி வள்ளிப்பிள்ளை (வயது 70) என்ற வயோதிபப் பெண்மணி உயிரிழந்துள்ளார்.

தொடர் காய்ச்சலால் பீடிக்கப்பட்ட இவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியிருந்தார். எனினும் காய்ச்சல் மாறாததால் வீட்டு வைத்தியத்தில் ஈடுபட்டுள்ளார். இதனால் உடல் நிலை மோசமடைய மீண்டும் சாவகச்சேரி மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

அங்கிருந்து யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றுவதற்காக அம்புலன்ஸில் ஏற்றப்பட்ட வேளையில் அவர் உயிரிழந்தார். (ஜ-9-10)


## பிள்ளையார் மெடிக்கல் கிளினிக் - ஆவரங்கால்
## நடமாடும் வைத்திய சேவை - உதவியாளர்கள் தேவை

வீடுகளில் தங்கியிருக்கும் வயோதிபர்கள் மற்றும் நோயாளர்களின் குருதிப் பரிசோதனை, நீரிழிவு நோய்கான சலம் மற்றும் இரத்த பரிசோதனை உள்ளிட்ட நடமாடும் வைத்திய சேவைக்கு உதவியாளர்கள்(Medical Field Officers, தேவை. G.C.E. O/L சித்தி. சுயவிவரம் கொண்ட விண்ணப்பம் (16.11.2013) சனிக்கிழமைக்கு முன்னர் அனுப்பவும் சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.

தொடர்பு :-பிள்ளையார் மெடிக்கல் கிளினிக்
பருத்தித்துறை பிரதான வீதி, ஆவரங்கால் - புத்தூர்
0777789317
C/12233


# போரில் உயிர்நீத்த உறவுகளுக்காக நவ.27 இல் வீடுகளில் மரக்கன்றுகளை நடுக

## மீன்பிடி அமைச்சர் டெனீஸ்வரன் வேண்டுகோள்

யாழ்ப்பாணம், நவ.11

போரில் உயிர் நீத்த உறவுகளுக்காக எதிர்வரும் 27 ஆம் திகதி ஒவ்வொருவரும் தங்களது வீடுகளில் மரக் கன்றுகளை நடுமாறு வட மாகாண மீன்பிடி, போக்குவரத்து, வர்த்தக வாணிபம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சர் பா.டெனீஸ்வரன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார், நானாட்டான் பிரதேச கிராம, மாதர் கிராம அபிவிருத்திச் சங்கங்களின் சமாசத்தால் நடத்தப்பட்ட மாணவர்கள் கௌரவிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் சனிக்கிழமை செம்மண் தீவு முருங்கனில் உள்ள சமா சக் கட்டடத்தில் இடம்பெற்றது.

நிகழ்வுக்கு முதன்மை விருந்தினர்களாக வட மாகாண மீன்பிடி அமைச்சர் பா.டெனீஸ்வரன் மற்றும் கல்வி, கலாசார, பண்பாட்டு, விளையாட்டு இளைஞர் விவகார அமைச்சர் த.குருகுலராஜா ஆகியோர் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வில் உரையாற்றிய அமைச்சர் பா.டெனீஸ்வரன், மாணவர்களுக்கு கல்வி என்பது இன்றியமையாததொன்று. வறுமையால் எந்தவொரு பிள்ளையும் கல்வியை இழக்கக் கூடாது. இவ்வாறான கௌரவிப்புகள் மாணவர்களின் கல்வி ஆர்வத்தை மேன் மேலும் வளர்க்க உதவும். எனவே இந்த முயற்சியை மேற்கொண்ட சமாசத்தினருக்கு விசேட பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அத்துடன் மாணவர்கள் மற்றும் பெற்றோர்கள் ஆசிரியர்களை மதித்து நடக்கவேண்டும் - என்றார்.

நிகழ்வில் நானாட்டான் பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட பகுதிகளில் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கும், தேசிய மட்ட விளையாட்டுப்போட்டியில் நீளம் பாய்தலில் 2 ஆம் இடத்தை பெற்ற மாணவனுக்கும், பல்கலைக்கழக அனுமதி பெற்ற மாணவர்களுக்கும் விசேட பரிசில்களும் நிதி உதவிகளும் பாராட்டுக்களும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டன.

சமாசத்தால் புதிதாக அமைக்கப்பட்ட அரைக்கும் ஆலையும் அமைச்சர்களால் திறந்து வைக்கப்பட்டதோடு, நானாட்டான் பிரதேச செயலாளரால், சமாசத்துக்கு புதிய தையல் இயந்திரங்களும் வழங்கப்பட்டன. (வ- 5)

# மரண அறிவித்தல்

## திருமதி மகேஸ்வரி குகநாகராஜா



சூராவத்தை சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி குகநாகராஜா (சொக்கம்மா) நேற்று (10.11.2013) ஞாயிற்க்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - அன்னப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சரவணமுத்து நல்லபிள் ளை தம்பதியரின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற குகநாகராஜா வின் (ஓய்வுபெற்ற தபா லதிபர்) அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான நாகேஸ்வரி, புவனேந்திரன் மற்றும் கமலேஸ்வரி, திலகவதி, நவராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற முத்துக்குமாரு மற்றும் குணேஸ்வரி, காலஞ்சென்ற திருநாவுக்கரசுநாயகம் மற்றும் ராஜரட்ணம், குமாரசாமி, காலஞ்சென்ற நவமணி மற்றும் சிவபாக்கியம், மகேஸ்வரி, பாலசுப்பிரமணியம், பத்மாவதி, திலகவதி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஜெகன்மோகன் (பிரான்ஸ்), ஜெகரூபன் (சுவிஸ்), சுபாகரன் (QUANTITY SURVEYOR BAHRIN) , வனித்தா (கனடா), சுஜாதா (பிரான்ஸ்), விஜிதா (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தாயும், பாலராணி, கமலேஸ்வரி, சுகந்தி (சிரேஷ்ட விரிவுரையாளர், உயர் தொழில்நுட்ப நிறுவனம்- தெஹிவளை), யோகரட்ணராஜா, சஞ்சயன், சர்வானந்தன் ஆகியோரின் அன்பு மாமியும், தீபிகா, தர்சன், ஜெகதாரணி, ஜெகார்த்தன், ஆரண்யா, ஹிரண்யா, சஞ்சிதா, அக்ஷயா, துவாரகா, தனுசிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியகைள் நாளை(12.11.2013) செவ்வாய்க்கிழமை பி.ப. 12.30 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கொத்தியாலடி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற் றுக் கொள்ளவும்.

திரு.ம. ஸ்ரீகிருஸ்ணகுமார்
(அண்ணன்) சூராவத்தை,
சுன்னாகம்.

தகவல்:
(12234.14.17) குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணக் கல்விநிலை முதன்மை பெற வேண்டும்

## வடக்கு கல்வி அமைச்சர் கருத்து

யாழ்ப்பாணம், நவ.11
கடந்த காலங்களில் கல்வியின் மேன்மையைப் பறைசாற்றிக் கொண்டிருந்த யாழ்ப்பாணத்தின் கல்வி நிலை இன்று வீழ்ச்சியடைந்துள்ளதாக பலரும் ஒப்புக் கொள்கின்றனர். இந்த நிலைமை மாற்றமடைய வேண்டும். ஆசிரியர்கள் தமது பணி அர்ப்பணிப்புடனானது என்பதைக் கருத்தில்கொள்ள வேண்டும் என்று வடக்கு மாகாண கல்வி அமைச்சர் ரி.குருகுலராஜா தெரிவித்தார்.



யாழ். புனித ஜோண் பொஸ்கோ வித்தியாலயத்தின் பரிசளிப்பு விழாவும் சாதனையாளர்களுக்கான கௌரவிப்பு நிகழ்வும் வித்தியாலய அதிபர் அருட் செல்வி ஜீவந்தி தலைமையில் கடந்த வியாழக்கிழமை வித்தியாலய அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட மாகாணக் கல்வி அமைச்சர் உரையாற்றுகையிலேயே மேற்கண்டவாறு கூறினார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

ஆசிரியர் நியமனம் பெற்றவுடன் இடமாற்றம், அதையடுத்து சம்பள உயர்வு போன்ற விடயங்களிலேயே அக்கறை காண்பிக்கப்படுகின்றது. இந்த நிலைமைகளில் மாற்றம் தேவை. பல தரப்பட்ட விடயங்களைக் கடந்து எம்மை நாமே வழி நடத்த ஒரு அமைப்பை ஏற்றுக் கொண்டுள்ளோம். வடமாகாணத் தமிழ் மக்களின் வாழ்வுக்கான விடிவெள்ளியாக அமைந்துள்ள மாகாண சபையின் கல்வி அமைச்சராகும் வாய்ப்பு எனக்குக் கிடைத்துள்ளது.

கடந்த காலங்களில் இங்கு விளையாட்டுத் துறையும் சிறந்து விளங்கியது. தற்போது அதன் நிலையும் தளர்வடைந்துள்ளது. வீட்டுக்கு வெளியே விளையாட நண்பர்களுடன் சேர அனுமதி வழங்கப்படுவதில்லை. இதனால் மாணவர்களின் ஆற்றல் மட்டுப்படுத்தப்படுகிறது. தனி மனித ஆற்றலும் சிந்தனையும் வளப்படுத்தப்பட வேண்டும். கல்விக் கொள்கை மாற்றப்பட வேண்டும். தற்போது தகவல்கள் எல்லைப் பகுதிகளுக்கும் விரைந்து கிடைக்கின்றன. எமது மாகாணம் முன்னைய காலங்களைப் போன்று பல துறைகளிலும் சாதனை படைக்க வேண்டும். இந்தப் பாடசாலையில் எமது பிள்ளைகள் படிப்பதற்கு இடம் கிடைக்காதா என்று பெற்றோர் ஏங்கும் நிலைக்கு புனித பொஸ்கோ வித்தியாலயம் சாதனை மிகுந்ததாக உள்ளது.

அதிபரும், ஆசிரியர்களும் சேவைத்திறன் கொண்டவர்களாக மாணவர்களின் கல்வியில் மிகுந்த அக்கறை கொண்டவர்களாக இருப்பதைக் காண மகிழ்ச்சியாக உள்ளது- என்றார். (வ-7)

## சிறுவர் செயலகம் இன்று திறப்பு

யாழ்ப்பாணம், நவ.11
நல்லூர் பிரதேச செயலகத்தின் சிறுவர் செயலகம் இன்று திங்கட்கிழமை காலை 9 மணிக்கு திறந்து வைக்கப்படவுள்ளது.

சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகார அமைச்சர் திஸ்ஸ கரலியத்த சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா ஆகியோர் இதனைத் திறந்து வைக்கவுள்ளனர்.

இதன்போது பெண்கள் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் தொடர்பான டிப்ளோமா கற்கை நெறியும் ஆரம்பித்து வைக்கப்படும்.

நிகழ்வில் அமைச்சுக்களின் செயலாளர்களும் கலந்து கொள்வர்.

இந்த நிகழ்வுக்கு அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, வடக்கு மாகாண முதல்வர் க.வி. விக்னேஸ்வரன் மற்றும் அமைச்சர்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (வ-7)

## அபராதம்

வலி.வடக்கு, நவ.11
தீபாவளி தினத்தன்று சட்டவிரோதமாக சாராயத்தை விற்பனைக்காக வைத்திருந்த பண்டத்தரிப்பைச் சேர்ந்த நபருக்கு மல்லாகம் நீதிமன்றத்தால் பத்தாயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

அனுமதிப்பத்திரம் இன்றி மதுபானம் விற்பனை செய்வதாகக் கிடைத்த முறைப்பாட்டின் அடிப்படையில் இளவாலைப் பொலிஸார் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின் போது குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

## இடமாற்றம்

தென்மராட்சி, நவ.11
தென்மராட்சி பிரதேச மீசாலை வடக்குப் பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றிய எஸ்.உலகநாதன் சாவகச்சேரி வடக்கு பிரிவுக்கும், இராமாவில் பிரிவு கிராம அலுவலராகக் கடமையாற்றிய திருமதி இ.ரஜிதா மீசாலை வடக்குப் பிரிவுக்கும் இராமாவில் பிரிவுக்கு க.குனேஸ்வரனும் உள்ளக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். (ஓ-9)



மக்கள் பாவனைக்காக பருத்தித்துறை துறைமுக வீதி நேற்று முன்தினம் கையளிக்கப்பட்டது. குறித்த வீதியை 521 ஆவது படைத்தளபதி கேணல் டிக்கிரி திஸநாயக, படைத்தளபதி சுஜீவ புத்திதாஸ, நகர சபைத் தலைவர் சபா.ரவீந்திரன், பருத்தித்துறை பிரதேச செயலர் இ.த. ஜெயசீலன் ஆகியோர் நாடாவை வெட்டித்திறந்து வைத்தனர். (வ-51)

## ஆலயத்தில் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.11
ஆலயத்தில் அத்துமீறி நுழைந்து திருட முற்பட்டமை தொடர்பில் சந்தேகத்தின்பேரில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இளவாலை பாணாவெட்டி புவனேஸ்வரி அம்மன் ஆலயத்தில் கடந்த 4 ஆம் திகதி இனம் தெரியாதோர் அத்துமீறி நுழைந்து களவெடுக்க முற்பட்டுள்ளனர்.

இது தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டதையடுத்து உயரப்புலம் இளவாலைப் பகுதியைச் சேர்ந்த இருவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேகநபர்கள் எதிர்வரும் 20 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். (வ-14)

## தென்மராட்சி இலக்கிய அணியின் பாரதி விழா

தென்மராட்சி,நவ. 11
தென்மராட்சி இலக்கிய அணியின் பாரதி விழா காலை நிகழ்வு நேற்று சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. கல்லூரி பிரதி அதிபர் ந.பாலச்சந்திரன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் வரவேற்புரையை மருத்துவர் எஸ். எஸ். அருளானந்தம் நிகழ்த்தினார்.

அணியின் உறுப்பினர் அமரர் சிதம்பரப்பிள்ளை கலாநிதிக்கு நினைவஞ்சலி செலுத்தப்பட்டது. நினைவுரையை யாழ்.பல்கலைக்கழக பௌதீகத்துறை பேராசிரியர் க.கந்தசாமி நிகழ்த்தினார்.

அணியின் செயலாளர் அ.வாசுதேவாவினால் கவி யஞ்சலி வழங்கப்பட்டது.

'பாரதியை பயில்வோம்' நூல் வெளியீடும் இடம்பெற்றது.

முதற்பிரதியை சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரி அதிபர் க.அருந்தவபாலன் பெற்றுக் கொண்டார். (வ-9)

## மீள் எழுச்சித் திட்டத்தில் தீபாவளிப் பண்டிகை நிகழ்வுகள்

பொருளாதார அபிவிருத்தி அமைச்சின் மீள் எழுச்சித் திட்டத்தில் நடத்தப்பட்ட தீபாவளிப் பண்டிகை நிகழ்வுகள் கடந்த 2ஆம் திகதி பன்னாலை சனசமூக நிலையத்தில் இடம்பெற்றன.

நிகழ்வில் சிறுவர், பெரியோருக்கான மரதன் ஓட்டம், இசைக் கதிரை, முதியோர் நிகழ்வுகள், கயிறு இழுத்தல் ஆகிய விளையாட்டு நிகழ்வுகள் இடம்பெற்றன. நிகழ்வில் சிறுவர் நலன் மேம்பாட்டு அலுவலகத்தின் நிதிப் பங்களிப்புடனும் மற்றும் வேலாயுதம் சுப்பிரமணியம் என்பவரின் நிதிப் பங்களிப்புடனும் அமைக்கப்பட்ட பன்னாலைகணேசா முன்பள்ளி மாணவர்களுக்கான விளையாட்டு உபகரண அமைவிடமும் திறந்து வைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கலந்து கொண்ட பன்னாலை கிராம அலுவலர் திருமதி மாலாதேவி மதிவதனன் பரிசில்களை வழங்கிக் கௌரவித்தார். (வ-14)

## 20 லட்சத்து 80 ஆயிரம் ரூபாவுக்கு காசோலை மோசடிகள்

### குடாநாட்டில் கடந்த வாரம் மட்டும்: பொலிஸார் தகவல்

யாழ்ப்பாணம், நவ.11
குடாநாட்டில் கடந்த வாரம் 20 லட்சத்து 80 ஆயிரம் பெறுமதியான காசோலை மோசடி இடம்பெற்றுள்ளதாக யாழ்ப்பாணம் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தக் காசோலை மோசடிச் சம்பவங்கள் யாழ்ப்பாணம், கொக்குவில், வல்வெட்டித்துறை, அச்சுவேலி ஆகிய பிரதேசங்களில் இடம்பெற்றுள்ளன.

அவற்றில் கடந்த மாதம் 31 ஆம் திகதி மார்ட்டீன் வீதி யாழ்ப்பாணம் பகுதியில் சுன்னாகம் பகுதியைச் சேர்ந்தவர் 4 லட்சத்து 50 ஆயிரம் பெறுமதியான காசோலையைக் கொடுத்து மோசடி செய்துள்ளார்.

சந்தேகநபர் கைது செய்யப்பட்டு 10 ஆயிரம் ரூபா ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த 3 ஆம் திகதி கொக்குவில் அம்மன் பகுதியைச் சேர்ந்த நபருக்கு 3 லட்சத்து 30 ஆயிரம் ரூபா பெறுமதியான காசோலையை முத்துத் தம்பி வீதி, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நபர் கொடுத்து மோசடி செய்துள்ளார். சந்தேகநபர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு 10 ஆயிரம் ரூபா பெறுமதியான ஆள்பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார்.

கடந்த மாதம் 23 ஆம் திகதி வல்வெட்டித்துறை பகுதியைச் சேர்ந்த நபருக்கு அந்தப் பகுதியைச் சேர்ந்த இன்னொரு நபர் 6 லட்சம் பெறுமதியான காசோலையைக் கொடுத்து மோசடி செய்துள்ளார்.

சந்தேகநபர் கடந்த மாதம் 31 ஆம் திகதி கைது செய்யப் பட்டு எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

கடந்த ஏப்ரல் மாதம் முதலாம் திகதி புன்னாலைக்கட்டுவன் கிழக்கு பகுதியைச் சேர்ந்த நபருக்கு 7 லட்சம் பெறுமதியான காசோலையை புத்தூர் பகுதியைச் சேர்ந்த நபர் கொடுத்து மோசடி செய்துள்ளார். சந்தேகநபர் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

காசோலை மோசடிகள் வியாபார நோக்கத்துக்காகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன எனவும் பொலிஸார் தெரிவித்தனர். (வ-14-86)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இந்தியாவுக்கு 9 நாள் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பிரிட்டிஷ் இளவரசர் சார்லஸ் 2008ஆம் ஆண்டு மும்பையில் இடம்பெற்ற குண்டுவெடிப்பில் உயிரிழந்தவர்களின் நினைவுத் தூபிக்குச் சென்று அஞ்சலி செலுத்தினார்.

# பிரதமராகார் மோடி

## கர்நாடக முதலமைச்சர் ஆருடம்

தேனி, நவ.11
குஜராத் முதலமைச்சர் நரேந்திர மோடி எந்தக் காலகட்டத்திலும் பிரதமராக முடியாது என்று தெரிவித்துள்ளார் கர்நாடக முதலமைச்சர் சித்தராமையா. காங்கிரஸ் கட்சி சார்பில் தேனி மாவட்டத்தில் நடைபெற்ற பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் உரையாற்றும்போது, "மோடிக்கு மக்கள் செல்வாக்கு ஏதும் இல்லை. அதிகப்படியான விளம்பரங்கள் மூலம் மோடி பிரதமர் பதவிக்கு கனவு காண்கின்றார். தமிழகத்தில் பாரதிய ஜனதா கட்சிக்கு ஒரு இடம் கூட கிடைக்காது" என்று தெரிவித்துள்ளார். (ற)

# நாட்டு மக்களை பா.ஜ.க. தவறாக வழிநடத்துகிறது

## குற்றஞ்சாட்டுகின்றார் மன்மோகன் சிங்

புதுடில்லி, நவ.11
மதச் சார்பின்மை என்ற பெயரில் நாட்டு மக்களை பாரதிய ஜனதா கட்சி தவறாக வழி நடத்தி வருகின்றது என்று குற்றஞ்சாட்டியுள்ளார் இந்தியப் பிரதமர் மன்மோகன்சிங்.

சட்டப்பேரவைத் தேர்தல் நடைபெறவுள்ள சத்தீஸ்கர் மாநிலத்தில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அங்கு அவர் மேலும் கூறும்போது,

"சத்தமாகவும் பெரிய அளவிலும் பேசுவதால் மட்டும் பாரதிய ஜனதாவால் ஆட்சிக்கு வந்துவிட முடியாது. பாரதிய ஜனதா கட்சியினர் போன்று மலிவான அரசியலில் ஈடுபட காங்கிரஸ் கட்சியினருக்கு தெரியாது. பாரதிய ஜனதா கட்சி ஆளும் சத்தீஸ்கர் மாநிலத்திற்கு நக்சலைட்டுகளை ஒடுக்க மத்திய அரசு நிதி அளித்து வருகின்றது.



ஆனால் அதனை மாநில அரசு முறையாக பயன்படுத்தவில்லை." என்று தெரிவித்துள்ளார்.(ற)

# சட்டத்தை மீறி பேசவில்லை

## ராகுல் மறுப்பு

புதுடில்லி, நவ.11
ராஜஸ்தான் மற்றும் மத்திய பிரதேச மாநிலங்களில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில் தேர்தல் நடத்தை விதிமுறைகளை மீறி எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்று கூறியுள்ளார் காங்கிரஸ் கட்சியின் துணைத் தலைவர் ராகுல்காந்தி.

அண்மையில் மத்திய பிரதேசம் மற்றும் ராஜஸ்தான் மாநிலங்களில் நடந்த தேர்தல் பரப்புரைக் கூட்டங்களில், "பா.ஜ.க. வன்முறைகளைத் தூண்டி விடுகின்றது. உத்தரப் பிரதேசத்தில் ஏற்பட்ட மதக் கலவரத்தால் பாதிக்கப்பட்ட முஸ்லிம் இளைஞர்களை பாகிஸ்தானின் உளவு அமைப்பான ஐ.எஸ்.ஐ. தொடர்பு கொண்டு பேசியது" என்று கருத்துத் தெரிவித்திருந்தார்.

அவரின் இந்தக் கருத்துக்களுக்குக் கடும் எதிர்ப்புகள் கிளம்பியிருந்தனர். இது குறித்து பா.ஜ.க. இந்தியத் தேர்தல் ஆணையத்திடம் முறைப்பாடு செய்ததது. அதையடுத்து குறித்த கருத்துகள் தொடர்பான விளக்கத்தைத் தருமாறு ராகுல் காந்தியிடம் கோரியிருந்தது தேர்தல் ஆணையம்.

அதுகுறித்து விளக்கமளித்துள்ள ராகுல் காந்தி, "நான் தேர்தல் விதிமுறைகளை மீறி எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அந்த விடயம் குறித்து திரிவுபடுத்தப்பட்ட கருத்துக்கள் உருவாக்கப்பட்டுள்ளன" என்று தெரிவித்துள்ளார். (ற)



# ஒப்பாரிப் போராட்டம்

## பொதுநலவாய மாநாட்டில் பங்கேற்கும் இந்திய மத்திய அரசுக்கு எதிராக

புதுடில்லி, நவ.11
இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா பங்குகொள்வதற்கு எதிர்ப்புத் தெரிவித்து ஒப்பாரிப் போராட்டம் நடத்தப்படவுள்ளது என்று அறிவித்துள்ளது தமிழக வாழ்வுரிமை கட்சி.

அந்தக் கட்சியின் நிறுவுநர் பண்ருட்டி வேல்முருகன் இதுகுறித்து வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது:

"இலங்கையில் நடந்த போர் குற்றம் குறித்து விசாரணை நடத்தி இலங்கை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவைத் தண்டிக்க வேண்டும் என்று வலியுறுத்தி தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக பல போராட்டங்கள் நடத்தி உள்ளோம்.



தற்போது இலங்கையில் நடைபெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியா சார்பாக யாரும் பங்கேற்கக்கூடாது என்று தமிழகத்தில் உள்ள அனைத்து கட்சிகளும் வற்புறுத்தி வந்தன. அதை மத்திய அரசு கண்டுகொள்ளாமல் அயலுறவுத் துறை அமைச்சர் சல்மான் குர்ஷித் மாநாட்டில் கலந்துகொள்வார் என அறிவித்துள்ளது.

மத்திய அரசை கண்டித்து தமிழக வாழ்வுரிமை கட்சி சார்பாக தமிழ்நாடு முழுவதும் நாளை ரயில் மறியல் போராட்டம் நடத்தப்படும். அத்துடன் சென்னையில் பெண்கள் திரண்டு ஒப்பாரி போராட்டமும் நடத்துவார்கள்" என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற)

# காங்கிரஸை மிரட்டும் வி.கே.சிங்கின் புத்தகம்

புதுடில்லி, நவ.11
இந்திய இராணுவத்தின் முன்னாள் தளபதி வி.கே. சிங் எழுதியுள்ள புத்தகத்தால் பெரும் பீதியடைந்துள்ளதாம் காங்கிரஸ் கட்சி. 'கரேஜ் அண்ட் கன்விக்ஷன்ஸ்' என்ற அந்தப் புத்தகத்தில் பொற்கோவில் தாக்குதல், இலங்கைக்கு இந்திய அமைதிப்படை சென்றது, தாத்ரா வாகன ஊழல் போன்ற விவகாரங்கள் குறித்து விவரித்துள்ளார் வி.கே.சிங்.

இராணுவத் தளபதியாக இருந்தபோதே, அரசுக்கு எதிராக நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து பரபரப்பை ஏற்படுத்தியவர், வி.கே.சிங்.

அவரின் வயது தொடர்பான சர்ச்சையின் போது மத்திய, காங்கிரஸ் கூட்டணி அரசு மீது அதிருப்தி அடைந்திருந்த சிங் தனது பணி ஓய்வுக்குப் பின்னர் சமூக ஆர்வலர், அன்னா ஹசாரேயின், ஊழலுக்கு எதிரான இந்தியா அமைப்பில் பங்கேற்று வருகிறார்.

அவர் தற்போது 'கரேஜ் அண்ட் கன்விக் ஷன்ஸ்' என்ற பெயரில், ஆங்கிலத்தில் புத்தகம் ஒன்றை எழுதியுள்ளார்.

அதில் 1984ஆம் ஆண்டு நடைபெற்ற, பொற்கோவில் தாக்குதல், 1987 ஆம் ஆண்டு விடுதலைப் புலிகளுக்கு எதிராக இலங்கைக்கு அனுப்பப்பட்ட இந்திய அமைதி காப்பு படை, முன்னாள் இராணுவ தளபதி ஜே.ஜே. சிங்குடனான உறவு போன்ற பல விடயங்களை எழுதியுள்ளார்.

அத்துடன் தன் வயது சர்ச்சையில், மத்திய அரசு செயற்பட்ட விதம், இராணுவ அதிகாரிகளின் வஞ்சனை, இராணுவத்திற்கு தாத்ரா வாகனங்கள் வாங்கியதில் நடைபெற்ற முறைகேடுகளுக்கு, காரணம் போன்றவற்றையும் விவரித்துள்ளார். அதனால் அந்தப் புத்தகம் நிச்சயம் பல சர்ச்சைகளை ஏற்படுத்தும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடாளுமன்றத் தேர்தல் நெருங்கும் காலப்பகுதியில் புத்தகத்தில் எழுதப்பட்டுள்ள விவரங்கள், தங்கள், நற்பெயரை சீர்குலைக்கும் என்ற பீதி அடைந்துள்ளனர் காங்கிரஸ் கட்சியினர். (ற)



உலகின் பிரபல சுற்றுலா தலங்களை வரிசைப்படுத்தும் 'லோன்லி பிளானட்' என்ற சுற்றுலா வழிகாட்டி பிரசுர நிறுவனம் குடும்பத்தினரோடு விடுமுறையை கழிக்க உலகின் தலைசிறந்த 10 இடங்களை பட்டியலிட்டுள்ளது. இந்த பட்டியலில் நியூயோர்க், டென்மார்க், பிரகுவே, ஐஸ்லாந்து, இத்தாலி, ஹவாய் தீவுகளுக்கு அடுத்தபடியாக கேரள மாநிலமும் இடம் பெற்றுள்ளது. பசுமையான இயற்கை சூழலில் அழகிய கடற்கரைகள், நீர் நிலைகள், தேசிய பூங்காக்கள், யானை காப்பகங்கள் போன்றவை இங்கு உள்ளன.

# தீவிரவாதத்துக்கு மறைமுக ஆதரவு

## அரசியல் கட்சிகளை குற்றஞ்சாட்டுகின்றார் பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கயா நாயுடு

ஹைதராபாத், நவ.11
தீவிரவாதிகளுக்கு சில அரசியல் கட்சிகள் மறைமுக ஆதரவு தெரிவித்து வருகின்றன என்று குற்றஞ்சாட்டியுள்ளார் பா.ஜ.க. மூத்த தலைவர் வெங்கையா நாயுடு.

"தீவிரவாதிகளுக்கு எதிரான நடவடிக்கையில் மத்திய அரசுக்கு தெளிவான கொள்கை இல்லை. அதனால்தான் நாட்டுக்கு அச்சுறுத்தல் ஏற்படுகிறது. அதேபோல் வெளிநாட்டு கொள்கையிலும் தெளிவு இல்லாததால்தான் பொதுநலவாய மாநாடு குறித்து பிரதமர் பங்கேற்பது பற்றி உறுதியான முடிவை எடுக்க முடியவில்லை.

மோடி ஒரு முறை பதவிக்கு வந்தால் தீவிரவாதிகளை இரும்புக் கரம் கொண்டு ஒடுக்குவார் என்பதால் மோடி பிரதமராவதை அவர்கள் விரும்பவில்லை. இங்குள்ள சில அரசியல் கட்சிகளும் அரசியல் காரணங்களுக்காக அவர்களுக்கு ஆதரவு தருகின்றன." என்று தெரிவித்துள்ளார். (ற)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 10,000 பேர் சாவு

## பிலிப்பைன்ஸை உலுக்கியது 'ஹையான்' சூறாவளி

லண்டன், நவ.11
பிலிப்பைன்ஸைத் தாக்கிய 'ஹையான்' சூறாவளியால் 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் கூறுகின்றன.
பிலிப்பைன்ஸின் மத்திய தீவான சமரில் கடந்த வெள்ளிக்கிழமை அதிகாலை 4.40 மணிக்கு தனது வேகத்தைக் காட்டத் தொடங்கியது 'ஹயான்'. அதையடுத்து அந்தப் பகுதி சின்னாபின்னாமாகிச் சிதறியது. மணிக்கு 315 கிலோமீற்றர் வேகத்தில் ...சிய காற்றுடன் பெரும் மழையும் சேர்ந்து கொண்டது. அத்துடன் அந்தப் பகுதியுடனான எல்லாதவிதத் தொடர்புகளும் அற்றுப் போயின.
"இந்த அனர்த்தால் மத்திய பிலிப்பைன்ஸ் பெரும் பாதிப்பைச் சந்தித்துள்ளது. அந்தப் பகுதியுடனான தொடர்புகள் எதுவும் தற்போது இல்லை. மீட்புக்குழுவினர் சென்றுள்ளனர். தற்போது எமக்குக் கிடைக்கும் தகவல்களின்படி 10 ஆயிரத்துக்கும் அதிகமானவர்கள் உயிரிழந்திருக்கக் கூடும் என்று அஞ்சுகின்றோம். பலரைக் காணவில்லை" என்று தெரிவித்துள்ளார் அந்நாட்டின் விமானப் போக்குவரத்து ஆணைய துணை இயக்குநர் ஜோன் அண்ட்ரூஸ்.
சூறாவளி காரணமாக சுமார் 7 இலட்சத்துக்கும் அதிகமானவர்கள் தமது வீடுகளை இழந்து தவித்து




வருகின்றனர் என்று கூறப்படுகின்றது. புயலை அடுத்து உணவுப் பொருள்களுக்குப் பெரும் தட்டுப்பாடு



புயலின் பின்னர் ஏராளமானவர்கள் காணாமற் போயுள்ளனர். அவர்களைத் தேடும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

நிலவிவரும் நிலையில் பொதுமக்கள் அங்காங்கு தப்பியிருக்கும் வணிக நிறுவனங்களை உடைத்துப் பொருள்களை எடுத்துச் செல்கின்றனர் என்றும் தெரியவருகின்றது.
புயலால் பாதிக்கப்பட்ட பகுதிகளுடனான தொலைத் தொடர்புகள் மற்றும் போக்குவரத்துகள் முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளன. அதனால் மீட்புப் பணிகளை ஒருங்கிணைப்பதில் மீட்புக் குழுவினர் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.
"அந்தப் பகுதியுடன் தொலைத்தொடர்புகள் அற்றுப்போயுள்ளன. கடும் மழை காரணமாக வெள்ளம் மற்றும் ஆங்காங்கே மண்சரிவுகள் ஏற்பட்டு போக்குவரத்தும் துண்டிக்கப்பட்டுள்ளது. அதனால் எமது பகுதியில் இருந்து மீட்புக் குழுவினர் குறித்த பகுதிகளுக்குச் செல்வதில் கடும் சிரமம் ஏற்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார் தெற்கு பிலிப்பைன்ஸின் ஆளுநர் ரோஜர் மெர்கெடோ.
அந்தப் பகுதியின் தற்போதைய நிலை குறித்துக் கருத்துத் தெரிவித்த அந்நாட்டின் பேரிடர் அனர்த்த முகாமைத்துவத் தலைவர் எட்வர்டோ டெல் ரோஸாரியோ,
"அந்தப் பகுதிகளுக்கு மீட்புப் பணியாளர்களுடன், அத்தியாவசியப் பொருள்களும் அனுப்பப்பட்டுள்ளன.
எமக்கு தற்போது கிடைத்துள்ள தகவல்களின் படி உயிரிழப்புகள் பெருமளவு ஏற்பட்டுள்ளன என்று தெரியவருகின்றது. தற்போதுள்ள நிலையில் எம்மால் சரியான தகவல்களைத் தரமுடியாதுள்ளது" என்று தெரிவித்துள்ளார். (ற)





கருமேகங்கள் சூழப்பட்டு பகல் கூட இரவுபோல் காட்சி அளிக்கிறது. இந்தத் தருணத்தில் கடவுளைப் பிராத்தித்துக் கொள்வதைத் தவிர எங்களுக்கு வேறு வழி தெரியவில்லை.

## வியட்நாமின் பக்கம் திரும்புகிறது ஹையான்

லண்டன், நவ.11
பிலிப்பைன்ஸைப் புரட்டிப் போட்ட ஹையான் புயல் தற்போது வியட்நாமை நெருங்கி வருவதால் அந்நாட்டில் ஆயிரக்கணக்கானோர் பாதுகாப்பான இடங்களுக்கு வெளியேற்றப்பட்டு வருகின்றனர்.
பதினொரு மாகாணங்களில் இருந்து சுமார் 9 லட்சம் பேர் பாதுகாப்பான இடங்களுக்கு கொண்டு செல்லப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள் என்று அந்த நாட்டு அதிகாரிகள் கூறியுள்ளனர். இவர்கள் தங்குவதற்கென 11 தற்காலிக முகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.
ஹையான்புயல்வலுவிழந்து விட்டதாக கூறப்படுகின்ற போதிலும் பலத்த காற்றுடன் கனமழை பெய்யும் என்று கூறப்படுகின்றது. பிலிப்பைன்ஸில் பெரும் அழிவுகளை 'ஹையான்' ஏற்படுத்தியிருந்த நிலையில் வியட்நாமில் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் முழுவீச்சில் எடுக்கப்பட்டு வருகின்றன. (ற)

## மாலைதீவில் மீண்டும் ஜனாதிபதித் தேர்தல்

மாலே, நவ.11
மாலைதீவில் இரண்டாவது முறையாக நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலிலும் எந்தக் கட்சிக்கும் பெரும்பான்மை வாக்குகள் கிடைக்கவில்லை. அதனால் அங்கு மீண்டும் தேர்தல் நடத்தப்படும் சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.



முன்னாள் ஜனாதிபதி முகமது நஷீத் 46.3 வீத வாக்குகளையும், அவரது போட்டியாளர் அப்துல்லா யாமீன் 30.3 வீத வாக்குகளையும் பெற்றனர். எந்த ஒரு வேட்பாளருக்கும் 50 சதவீத வாக்குகள் கிடைக்காததால், முதல் இரண்டு இடங்களை பிடித்த நஷீத் மற்றும் யாமீன் பங்கேற்கும் 2ஆவது சுற்று தேர்தல் நடைபெறவுள்ளது.
கடந்த செப்ரெம்பர் 9ஆம் திகதி நடைபெற்ற தேர்தலில் முறைகேடுகள் நிகழ்ந்ததாக எழுந்த குற்றச்சாட்டை அடுத்து மாலைதீவு உயர் நீதிமன்றம் அந்தத் தேர்தலை இரத்து செய்தது. இடைக்கால ஜனாதிபதி முஹமது வாஹித்தின் பதவிக்காலம் இன்றுடன் முடிவடையவுள்ள நிலையில், அடுத்த அதிபர் யார் என்பதில் குழப்பம் நீடிக்கிறது. (ற)

## ஜப்பானில் நிலநடுக்கம்

ரோக்கியோ, நவ.11
ஜப்பானில் நேற்று ஏற்பட்ட நிலநடுக்கத்தால் தலைநகர் ரோக்கியோ குலுங்கியது. ரிச்டர் அளவுகோலில் 5.5 ஆகப் பதிவான இந்த நிலநடுக்கம், இபராகி மாகாணத்தில் 59 கிலோமீற்றர் ஆழத்தில் உருவாகியுள்ளது. ரோக்கியோவில் உள்ள கட்டடங்கள் அதிர்ந்ததால் மக்கள் வீடுகளை விட்டு வெளியேறி சாலைகளில் தஞ்சமடைந்தனர்.
30 வினாடிகளுக்கு மேல் நீடித்த இந்த நிலநடுக்கத்தால் அதிவிரைவு ரயில்கள் ஆங்காங்கே நடுவழியில் நிறுத்தப்பட்டன.
அதேவேளை நிலநடுக்கம் காரணமாக புகுஷிமா அணு உலைகள் குலுங்கின என்றும் அதனால் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனவும் ஜப்பான் அரசு தெரிவித்துள்ளது. (ற)

## ஹமாஸின் பெண் செய்தித் தொடர்பாளர்

லண்டன், நவ.11
பலஸ்தீனத்தின் காஸா பகுதியை கட்டுப்பாட்டில் வைத்திருக்கும் ஹமாஸ் இயக்கத்தின் செய்தித் தொடர்பாளராக இஸ்ரா ஆல்-முடல் ...ால் என்ற பெண் நியமிக்கப்பட்டுள்ளார். ஹமாஸ் இயக்கத்தின் முதல் பெண் செய்தித் தொடர்பாளர் இவர் தான். ஹமாஸ் அமைப்பின் மீதான பிம்பத்தை சரி செய்யவே ஆங்கிலம் பேசும் இஸ்ரா, செய்தித் தொடர்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார் என்று கூறப்படுகிறது. (ற)

## பிரான்ஸில் குண்டுவெடிப்பு

### ஒருவர் சாவு: 12 பேர் படுகாயம்



பாரிஸ், நவ.11
பிரான்ஸில் இசை நிகழ்ச்சி ஒன்றின் ஒத்திகையின் போது அரங்கில் குண்டு வெடித்ததில் ஒருவர் உயிரிழந்தார். 12 பேர் படுகாயம் அடைந்தனர்.
அரங்கின் உள்ளே இசை கலைஞர்கள் ஒத்திகையில் ஈடுபட்டிருந்தனர், தொழில்நுட்ப கலைஞர்கள் வண்ண விளக்குகளை அமைக்கும் பணியில் ஈடுபட்டிருந்தனர். அப்போது அரங்கின் உள்ளே திடீரென குண்டு வெடித்தது.
சம்பவ இடத்திலேயே ஒருவர் உயிரிழந்தார். 12 பேர் படுகாயம் அடைந்தனர். இவர்களில் 5 பேரின் நிலைமை கவலைக்கிடமாக உள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.
இதுகுறித்தும் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர். (ற)

## பிரபஞ்ச அழகியானார் வெனிசுவேலா மங்கை



மொஸ்கோ, நவ.11
ரஷ்யாவில் நடைபெற்ற பிரபஞ்ச அழகிப் போட்டி யில் வெனிசுவேலா நாட் டைச் சேர்ந்த கேப்ரிலா இஸ்லர் பட்டத்தை வென் றுள்ளார்.
மாஸ்கோவில் நடைபெற்ற 2013ஆம் ஆண்டுக்கான அழகிப் போட்டியில் உலகின் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த அழகிகள் கலந்து கொண்டனர். பல சுற்றுப் போட்டிகளில் புள்ளிகளைக் குவித்த வெனிசுவேலாவின் கேப்ரிலா பிரபஞ்ச அழகி பட்டத்தை வென்றார். அவருக்கு 2012ஆம் ஆண்டு 'மிஸ் யுனிவர்ஸ்' பட்டம் வென்ற ஒலிவியா கிரீடத்தை சூட்டினார்.
2ஆம் இடம் ஸ்பெயினின் பாட்ரிகாவுக்கும், 3ஆம் இடம் ஈக்வடாரின் கான்ஸ்டான்சா பேசுக்கும் கிடைத்தது. 86 நாடுகளைச் சேர்ந்த அழகிகள் இந்தப் போட்டியில் பங்குபற்றினர். (ற)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து)

பிரதான வீதி, பண்டத்தரிப்பு, பதிவு இலக்கமும் திகதியும் : J/ 1762, 23.12.1985

# பதவி வெற்றிடம்

எமது சங்கத்தில் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள 05 பதவிகளுக்கு ஆள்சேர்ப்பு செய்வதற்கு தகுதி வாய்ந்தவர்களிடமிருந்து விண்ணப்பம் கோரப்படுகின்றது.

01. பதவி: பொதுமுகாமையாளர் 101/08 வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம்: 11200 - 140 × 10 - 150 × 10 - 14100 (66/2006 இன்படி)

தகைமைகள்:
அ. கூட்டுறவு பணியாளரின் 9ஆவது சம்பளத்திட்டத்தில் முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10 ஆவது சம்பளத்திட்ட முகாமை/ மேற்பார்வை மட்டத்திலான பதவியில் ஆகக் குறைந்த 06 வருட கால அனுபவம். **அல்லது**
ஆ. அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகமொன்றின் பட்டத்துடன் அல்லது அதற்கு இணையான தகைமையொன்றுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனம் ஒன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுபவம். **அல்லது**
இ. கூட்டுறவுப் பணியாளர் உயர் தராதரப் பத்திரப் பரீட்சையில் சித்தியுடன் கூட்டுறவு நிறுவனம் ஒன்றில் 04 வருட கால அனுபவம்/ க.பொ.த. (உயர்தரம்) இல் 03 பாடங்களிலான சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் நிறுவனமொன்றில் முகாமை மட்டத்திலான பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுவம்.

02. பதவி: களஞ்சிய முகாமையாளர் 208/13 வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம்: 9950 - 85 × 10 - 90 × 10 - 11700 (66/2006 இன்படி)

தகைமைகள்:
அ. கூட்டுறவுப் பணியாளரின் 14 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் 15 ஆவது சம்பளத்திட்டதில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுவம். **அல்லது**
ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சா/த) பத்திரம்/ க.பொ.த (சா.த) எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ கணிதம், சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 04 பாடங்களில் திறமைச்சித்திகளுடான 06 பாடங்களில் சித்தியும், சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம்.

03. பதவி: களஞ்சிய முகாமையாளர் 208/14 வெற்றிடம் - 02
சம்பள அளவுத்திட்டம்: 9700 - 80 × 10 - 85× 10 - 11350 (66/2006 இன்படி)

தகைமைகள்:
அ. கூட்டுறவுப் பணியாளரின் 15 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 02 வருடங்களுக்கு குறையாத அனுபவம், அல்லது கூட்டுறவுப் பணியாளர் 16 ஆவது சம்பளத்திட்டத்தில் சம்பந்தப்பட்ட துறையிலான பதவியில் 04 வருடங்களுக்கு குறையாத அனுவம். **அல்லது**
ஆ. கூட்டுறவுப் பணியாளர் (சா/த) பத்திரம்/ க.பொ.த (சா.த) 02 அமர்வுகளுக்கு மேற்படாமல் எண்கணிதம்/ வர்த்தக கணிதம்/ கணிதம், சிங்களம்/ தமிழ்மொழி என்பவற்றை உள்ளடக்கிய 06 பாடங்களில் சித்தி

04. பதவி: சாரதி 312/15 வெற்றிடம் - 01
சம்பள அளவுத்திட்டம்: 9450 - 75 × 10 - 80× 10 - 11000 (66/2006 இன்படி)

தகைமைகள்:
அ. ஆண்டு 05 இல் சித்தியுடன் கார்ச் சாரதி அனுமதிப்பத்திரம் உள்ளவராகவும், ஒருவருட அனுபவம் உள்ளவராகவும் இருத்தல்.

05. பதவி: தொழிலாளி 318/17 வெற்றிடம் - 02
சம்பள அளவுத்திட்டம்: 8950 - 65 × 10 - 70× 10 - 10300 (66/2006 இன்படி)

தகைமைகள்:
அ. ஆண்டு 05 இல் சித்தியுடன் சிறந்த உடல் ஆரோக்கியமும் கொண்டிருத்தல் வேண்டும்.

குறிப்பு:
* மேற்குறிப்பிட்ட 01 - 05 வரையான பதவிகளுக்கும், கூட்டுறவு வேலையாளர் ஆணைக்குழுவால் அங்கீகரிக்கப்பட்ட இதர படிகளும் வழங்கப்படும்.
* விண்ணப்பதாரி விண்ணப்ப முடிவு திகதியன்று 18 வயதுக்கு மேற்பட்டவராகவும், 45 வயதிற்கு குறைந்தவராகவும் இருத்தல்வேண்டும்.
* சங்கப்பணியாளருக்கு வயதெல்லை கவனத்திற் கொள்ளப்படமாட்டாது.
* சங்கப் பணியாளர்களுக்கும் சங்க எல்லைப்பரப்புக்குட்பட்டவர்களுக்கும் முன்னுரிமை வழங்கப்படும்
* சங்கங்களில் கடமையாற்றுவோர் விண்ணப்பிப்பதாயின் தாங்கள் தொழில் செய்யும் சங்கத்தினூடாக தலைவரின் சிபார்சுடன் விண்ணப்பிக்கப்படல் வேண்டும்.
* விண்ணப்பப் படிவங்களை சங்க அலுவலகத்தில் ரூபா 30.00 செலுத்திப் பெற்றுக்கொள்ளலாம்.

**விண்ணப்ப முடிவுதிகதி: 25.11.2013**

தி. இந்திரசித்து - தலைவர்,
பண்டத்தரிப்பு ப.தெ.வ.அ.கூ.சங்கம்

விண்ணப்பதாரி விண்ணப்பங்களைப் பூரணப்படுத்திக் கீழ்வரும் முகவரிக்கு விண்ணப்ப முடிவுதிகதிக்கு முன்னதாக் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.

தலைவர், பண்டத்தரிப்பு பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம் (வ-து), பிரதான வீதி, பண்டத்தரிப்பு.

(சி/12214) (45.6.3)

## பச்சிலைப்பள்ளி பிரதேசசபை - பளை

### சந்தைகள், இறைச்சிக்கடைகள் குத்தகைக்கு வழங்குவதற்கான

# கேள்வி அறிவித்தல்- 2014

*பச்சிலைப்பள்ளி பிரதேசசபையின் அதிகாரத்திற்குட்பட்ட கீழ்காணும் சந்தைகள், இறைச்சிக்கடைகள் என்பனவற்றை 01.01.2014 தொடக்கம் 31.12.2014 ஆம் திகதி வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் எம்மால் கோரப்படுகின்றன.*

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 12.11.2013 முதல் 26.11.2013 வரை
கேள்விப்பத்திரம் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி : 27.11.2013 பிற்பகல் 2 மணி
கேள்விப்பத்திரம் திறக்கப்படும் திகதி : 27.11.2013 பிற்பகல் 2.30 மணி

நிபந்தனைகள்

01. கேள்விப்பத்திரம் இரு பிரதிகளில் தயாரிக்கப்பட்டு மூலப்பிரதியை தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசபை, பளை என்ற முகவரிக்கு அரக்கு முத்திரையிட்டு தபால் உறையின் இதுபக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாக இடப்பட்டு பதிவுத்தபால் மூலம் அனுப்புதல் வேண்டும். அல்லது அலுவலகத்தில் அதற்கென வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன்னர் இடப்படல்வேண்டும். இராண்டாவது பிரதியை பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர், உள்ளூராட்சித்திணைக்களம், கிளிநொச்சி என்ற முகவரிக்கு 2013.11.27 ஆம் திகதி பிற்பகல் 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைத்தல் வேண்டும்.
02. கேள்விப்பத்திரம் பெறவிரும்புவோர் தமது தே.அ.அட்டை/கடவுச்சீட்டு/ சாரதி அனுமதிப்பத்திரம் ஆகியவற்றில் ஏதாவது ஒன்றுடன் கோரிக்கைக் கடிதம் சமர்ப்பித்தல் வேண்டும்.
03. உள்ளூராட்சி மன்றங்களினால் தவறுநராகக் கணிக்கப்பட்ட எவருக்கும் படிவம் வழங்கப்பட மாட்டாது.
04. கேள்வி நிபந்தனை அறிவுறுத்தலுக்கமையாத கேள்விக் கோரிக்கையை நிராகரிக்கவும், எந்தவொரு கேள்வியையும் காரணம் காட்டாது ஏற்கவோ, நிராகரிக்கவோ தவிசாளருக்குப் பூரண அதிகாரமுண்டு.
05. கேள்வி திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளரோ அல்லது அவரது பிரதிநிதியோ சமுகமளிக்கலாம்.
06. கேள்விப்பத்திரங்களை கீழ்க்குறிப்பிடப்பட்ட மீளளிக்கப்படாத படிவக்கட்டணமும் மீளளிக்கக்கூடிய கேள்வி வைப்புப்பணமும் செலுத்தி பிரதேசசபையின் தலைமைக்காரியாலயத்தில் மேற்குறித்த காலத்திற்குள் பெற்றுக் கொள்ளல்வேண்டும்.
07. தெரிவுசெய்யப்படும் கேள்விகாரர் கேள்வித்தொகை 300,000,00 (மூன்று லட்சத்திற்கு) உட்பட்ட தொகையாயின் 1/2 பகுதியையும் 300,000,00 (மூன்று இலட்சத்திற்கு) மேற்பட்ட தொகையாயின் 1/3 பகுதியையும் 2013.12.05 ஆம் திகதிக்கு முன்னர் செலுத்தி சபையுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளல்வேண்டும்.
08. மேலதிக விவரங்களை அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

குத்தகைக் கேள்வி அட்டவணை

| இல | குத்தகை விவரம் | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக் குறைந்த கேள்வித் தொகை | மீளளிக்கக் கூடிய கேள்வி வைப்புத் தொகை | மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணம் |
|---|---|---|---|---|
| | புலோப்பளை உப அலுவலகம் | | | |
| 01 | ஆட்டிறைச்சிக்கடை | 25,000.00 | 1500.00 | 500.00 |
| 02 | கோழியிறைச்சிக்கடை | 140,000.00 | 1500.00 | 500.00 |
| 03 | மாட்டிறைச்சிக்கடை | 880,000.00 | 3000.00 | 1000.00 |
| 04 | பொதுச்சந்தை (மரக்கறிச்சந்தை, மீன்சந்தை, து.வ.பாதுகாப்பு நிலையம், சந்தை உட்புறம் அமைந்துள்ள கடைகள் உட்பட) | 650,000.00 | 3000.00 | 500.00 |
| | முள்ளிப்பற்று உப அலுவலகம் | | | |
| 01 | மாட்டிறைச்சிக்கடை | 165,000.00 | 2000.00 | 500.00 |
| 02 | பொதுச்சந்தை (மரக்கறி, மீன்சந்தை, து.வ.பாதுகாப்பு நிலையம் உட்பட) | 90,000.00 | 1500.00 | 500.00 |

ப.டொ. அன்ரன் - தவிசாளர், பச்சிலைப்பள்ளி பிரதேசசபை, பளை

2013.11.11

(சி.2781) (45.3.6)




வடமராட்சி செவிப்புலனற்றோர் நிறுவனத்துக்கு கடந்த புதன்கிழமை இலங்கைக்கான அமெரிக்க தூதர் மிச்செல்சூசன் அம்மையாரும், அமெரிக்க தூதரகப் பணிப்பாளர் கிறிஸ்ரோபர் ரீனும், வருகை தந்திருந்தார். அப்போது நிலையப் போஷகர் க.கோபாலகிருஷ்ணன், நிலையத்தின் தலைவர் எஸ். செந்தில்குமார் ஆகியோர் தாம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகளை விரிவாக எடுத்துரைத்தனர். (ஓ-422)

## வைர விழா

குருநகர் சென்.றொக்ஸ் றோமன் கத்தோலிக்க வித்தியாலயத்தின் வைர விழா நிகழ்வுகள் நாளை செவ்வாய்க்கிழமை வித்தியாலய அதிபர் தலைமையில் நடைபெறும்.

காலை 8.45 மணிக்கு குருநகர் சென்.றொக்ஸ் ஆலயத்தில் நன்றி திருப்பலி நிறைவேற்றப்பட்டு முற்பகல் 10 மணிக்கு வித்தியாலயத்தின் பிரதான மண்டபத்தில் வைரவிழா நிகழ்வுகள் இடம்பெறும். நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மறை மாவட்ட குருமுதல்வர் அருட்கலாநிதி யஸ்ரின் பி.ஞானப்பிரகாசம். கௌரவ விருந்தினராக யாழ்.கல்வி வலய பிரதிக் கல்விப் பணிப்பாளர் பி.அருணகிரிநாதர், சிறப்பு விருந்தினராக யாழ்.கோட்டக் கல்விப் பணிப்பாளர் எஸ்.சண்முக குமார் யாழ்.பேராலயப் பங்குத் தந்தை ஆர்.எச். சகாயநாயகம் ஆகியோர் கலந்து கொள்வர். (ந-23)

## பொது அறிவு போட்டி

பளை, நவ.11

பச்சிலைப்பள்ளி பிரதேச சபையின் பளைப் பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு பளைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில், தரம்-1 தொடக்கம் தரம்-13 வரையான வகுப்புகளில் கற்கும் மாணவர்களுக்கிடையிலான போட்டிகளை நடத்தி வருகின்றனர்.

தரம்-10, 11 வகுப்பு மாணவர்களுக்கான பொது அறிவு வினாடி வினாப் போட்டிகள் எதிர்வரும் 15ஆம் திகதி வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு நூலக மண்டபத்தில் நடைபெறும். (ந-9)

**மணமகன் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த அரச உயர் பதவி வகிக்கும் பெண்ணிற்கு தகுந்த மணமகன் தேவை. உயர் பதவிகள் விரும்பத்தக்கது. (வேலை) (40005)(7.6.3)

தொடர்பு : 077 284 4179 suganthant1983@gmail.com

**வீடு வாடகைக்கு**

பிரதான வீதி, சங்கானை சந்தைக்கு அருகில் உள்ள இரண்டு அறை, நீர் தாங்கி உள்ள வீடு அரச, வங்கி ஊழியர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும். (39970) (7.6.3)

தொடர்பு : 077 724 6096 (7.00am - 3.00pm)

**ஒத்துமாறல்**

வலிகாமம் கல்வி வலயத்தில் ஆரம்பக்கல்வி ஆசிரியையாகக் கடமையாற்றும் ஒருவர் தென்மராட்சி கல்வி வலயத்தில் கடமையாற்றும் ஆரம்பக்கல்வி ஆசிரியர் ஒருவருடன் ஒத்துமாற விரும்புகின்றார். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம்.

தொடர்பு : 077 981 7776, 077 628 3936 (39849) (7.6.3)

**YOGI'S**
(Academy of Beauty Culture, Hair Dressing & Home Science

Cookery Demonstration Classes
15th, 16th, 17th November 2013

பண்டிகைக் கால மனையியல் செய்முறை விளக்க வகுப்புக்கள் 3 நாள்கள் மட்டும்.
15ஆம், 16ஆம், 17ஆம் திகதிகளில் மு.ப 10 மணி முதல் நடைபெறும்.
இலகுவாகவும், வித்தியாசமாகவும் விரைவாகவும் செய்யக்கூடிய

* 5 கேக் கலவைகள்
* 5பேஸ்ரி வகைகள் (Pastrgies)
* 5 Sweets வகைகள்

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொண்டு பதிவு செய்து கொள்ளவும்.
75, அம்மன் றோட், நல்லூர், யாழ்ப்பாணம்.
Phone No : 021 222 2796/ 077 716 4923 (சி/12227) (7.6.3)

**வாடகைக்கு**

ஒரு நாள் 500/- Attached Bathroom உடன். Hotel Villa City, 422 Galle Rd, Colombo - 06 இராமகிருஷ்ண வீதிக்கு அருகில்.

0722 552 222

**துறையூர் கடற்தொழிலாளர் கூட்டுறவுச் சங்கம்**
**மீதிகள் உறுதிப்படுத்துக**

எமது சங்கத்தின் 2008 தொடக்கம் 2012 வரையான காலப் பகுதியில் கணக்கு வேலைகள் நடைபெற்றுக் கொண்டிருப்பதால் இக்காலத்தில் சங்கத்துடனான கொடுக்கல் வாங்கல்கள் நடவடிக்கைகளை மேற்கொண்டோர் சங்க ஆவணப் புத்தகங்களைக் கையில் வைத்திருப்போர் அலுவலக நேரத்தில் 15.11.2013 இற்கு முன்னர் உறுதிப் படுத்தித் தந்துதவுமாறு தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சங்க நிர்வாகம்

(39972) (7.6.3)

**பாராட்டி வாழ்த்துகின்றோம்**

2013 தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சையில்
161 புள்ளிகளைப் பெற்ற
யா/இடைக் குறிச்சி ஸ்ரீசுப்பிரமணிய
வித்தியாலய மாணவி
செல்வி
சிவனேசன் கீர்த்திகாவையும்,
100 புள்ளிகளுக்கு மேல் பெற்ற

இ.தேனுஜன் - 144
பி.சர்மிலன் - 117
கா.பகிர்சா - 107
ந.மதுராகரன் - 106
ப.சாருகான் - 101




ஆகிய மாணவர்களையும் பாராட்டி வாழ்த்துவதுடன் இவர்களது சித்திக்கு வழிகாட்டிய அதிபர், முன்னை நாள் அதிபர், சு.தர்மலிங்கம், ஆசிரியர்கள் அனைவரையும் பாராட்டுகின்றோம்.

(சி/1222) (45.6.3) பாடசாலைச் சமூகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விதை நெல் உற்பத்திக்கு அதிக நிதி ஒதுக்கீடு

### பிரதி விவசாயப் பணிப்பாளர் கோரிக்கை


விதைநெல் உற்பத்திகளை மேம்படுத்துவதற்கு குறிப்பிட்ட ஒரு தொகை நிதியை ஒதுக் குமாறு கிளிநொச்சி மாவட்ட பிரதி விவசாயப் (விரிவாக்க) பணிப்பாளர் அ.செல்வராசா அரச அதிபரிடம்கோரிக்கைவிடுத்துள்ளார். தற்போது மேற்கொள்ளப்படும் காலபோக நெற் செய்கையின்போது விதை நெல்லுக்கான தட்டுப்பாடு கடந்த காலங்களை விட அதிகளவில் ஏற்பட்டதாக விவசாயிகளும், விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகளும் ஏற்கனவே கருத்துத் தெரிவித்திருந்தனர். இந்த நிலையிலேயே பிரதி விவசாயப் பணிப்பாளரும் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:- கிளிநொச்சி மாவட்டம் பெரியளவில் நெற் செய்கையை மேற்கொள்ளும் ஒரு மாவட்டமாக உள்ளது. ஆனால் இங்கு விதை நெல்லுக்குப் கடும் தட்டுப்பாடு நிலவி வருகின்றது. எதிர் காலத்தில் இவ்வாறான தொரு நிலை ஏற்படாதவாறு விதை நெல் உற்பத்தி இங்கு அதிகரிக்கப்பட வேண்டும். இதற்கு வருடாந்தம் குறிப்பிட்ட ஒரு தொகை நிதி ஒதுக்கப்பட வேண்டும். அப்போதுதான் எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட் டத்தில் விதை நெல்லுக்குத் தட்டுப்பாடு ஏற்படாது- என்றார். (க-6)

# 9,500 ஏக்கரில் நெற் செய்கை

அக்கராயன், நவ. 11

துணுக்காய்ப் பிரதேச செயலர் பிரிவில் 9500 ஏக்கருக்கும் மேற்பட்ட நிலப்பரப்பில் காலபோக நெற் செய்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதாக பிரதேச செயலர் சி.குணபாலன் தெரிவித்தார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; இந்தப் பிரதேச செயலர் பிரிவில் உள்ள 17 குளங்கள் புனரமைக்கப்பட்டுள்ளன. இதன் காரணமாக விவசாயிகளுக்கு அதிக நன்மை ஏற்பட்டுள்ளது. அம்பலப்பெருமாள் குளத்தின் புனரமைப்புப் பணிகளும் இடம்பெற்று வருகின்றன.



வீதிகளைப் பொறுத்த வரை மாங்குளம்- துணுக்காய் வீதியின் 20 கிலோ மீற்றர் நீளமான பகுதியில் 18 கிலோ மீற்றர் நீளம் வரை புனரமைக்கப்பட்டுள்ளது. துணுக்காய்- புத்துவெட்டுவான் வீதி புனரமைக்கப்பட்டுள்ளது. துணுக்காய்-அக்கராயன் வீதியும் புனரமைக்கப்பட்டு வருகின்றது- என்றார். (க-18)

## சந்தேக நபர்களுக்கு விளக்க மறியல்

கிளிநொச்சிப் பகுதியில் வீடொன்றுக்குள் அத்துமீறிப் புகுந்து பொருள்களுக்கும், உடைமைகளுக்கும் சேதம் விளைவித்ததோடு வீட்டின் உரிமையாளரையும் தாக்கிய சந்தேக நபர்களை எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கிளிநொச்சி நகரை அண்மித்த பகுதியில் கடந்த 2ஆம் திகதி வீடொன்றுக்குள் அத்துமீறி நுழைந்து அங்கிருந்த வீட்டு உரிமையாளரை தாக்கி காயம் ஏற்படுத்தியதுடன் வீட்டிலுள்ள பொருள்கள், உடைமைகளுக்கும் சேதம் விளைவித்தனர் என்ற குற்றச்சாட்டில் பொலிஸாரால் கைது செய்யப்பட்ட இரண்டு சந்தேக நபர் களும் கடந்த 5ஆம் திகதி நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

குறித்த இரு சந்தேக நபர்களையும் எதிர்வரும் 19ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்ற நீதிவான் எம்.ஐ.வகாப்தீன் உத்தரவிட்டார். (க-6)

## மாந்தை கிழக்கில் ஊக்குவிப்பு நிதி

முல்லைத்தீவு மாவட்டம் மாந்தை கிழக்கில் பெண்கள் தலைமை தாங்கும் 33 குடும்பங்களுக்கு தலா 10 ஆயிரம் ரூபா வீதம் சுய தொழில் ஊக்குவிப்பு நிதி சமூக சேவைகள் திணைக்களத்தினால் வழங்கப்பட்டுள்ளது.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவின் கீழ் உள்ள 15 கிராம அலுவலர் பிரிவுகளிலும் இருந்து போரினால் கணவன்மாரை இழந்த விசேட தேவையுடைய முன்னுரிமையடிப்படையில் தெரிவு செய்யப்பட்ட 33 பெண்கள் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு மேற்படி கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுள்ளன.

மாந்தை கிழக்கு பிரதேச செயலர் ரீ.பிருந்தாபனின் ஏற்பாட்டில் சமூக சேவை திணைக்களத்தினால் இந்த ஊக்குவிப்பு நிதி வழங்கப்பட்டது. ஒவ்வொரு குடும்பத்துக்கும் அவர்களது சுய தொழில்களை ஊக்குவிக்கும் வகையிலேயே இந்த நிதி வழங்கப்பட்டது. இதன் மூலம் இந்தக் குடும்பங்கள் கோழி வளர்ப்பு, மாடு வளர்ப்பு ஆகிய சுயதொழில் முயற்சிகளை மேற்கொள்வதற்கான வாய்ப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக் கப்பட்டுள்ளது. (க-6)






இலங்கை சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்க சம்மேளனத்தின் ஏற்பாட்டில் வடமாகாணத்தில் அமைந்துள்ள இத்தகைய சங்கங்களை அபிவிருத்தி செய்யும் வேலைத் திட்டத்தின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச செயலர் பிரிவில் செயற்படும் 10 சங்கங்களுக்கான அலுவலகத்தை இலங்கை சிக்கனக் கடனுதவி கூட்டுறவுச் சங்கச் சம்மேளனத்தின் தலைவரான கலாநிதி யு.கிரிவந்தெனிய வவுனியா வடக்கிலுள்ள புளியங்குளத்தில் திறந்து வைத்தார். (க-402)

## ஆடு வழங்கல்

அக்கராயன், நவ.11

கிளிநொச்சி செல்வா நகரில் ஆறு குடும்பங்களுக்கு ஆடுகளை வழங்கும் நிகழ்வு கடந்த 7ஆம் திகதி இடம்பெற்றது.

இங்குள்ள மாதர் சங்கத்தின் ஏற்பாட்டில் சுழற்சி முறையில் இந்த ஆடுகள் வழங்கப்பட்டுள்ளன. கடந்த ஒரு வருடத்துக்கு முன்னர் யுஎன்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் நிதிப்பங்களிப்புடன் தொடங்கப்பட்ட இந்த ஆடு வழங்கும் திட்டத்தை கிராமத்திலுள்ள மாதர் சங்கம் நெறிப்படுத்தி வருகின்றது.

இதனடிப்படையில் 6 குடும்பங்களுக்கு மறி, கடா உள்ளடங்கலாக இரண்டு ஆடுகள் வழங்கப்பட்டன. இவற்றின் பெறுமதி 20 ஆயிரம் ரூபாவென மாதர் சங்கம் தெரிவித்துள்ளது. (க-18)

## வவுனியா தெருக்களில் கழிவுகளால் சிரமம்

வவுனியா, நவ. 11

வவுனியா பஸ் நிலையம், அதனைச் சுற்றியுள்ள வர்த்தக நிலையங்கள், வீதிகள் ஆகியவற்றுக்கு அருகில் கழிவுகளைப் போடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப் படாமையால் தெருக்களில் கழிவுகள் நிறைந்து சுகாதாரக் கேடுகளை ஏற்படுத்தி வருகின்றன.



வவுனியா நகரத்தை அழகாக வைத்திருப்பதற்கு பல்வேறு நிறுவனங்கள் முன் வந்த போதிலும் வர்த்தக நிலையங்கள், பஸ்நிலை யம், பிரதான வீதிகள் ஆகிய வற்றுக்கு அருகில் கழிவு களைப் போடுவதற்கான வசதிகள் செய்து கொடுக்கப் படாமையால் இந்த அவல நிலை ஏற்பட்டுள்ளது. தற்போது மழை காலம் என்பதால் இந்தக் கழிவுகளிலிருந்து துர்நாற்றம் வீசுவதோடு சுகாதார ரீதியிலான பிரச்சினைகளும் ஏற்பட்டுள்ளன. இந்தக் கால்நடைகள் கழிவுகளைக் கிளறி விடுவதால் இவை சிதறுண்டு மழை வெள்ளத்தால் அள்ளுண்டு போவதாலும் சுகாதாரக் கேடுகள் தோன்றியுள்ளன.

பசார் வீதி, குருமன் காடு, மன்னார் வீதி, கண்டி வீதி, ஏ-9 வீதி, வவுனியா நகரச்சந்தை, வவுனியா நகர வர்த்தக நிலையங்கள், வவுனியா பஸ்நிலையம் உட்படப் பல்வேறு இடங்களில் கழிவுகளை இடுவதற்கான வசதிகள் ஏற்படுத்தப்பட்டு அவை வவுனியா நகர சபையால் உரிய வகையில் அகற்றப்பட வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-402)

## மாவட்ட மக்கள் ஒன்றியம் வவுனியாவில் அமைப்பு

வவுனியா, நவ .11

வவுனியாவில் மாவட்ட மக்கள் ஒன்றியம் அமைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பான ஊடகவியலாளருடனான சந்திப்பு வவுனியா நகரிலுள்ள விடுதி ஒன்றில் நேற்று முன்தினம் காலை வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்தின் தலைவர் சுந்தரம் குமாரசாமி தலைமையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியத்துக்குத் தெரிவு செய்யப்பட்ட நிர்வாகிகளின் பெயர்கள் வெளியிடப்பட்டன. தலைவராக முன்னாள் நகரசபை உறுப்பினர் சுந்தரம் குமாரசாமியும், செயலாளராக குமாரசாமி சஜிக் குமாரும், பொருளாளராக சார்ளீஸ் சில்வா நீல் விஜயரட்ணமும் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும் உபதலைவர், உபசெயலாளர், உபபொருளாளர் ஆகிய பதவிகளுக்கும், நிர்வாகசபை உறுப்பினர் பதவிகளுக்கும், பல்வேறு அமைப்புக்களைச் சேர்ந்தவர்களும், வர்த்தக



நடவடிக்கையில் ஈடுபட்டுவரும் பிரமுகர்களும் தெரிவு செய்யப்பட்டனர். இந்த ஒன்றியத்தின் போசகர்களாக பிரதான மதங்களைச் சேர்ந்த மதப் பெரியார்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். அத்துடன் வவுனியா மாவட்ட மக்கள் ஒன்றியம் எதிர்காலத்தில் வவுனியா மாவட்டத்தில் உள்ள வீதிகள், வடிகால்கள், மயானங்கள் ஆகியவற்றைப் புனரமைத்தல், வீதி விளக்குகள் தொடர் பான குறைபாடுகள், சுகாதாரக் குறைபாடுகள் ஆகியவற்றை நிவர்த்தி செய்தல், செயலற்றுக் கிடக்கும் குழாய்க் கிணறுகளை புனரமைத்தல் போன்ற செயற்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது.

அத்துடன் பல்வேறு நலத் திட்டங்களையும் இந்த ஒன்றியம் மேற்கொள்ளுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அம்பாறை மாவட்டத்தில் பெரும் போக நெற்செய்கை பணிகள் ஆரம்பமாகியுள்ளன. (ச)

# இறால் பிடிப்பதில் மீனவர் ஆர்வம்

மட்டக்களப்பு,நவ.11

மட்டக்களப்பு வாவியில் இறால் பிடிப்பதில் மீனவர்கள் ஆர்வம் செலுத்தியுள்ளனர்.

மழை காலம் ஆரம்பமாகியுள்ளதால் வாவியின் நீர் மட்டம் அதிகரித்துக் காணப்படுகிறது.

அதனால் இறால், நண்டு, மீன்கள் அதிகம் பிடிபடுகின்றன என்று மீனவர்கள் தெரிவித்தனர்.

கல்லடிப் பாலம், கோட்டமுனைப்பாலம், புதுப்பாலம் ஆகிய பிரதேசங்களில் அதிக இறால் பிடிபடுவதால் ஒரு கிலோ இறால் 400 ரூபா முதல் 1000 ரூபா வரை விற்பனை செய்யப்படுகின்றன.

வாவித் தொழில் மீனவர் ஒருவர் ஒரு நாளைக்கு 4 கிலோ முதல் 6 கிலோ வரை இறால் பிடிக்கின்றனர்.



உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு உல்லாசப் பிரயாணிகள் அதிகம் மட்டக்களப்புக்கு வருவதால் ஹோட்டல் உணவுகளான இறால் மற்றும் நண்டு என்பனவற்றுக்கு அதிக கிராக்கி காணப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ச)

# காணி சர்ச்சை; 19இல் முடிவு

## கிழக்கு மாகாண சபை உறுப்பினர் தெரிவிப்பு

அம்பாறை, நவ.11

அம்பாறை மாவட்ட திருக்கோவில் பிரதேச செயலகத்துக்குட்பட்ட வட்டமடு, விவசாயக் காணி தொடர்பில் ஏற்பட்டுள்ள சர்ச்சைக்கு எதிர்வரும் 19 ஆம் திகதி முடிவு காணப்படவுள்ளது என்று கிழக்கு மாகாண சபை உறுப்பினர் ஏ.எல். தவம் தெரிவித்தார்.



இதுகுறித்து அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சுமார் ஒரு மாதகாலமாக வட்டமடு விவசாயக் காணிகளில் பெரும் போகத்துக்கான விவசாயச் செய்கையை மேற்கொள்ள முடியாமல் விவ சாயிகள் பல்வேறு பிரச்சி னைகளை எதிர்நோக்கி வருகின்றனர். இந்தப் பிரச்சினை தொடர்பில் கிழக்கு மாகாணசபை உறுப்பினராகிய நான் வெள்ளிக்கிழமை ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரசின் தேசியத் தலைவரும், நீதி அமைச்சருமான ரவூப் ஹக்கீமின் கவனத்துக்கு உடனடியாக கொண்டு வந் துள்ளேன்.

அதனையடுதது எதிர்வரும் 19 ஆம் திகதி உரிய அதிகாரிகளுடன் அம்பாறைக்குச் சென்று அன்றைய தினம் வட்டமடு விவசாயக் காணிப் பிரச்சி னைக்கு தீர்வை வழங்கு வதாக அவர் உறுதியளித்துள்ளார். விவசாயச் செய்கைக்குரிய காணிகள் விவசாயச் செய்கைக்கு வழங்கவேண்டும். மேலதிகமாக விவசாயச் செய்கைக்கு காணி தேவைப்ப மேய்ச்சல் தரைக்கென ஒதுக்கப் பட்டுள்ள காணியை ஒதுக்கித் தரவும் அவர் இணக்கம் தெரிவித்தார்.- என்றார். (ச)

# கல்லடிப்பாலத்துக்கு பாதுகாப்பு வேலிகள்



மட்டக்களப்பு,நவ.11

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள புதிய கல்லடிப் பாலத்தின் இரு முனைகளிலுமிருந்து பாதுகாப்பு வேலிகள் அமைக்கும் பணிகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

புதிய கல்லடிப்பாலத்தின் ஊடாகச் செல்லும் வாகனங்கள் மற்றும் பாதசாரிகளின் நன்மை கருதி இந்தப் பாதுகாப்பு வேலி கள் அமைக்கப்படுகின்றன.

புதிய கல்லடிப்பாலத்தின் இரு முனைகளிலுமுள்ள சாய்வுப் பகுதிகளில் பச்சைப் புற்கள் நாட்டி அழகுபடுத்தும் வேலைகளும் முன்னெடுக்கப்பட்டுள்ளன. (ச)





## கல்வெட்டுக்களை பாதுகாக்கும் நூலகம்

மட்டக்களப்பு.நவ.11

மட்டக்களப்பு மாவட்டத்தின் களு தாவளை பொது நூலகத்தில் அரிய வகை நூல்களையும், மிகப் பழைமை வாய்ந்த தமிழர் பண்பாடு கூறும் கல்வெட்டுக்களையும் வைத்து பாதுகாத்து பேணி வருவதாக களுதாவளை பொது நூலக வாசகர் வட்டத்தின் தலைவர் இ. ஞானசேகரன் தெரிவித்தார்.

இந்த நூலகத்தில் உள்ளூர் கலைஞர் களால் வெளியிட்டு வைக்கப்பட்ட நூல்கள் மற்றும் பழங்காலத்தில் முன்னோர்களால் பேணி வந்த ஓலையிலுள்ள ஏடுகள், போன்றவற்றோடு தமிழர் பண் பாடு கூறும் கல்வெட்டுக்களையும் எமது நூலகத்தில் வைத்து பாதுகாத்து வருகின்றோம் என்று அவர் கூறினார்.

கிராமங்களில் பொதிந்து கிடக் கும் ஏடுகள், நூல்கள், கல்வெட் டுக்கள் போன்றவற்றை எம்மிடம் ஒப்படைத்தால் நாம் எமது வருங்கால சந்ததியினருக்கு எடுத்துக் கூறுவதற்காக நூலகத்தில் பாதுகாப்பாக அவற்றைப் பேணுவோம் என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (ச)

# வீதிக்கு நடுவே நிறுவப்பட்ட தொலைத்தொடர்பு கம்பம்

## வாகனங்கள் செல்லமுடியாத நிலை

மட்டக்களப்பு,நவ.11

மருதமுனை தபால் நிலையத்துக்குச் செல்லும் வீதியின் குறுக்கே தொலைத் தொடர்புக்கம்பம் ஒன்று உள்ளதால் வீதியால் வாகனங்கள் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.



இது தொடர்பாக கல்முனை ரெலிக்கொம் நிறுவனத்துக்கு பல தடவை அறிவித்தபோதிலும் அதைச் சீர்செய்ய எந்த நடவடிக்கையையும் எடுக்கவில்லை என்று மருதமுனை தபால் அதிபர் பி.எம்.அஸ் ஹாதீன் தெரிவித்தார்.

இந்த வீதித் தடையால் தபால் பொதிகளை ஏற்ற வரும் வாகனமும் மற்றும் தபால் நிலையத்துக்குச் செல்ல வேண்டிய வாகனங்களும் பெரும் சிரமங்களை எதிர்நோக்குகின்றன என்று அவர் கூறினார்.

எனவே இந்த விடயம் குறித்து கல்முனை ரெலிகொம் நிறுவனம் உடனடியாக நடவடிக்கை எடுத்து வீதியின் நடுவே உள்ள தொலைத் தொடர்புக் கம்பத்தை அகற்றி வாகனங்கள் செல்வதற்கு வசதியை ஏற்படுத்துமாறு தபால் அதிபரும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர். (ச)

# ஆயுதங்கள் மீட்பு

ஏறாவூர்,நவ.11

மட்டக்களப்பு, மாவிலாறு பிர தேசத்தின் காட்டுப் பகுதியில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் ஒரு தொகுதி ஆயுதங்கள் சனிக்கிழமை மீட்கப்பட்டன என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

ஒரு ரி-56 ரக துப்பாக்கி , ஒரு எம்.ரி.எம்.ஜி. ரக துப்பாக்கி, 400 எல்.எம்.ஜி. ரவைகள், 2000 துப்பாக்கி ரவைகள், 15 கிலோ சி4 வெடிமருந்து, வயர் ஆகியவையே மீட்கப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

வாகரை பிரதேச இராணுவ புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைத்த இரகசியத் தகவலையடுத்தே வாகரை 233 ஆவது படைப் பிரிவு இராணுவத்தினரும் புலனாய்வுப் பிரிவினரும் இணைந்து இந்த பொருள்களை மீட்டுள்ளனர் என்று வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.



இந்த வெடி பொருள்கள் விடுதலைப் புலிகள் அமைப்பினரால் பயன் படுத்துவதற்காக கடந்த காலத்தில் மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று பொலிஸார் தெரிவித்தனர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாட்டின் நீதி, சமாதானம் தொடர்பில் மஹிந்த அரசுக்கு அக்கறையில்லை

## ஐக்கிய தேசியக் கட்சி குற்றச்சாட்டு


நாட்டின் நீதி மற்றும் சமாதானம் தொடர்பில் ஆட்சியில் இருக்கும் மஹிந்த அரசு கவனம் செலுத்துவதில்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் அஜித் பீ. பெரேரா குற்றஞ்சாட்டியுள்ளார்.

நீதி மற்றும் சமாதானத்தை கட்டியெழுப்புதல் பொலிஸாரின் கடமை எனவும், அதற்காக சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அமைக்க வேண்டும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொழும்பு - 07 இல் கடந்த வாரம் சூதாட்ட நிலையம் ஒன்றை முற்றுகையிட்ட பொலிஸார் 23 பேருக்கு பொலிஸ் மா அதிபர் இடமாற்றம் வழங்கியுள்ளார். சுயாதீன பொலிஸ் ஆணைக்குழு அமைக்கப்படும் பட்சத்தில் இவ்வாறான நடவடிக்கைகள் தடுக்கப்படும்.

பொதுநலவாய அரச தலைவர்களது மாநாட்டிற்கு வரும் தலைவர்கள் பார்வையிடுவதற்காக நாடாளுமன்றத்திற்கு அருகில் மிருகக்காட்சிசாலை ஒன்றை அமைத்துள்ளனர்.

நகரத்தை அழகுபடுத்துவதை ஐக்கிய தேசியக் கட்சி எதிர்க்கவில்லை. பணத்தை விரயப்படுத்துவதையே நாம் எதிர்க்கின்றோம்.

பொதுநலவாய மாநாட்டு ஆரம்பத்தின்போது ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க உள்ளிட்ட எமது கட்சி உறுப்பினர்களுக்கு தத்தமது வருகையை உறுதிப்படுத்துமாறு அழைப்பு வந்தது.

எனினும் கட்சி உறுப்பினர்களுக்கு கிடைக்கப்பெற்ற கடிதம் உறுதிப்படுத்துவதற்கான திகதியின் பின்னதாகவே கிடைக்கப்பெற்றது. இது திட்டமிட்ட செயல்.

இந்த நாட்டின் வெளிவிவகார அமைச்சருக்கும் அந்த அமைச்சில் உள்ளோருக்கும் பாலர் வகுப்பு மாணவர்களின் அறிவே உள்ளது - என்றார்.

## இருவேறு விபத்துகளில் இருவர் உயிரிழந்தனர்

இருவேறு இடங்களில் இடம்பெற்ற வாகன விபத்துகளில் இளைஞர் ஒருவரும், முதியவர் ஒருவரும் உயிரிழந்துள்ளனர்.

வெலிமடயிலிருந்து பதுளை நோக்கிப் பயணித்த டிப்பர் வாகனம் ஒன்று வெலிமட, புகுல்பொல பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் இரவு வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதில், காயமடைந்த இருவர் வெலிமட வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இவர்கள் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த தந்தை மற்றும் மகன் எனத் தெரியவந்துள்ளது.

பின்னர் மேலதிக சிகிச்சைகளுக்காக பதுளை வைத்தியசாலைக்கு எடுத்துச்செல்லப்பட்ட 20 வயதான குறித்த இளைஞர் (மகன்) உயிரிழந்துள்ளார்.

இதேவேளை, தங்காலை பொலிஸ் பிரிவின் தங்காலை - திஸ்ஸ பிரதான வீதியில் ஏற்பட்ட வாகன விபத்தில் முதியவர் ஒருவர் பலியாகியுள்ளார்.

நேற்றுமுன்தினம் மாலை தங்காலையில் இருந்து திஸ்ஸ நோக்கிப் பயணித்த வான் ஒன்று வீதியைக் கடக்க முற்பட்ட முதியவர் மீது மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

சம்பவத்தில் படுகாயமடைந்த முதியவர் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் உயிரிழந்துள்ளார்.

இவர் ரன்வல, கேகாலை பகுதியைச் சேர்ந்த 66 வயதான ஒருவர் எனத் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் வான் சாரதி கைதுசெய்யப்பட்டுள்ளார்.


கொழும்பு ஸ்ரீமயூராபதி ஸ்ரீபத்திரகாளி அம்மன் கோவிலில் முருகப்பெருமான், வள்ளி, தெய்வானை திருக்கல்யாணம் நேற்றுமுன்தினம் சனிக்கிழமை மாலை நடைபெற்றது. இந்த வைபவத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பாரியார் ஷிராந்தி ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

## ரயில் மோதி முதியவர் சாவு

கொழும்பு - கொச்சிக்கடை ரயில் நிலையத்துக்கு அருகில் ரயிலில் மோதி உயிரிழந்த வயோதிபர் ஒருவரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது.

சிலாபத்தில் இருந்து கொழும்பு நோக்கி பயணித்த ரயிலில் மோதியே இவர் பலியாகியுள்ளார்.


இவர் 70 வயது மதிக்கத்தக்க 5.2 அடி உயரமுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அடையாளம் காணப்படாத நிலையில் சடலம் தற்போது நீர்கொழும்பு வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது.

கொச்சிக்கடை பொலிஸார் சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## ஈழத் தமிழருக்கு வாழ இடமில்லாத அவலம்!

### தனித் தமிழ் ஈழம் உருவாக அனைவரும் போராடவேண்டும் - சீமான் கோரிக்கை


"சுமார் 50 ஆயிரம் ஆண்டுக்கு மேல் மூத்த வரலாற்று பெருமையைச் சார்ந்தது தமிழ் இனம். ஆனால் நம் தமிழ் இன மக்களுக்கு இலங்கையில் வாழ இடமில்லாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, இலங்கையில் தனித் தமிழ் ஈழம் உருவாகுவதற்கு நாம் அனைவரும் போராட வேண்டும்."

இவ்வாறு நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்தார்.

தஞ்சை விளார் பைபாஸ் சாலை அருகில் அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத் திறப்பு விழாவின் இரண்டாவது நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:-

நம் இன தமிழ் ஈழ மக்கள் இலங்கையில் நடந்த இறுதிக் கட்ட போரில், சிங்கள வெறியர்களால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்டனர்.

கொத்து, கொத்தாக குண்டுகளை வீசியும், உயிருடன் புதைகுழிகளில் தள்ளியும் கொலை செய்யப்பட்டனர். இந்தத் துயர சம்பவங்களை தமிழ் இன உணர்வு உள்ள உலக மக்களுக்கு நினைவூட்டும் வகையில் இங்கு முள்ளிவாய்க்கால் நினைவு முற்றம் அமைக்கப்பட்டு உள்ளது.

இந்த முற்றத்தை கடந்த 3 ஆண்டுகளாக எந்தவிதமான எதிர்பார்ப்பும் இல்லாமல் உண்மையுடனும், நேர்மையுடனும் தமிழ் இன ஈழ மக்களுக்காக வாழ்ந்து வரும் பழ. நெடுமாறன் மனதில் கண்ட கனவுகளை இன்று நினைவுகளாகச் செதுக்கி இந்த முற்றத்தை இங்கே நிறுவி உள்ளார்.

நாம் அனைவரும் மதம், இனம், சாதி இவைகளை கடந்து அனைவரும் தமிழன் என்ற உணர்வை மனதில் ஏற்படுத்த வேண்டும்.

இந்த முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் எந்த அரசியல் கட்சி தலைவர்கள் வந்து வீர வணக்கம் செலுத்துகிறார்களோ அவர்களுக்குத் தான் இனி வரும் காலங்களில் நாம் வாக்கு அளிக்க வேண்டும்.

வரலாற்று சான்றில் எந்த இனத்திற்கும் இது போன்ற கொடுமைகள் நிகழ்ந்தது கிடையாது.

இலங்கையில் தனித் தமிழ் ஈழம் உருவாகுவதற்கு நாம் அனைவரும் போராட வேண்டும். இந்த நினைவு முற்றத்தில் ஏற்றப்பட்டு உள்ள சுடரை நாம் அனைவரும் அணையாமல் பாதுகாக்க வேண்டும் - என்றார்.

## காலி - மாத்தறை அதிவேக பாதை ஜனவரி 26இல் திறப்பு

தக்ஷிண அதிவேகப் பாதையின் காலி தொடக்கம் மாத்தறை வரையிலான பகுதி அடுத்த வருடம் ஜனவரி 26 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் திறந்து வைக்கப் படுமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

32.25 கிலோ மீற்றர் நீளமான காலி - பின்னதுவ தொடக்கம் கொடகம வரையும் உள்ள வீதியில் மாறிச் செல்லும் மத்திய நிலையங்கள் மூன்று செயற்படும். இந்த மத்திய நிலையங்கள் இமதுவ, கொக்மாதுவ, கொடகம ஆகிய மூன்று இடங்களில் அமைக்கப்பட்டுள்ளன.

பின்னதுவயிலிருந்து கொடகம வரையிலான வீதியை அமைப்பதற்குச் செலவிடப்பட்டுள்ள தொகை ஆயிரத்து 870 கோடி ரூபாவாகும். தக்ஷிண அதிவேகப் பாதையில் கொட்டாவ தொடக்கம் மாத்தறை கொடகம வரையிலும் உள்ள தூரம் 126.25 கிலோ மீற்றர்களாகும்.

காலி - மாத்தறை அதிவேகப் பாதை திறக்கப்படும் ஜனவரி 26ஆம் திகதியன்றே மாத்தறை - ஹம்பாந்தோட்டை அதிவேகப் பாதையின் பணிகள் ஆரம்பமாகும் என்பது குறிப்பிடத்தக்கது.

## சத்துரு ஸம்ஹார ஸ்கந்த ஹோமம்

கொழும்பு டொரிங்டன் ஸ்ரீ முருகன் ஆலயத்தில் சத்துரு ஸம்ஹார ஹோமம் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 15ஆம் திகதி காலை 7 மணிக்கு கணபதி ஹோமத்துடன் ஆரம்பமாகி அன்றைய தினமும் மறுநாள் 16ஆம் திகதியும் காலை 10 மணிக்கும் மாலை 5.00 மணிக்கும் இருவேளை ஹோமம் நடைபெறும்.

17ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணி முதல் விசேட ஹோமம், திரவிய ஹோமம், வேதபாராயணம், மகாபூர்ணாகுதியும் அதைத் தொடர்ந்து முருகப் பெருமானுக்கு விசேட திரவிய அபிஷேக அலங்கார பூஜையும் நடைபெறும்.

17ஆம் திகதி மாலை 6.00 மணிக்கு கன்னிப் பெண்கள், சுமங்கலிகள் பங்குபற்றும் திருவிளக்குப் பூஜை இடம்பெறும். அதனைத் தொடர்ந்து 7.00 மணிக்கு முருகப் பெருமானுக்கு 2008 நெய்தீபம் ஏற்றி வழிபாடு நடைபெறும்.

திருவிளக்குப் பூஜைகளில் பங்குபற்றுவோர் முன்கூட்டியே பெயர்களைப் பதிவுசெய்யுமாறு ஆலய அறங்காவலர் சபை அறிவித்துள்ளது.

## பாடகி வன்புணர்வு: எதிராளி விடுதலை

கொழும்புக் கோட்டை உலக சந்தை வர்த்தக நிலையத்தில் நடைபெற்ற இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பாடகி உமாயா சிந்துவன்ச என்பவரை நிகழ்ச்சி முடிவடைந்த பின் அருகிலிருந்த வாகனத் தரிப்பிடமொன்றுக்கு இழுத்துச் சென்று இம்சைப்படுத்தி வன்புணர்வு செய்தார் என்ற குற்றச்சாட்டில் வழக்குத் தொடரப்பட்டிருந்த வானொலிக் கலைஞரான ரம்சி ஜெய்னூர் கோட்டை நீதிவானும் மேலதிக மாவட்ட நீதிவானுமான திலினி கமகேவினால் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய இந்த வழக்கைத் தொடர்ந்து நடத்த போதிய சாட்சியங்கள் இல்லையென பொலிஸார் நீதிமன்றத்தில் தெரிவித்ததையடுத்தே நீதிவான் சந்தேக நபரை விடுவித்தார்.

சந்தேக நபர் கைதுசெய்ப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. (4)

## புதிய பாலத்தின் திறப்பு விழா

பேருவளை சீனன்கோட்டை ஜாபிர் அவனியூவில் 27 இலட்சம் ரூபா செலவில் ஒரு மாத காலத்திற்குள் நிர்மாணிக்கப்பட்ட புதிய பாலத்தின் திறப்பு விழா நாளை செவ்வாய்க்கிழமை பி.ப. 4.00 மணிக்கு மேல் மாகாணசபை உறுப்பினர் எம்.எம்.எம். அம்ஜாத் ஹாஜியார் தலைமையில் நடைபெறும்.

கடற்றொழில் நீரியல் வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் டாக்டர் ராஜித சேனாரத்ன, மேல்மாகாண முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பேருவளை நகரபிதா மில்பர் கபூர், தேசபந்து நௌபல் எஸ்.ஜாபிர் ஆகியோர் அதிதிகளாகக் கலந்து கொள்வர். (வ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

தலைமையகம்: 361, கஸ்தூரியார்வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021-222 9933, 222 9944, 5679933, 5679944
விளம்பரம்: 021-5671111 விநியோகம்: 021-5677222
செய்தி: 021-2229944, விளம்பரம்: 021-2229731
செய்தி : news@uthayan.com கருத்து: comments@uthayan.com
விளம்பரம்: advt@uthayan.com

## பொதுநலவாய செயலரின் பரிந்துரை பாதிப்புற்றோர் நலன் கருதியதா...?

இன்னும் இரண்டு நாள்களில் கொழும்பில் ஆரம்பமாக உள்ள பொதுநலவாய நாடுகளின் மாநாட்டில் பங்குபற்றும் தலைவர்களும் அவர்களின் குழுவினரும் தலைநகரை வந்தடையத் தொடங்கியுள்ளனர்.

அதற்கு முன்னதாக பொதுநலவாய செயலகத்தைச் சேர்ந்த பிரதான அதிகாரிகளில் ஒருவரான செயலாளர் நாயகம் கமலேஷ் சர்மா, இலங்கை குறித்த தகவல் ஒன்றை லண்டனில் வைத்து வெளியிட்டு உள்ளார்.

இலங்கையில் நடைபெற்ற போர் முடிவுற்ற காலத்தில் இருந்து, இதுவரை நடைபெற்ற சித்திரவதைகள் குறித்து தேசிய மட்ட விசாரணை நடத்தப்பட வேண்டும். அந்த விசாரணைக்குப் பொதுநலவாய செயலகம் உதவும். அத்தோடு இலங்கை அரசு நடத்தும் விசாரணை தொடர்பான செயற்பாடுகள் குறித்துப் பொதுநலவாய செயலகம் கண்காணிக்கும்- என்றும் கமலேஷ் சர்மா தகவல் தெரிவித்திருக்கிறார்.

2009 ஆம் ஆண்டில் இறுதிப் போர் இடம்பெற்ற காலம் முதல் இதுவரையான காலப் பகுதியில் அரசாங்க ஆயுதப் படைகளால் இழைக்கப்பட்ட சித்திர வதைகள் தொடர்பான குற்றச் சாட்டுகள் குறித்து உத்தேச விசாரணை நடத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். விசாரணைகள் ஒன்றரை ஆண்டு காலத்தில் பூர்த்தியாக வேண்டும் என்பதும் விதிகளில் ஒன்று.

அடுத்த இரண்டு ஆண்டுகளுக்கு பொதுநலவாய நாடுகளின் தலைமைப் பதவியை இலங்கை வகிக்க உள்ளது. அந்த வேளையில் சித்திரவதைகளைத் தடுக்க வேண்டும் என்றும் தேசிய நல்லிணக்கத்தை இங்கு உருவாக்க வேண்டும் என்றும் உறுப்பு நாடுகளும் அனைத்துலக மனித உரிமை அமைப்புகளும், ஊடகங்களும் வலியுறுத்தி வருவதனை மனதில் இருத்தியே பொதுநலவாய அலுவலகம் இச்செயற்பாட்டில் ஈடுபட்டுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எனினும், சித்திரவதைகள் குறித்த விசாரணை நடத்த மேற்கொள்ளப்படும் நடவடிக்கை தொடர்பில் பல தரப்புகளும், அதிருப்தி வெளியிட்டுள்ளன. இலங்கை அரசு சார்ந்த பல வகையான குறைபாடுகளை மறைப்பதற்கான ஒரு முயற்சி இது என்றும் கண்டிக்கப்படுகிறது.

கடந்த ஜனவரியில், இலங்கையின் பிரதம நீதியரசர் பதவி நீக்கம் செய்யப்பட்டமை தொடர்பான முக்கிய சட்ட ஆலோசனையை கமலேஷ் சர்மா மறைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டும் அவர் மீது உண்டு.

போர் முடிவுற்ற பின்னரும் அதனால் உண்டான ஏனைய பாதிப்புகள் பலவும் புறந்தள்ளப்பட்டு, சித்திரவதைகள் குறித்த விசாரணையை மட்டும் முக்கியத்துவப்படுத்தி, பொதுநலவாய நாடுகளின் சார்பில் அதன் செயலக முதன்மை அதிகாரி அறிவித்திருப்பதன் உள்நோக்கம் எவை என்பது இனிமேல்தான் தெரியவர வேண்டும்.

இலங்கை அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இறுதிக் கட்டப் போரின்போது, கட்டவிழ்த்து விடப்பட்ட மனித உரிமை மீறல்கள், போர்க்குற்றங்கள் தொடர்பாக பொதுநலவாய செயலகம் அக்கறை செலுத்தாமல் இருப்பது ஏன் என்ற வினாவும் எழுவதனைத் தவிர்க்கவோ, தடுக்கவோ முடியாது.

மேலும் போருக்குப் பிந்திய விளைவுகளான, நீண்ட காலத் தடுப்புக் காவல், காணாமற் போனவர் குறித்த நிலை, கைது செய்யப்பட்ட பின்னர் கொலை செய்யப்பட்டதாகக் கருதப்படுவோரின் உறவுகளின் தவிப்பு என்பன குறித்து அக்கறை காட்டாது, பூசி மேவப்பட்டமை ஏன் என்ற வினாக்கள் பாதிக்கப்பட்ட தமிழ் மக்கள் சார்பில் எழுப்பப்படுகின்றன.

தேசிய நல்லிணக்க முயற்சிகளுக்குத் தடைக் கற்களாகக் குறுக்கே போடப்பட்டிருக்கும் அம்சங்களை சாதுரியமாக மறைத்தமையும் உள்ளார்ந்து ஆழ்ந்து அலசப்பட வேண்டும்.

அனைத்துலக அழுத்தங்களையும் கண்டனங்களையும் தவிர்க்கும் நோக்குடன், இலங்கை அரசு தானே உருவாக்கிய நல்லிணக்க ஆணைக்குழுவின் பரிந்துரைகளை, விரைந்து செயற்படுத்த வேண்டும் என்று தானும் வலியுறுத்த, பொதுநலவாய அமைப்பின் செயலாளர் நாயகம் வசதியாக மறந்து போனது ஏனோ தெரியவில்லை!

மனித உரிமை என்பது மக்களைச் சித்திரவதையில் இருந்து காப்பாற்றுவதோடு தரித்துப் போகவில்லை. முன்னைய பிரிட்டிஷ் சாம்ராஜ்ஜியத்தின் கீழ் உள்ளடக்கப்பட்ட பொதுநலவாய நாடுகளின் நிலை உயர்வதற்கான வழி வகைகள் உச்சரிக்கப்படாமை, நிச்சயம் தனிப்பட்ட உயர் அதிகாரிகளினதும், சில நாடுகளினதும் செல்வாக்கு உள்ளூட்டப்பட்ட செயற்பாடா என்ற வினாவை மேலுயர்த்தி உள்ளது.

# கல்வி, சுகாதாரத்திலும் அரசியல் விளையாட்டு

டெய்லி மிரர் தலையங்கத்தில் இருந்து
ரம்யன்

முன்னெப்போதையும் விட குற்றச்செயல்களின் எண்ணிக்கையானது நாட்டில் கடல் அலைகள் போல பெருக்கெடுத்து ஓடுவதற்கு குற்றங் கள் அரசியல் மயமாக்கப்படிருப்பதும் அரசியல் குற்றமயமாக்கப்பட்டி ருப்பதுமே காரணம். இதனால் சட்டம் ஒழுங்கு முதலியவை சீர் குலைந்து குழப்பகரமாக மாறுவதால் சட்டமானது செயற்படுத்தப்படாமலே போய் விடுகின்றது.

இன்று, சுகாதாரக் கல்வியானது கட்சி அரசியலுக்குள் சிக்க வைக்கப்பட்டிருப்பது குறித்தும் அது மருத்துவ துறை மீதும், பொது மக்களின் ஆரோக்கியத்தின் மீதும் ஏற்படுத்தி வரும் தாக்கம் குறித்தும் நாம் கவனம் செலுத்தலாம். இந்தக் கட்சி அரசியல் மயமாக்கல் ஆகிய புற்றுநோயானது பல நிறுவனங்களில் உட்புகுந்து நாசம் விளைவித்துள்ளது. அவைகளில் ஒன்று மருந்துகள் தொடர்பான பட்டப்பின் படிப்பு நிறுவனமாகிய மருத்துவக் கல்வித் துறையின் (PGIM) மிக உயர் பீடங்களில் ஒன்றாகும்.

### எதேச்சாதிகார போக்கு

கிடைக்கின்ற நம்பகமான தகவல்களின்படி இந்த நிறுவனத்தினால் புற்றுநோயின் பல அறிகுறிகளில் ஒன்றாகக் கருதப்படக் கூடிய வகையில் குடும்ப மருந்துக்கள் துறையில் MD கற்கைநெறி இரத்து செய்யப்பட்டிருப்பதும் அதற்குரிய பரீட்சை இரத்து செய்யப்பட்டிருப்பதும் சுட்டிக் காட்டப்படுகின்றது. நோயாளிகளின் நற்சேமத்துக்கு முக்கியத்துவம் கொடுப்பதான சுகாதார சேவையினை நிலை நிறுத்த வேண்டும் என்பதில் அக்கறை கொண்டவர்களால் இந்தக் கருத்து வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

இலங்கையில் சுகாதார ஒழுங்கமைப்பினை மேற்கொண்டு வரும் மிக உயர் நிறுவனமான இலங்கை மருத்துவ சபை (SLMC) க்கு 60 இற்கும் மேற்பட்ட மாணவர்கள் "பிஜிஐஎம்" பணிப்பாளருக்கு எதிராகக் குற்றங்கள் அடங்கிய பிரமாணக் கடிதங்களை சமர்ப்பித்துள்ளார்கள். இந்த நிறுவனத்துடன் தொடர்புடைய பல கற்கைநெறி சபைகளின் உறுப்பினர்கள் அப் பதவிகளில் இருந்து விலகியுள்ளார்கள் என்றும் செய்தி கிடைத்துள்ளது. எமது நாட்டில் இப்பொழுது தலைதூக்கி வருவது போன்ற எதேச்சாதிகாரப் போக்கு இந்த நிறுவனத்திலும் ஏற்பட்டு வருவதே அவர்கள் பதவி விலகு வதற்குக் காரணம் என்று கூறப்படு கின்றது. பிஜிஐஎம் உயர் கல்வி அமைச்சின் கீழ் வருகின்றது. அதே சமயம் எஸ்.எல்.எம்.சி. சுகாதார அமைச்சின் கீழ் வருகின்றது. இருக்கும் பிரச்சினையை மேலும் சிக் கலாக்குவதாக இவைகளுக்கிடை யில் சில பல விருப்பங்கள் இப்போது உருவாகியுள்ளன.

பிஜிஐஎம் பணிப்பாளரானவர் சட்டப்படியான எஸ்.எல்.எம். சி. உறுப்பினருமாவார். உயர் கல்வி அமைச்சரானவர் எவ்வாறு சுகாதார அமைச்சின் எல்லையை மீறிச் சென்று அதன் மிக மதிப்பார்ந்த தலைவர் பேராசிரியர் கார்லோ பொன்சேகாவை பதவியிலிருந்து ஓய்வு பெறும் படி அழுத்தம் கொடுத்தார் என்பது கடந்த வாரம் வெளிப்படையாகியிருந்தது. இதற்கு வெளிப்படையான காரணம் என்னெவன்றால் பி.ஜி.ஐ.எம். பணிப்பாளர் எஸ்.எல்.எம். சி.தலைவர் பதவியையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பது உயர் கல்வி அமைச்சரின் விருப்பம். அவ்வாறானால் அமைச்சரால் மிக சுதந்திரமாக மாலபேயில் சர்ச்சைக் குள்ளாகியுள்ள தமது தனியார் மருந்துவக் கல்லூரியை நிறுவிக் கொள்ள முடியும் அத்துடன் தமது வெளிநாட்டு பல்கலைக்கழகங்க ளையும் நிறுவிக் கொள்ள முடியும்.

பேராசிரியர் கார்லோ பொன்சேகாவானவர் நாட்டின் மிக உயர் நிலையில் மதிக்கப்படும் மருத்துவராவார். மருத்துவத்துறையின் உயர் விழுமியங்களையும் கொள்கைகளையும் பேணிக் கொண்டுவரும் அவர் எந்த மனிதருக்கும் "ஆமாம்" போடுவது அவரது குணாம்சமாக இருந்ததில்லை. நல்ல வேளையாக சுகாதார அமைச்சர் தலையிட்டு பேரசிரியர் கார்லோ பொன்சேகாவை அகற்றும் முயற்சிக்கு முற்றுப் புள்ளி வைத்தார். எனவே எஸ்.எல்.எம்.சி. அதன் கண்ணியத்தைத் தொடர்ந்து நிலை நிறுத்திக் கொள்ளும் என்று கருதலாம். ஆனால் அதே விதமாக பிஜிஜஎம் பற்றி கருத முடியாது. அந்த நிறுவனத்தில் அரசியல் அதிகாரம் தலை விரித்தாடுவது கவலை தருவதாகும்.

நோயாளர்களை நட்புடன் பேண வேண்டிய சுகாதார சேவையை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு அரசியல் தலைவர்களும் மருத்துவ நிறுவனங்களிலுள்ள துறைசார் பிரமுகர்களும் கூட்டுறவோடு பணியாற்ற வேண்டிய ஒரு கால கட்டத்தில் இந்த நிலைமை ஏற்பட்டுள்து.

அரசாங்கமானது அரசியல் மேடைகளில் இருந்து கொண்டு சமூக நீதி பற்றி பிரகடனங்கள் செய்து கொண்டிருக்கும் அதே நேரம் சுகாதாரம் மற் றும் கல்வி ஆகிய முக்கிய துறைகளை தனியார் மயமாக்குவதன் மூலம் பணம் சம்பாதிக்க முயல்கிறது என்று மாணவர் குழுக்களும் எதிர் தரப்பு விமர்சகர்களும் குற்றஞ்சாட்டுகிறார்கள். சுகா தாரம் சந்தைப்படுத்தப்படு மானால் ஏழைகள் சாகும்படி விடப்பட்டு விடுவார்கள். கல்வி சந்தைப்படுத்தப்படுமானால் ஏழைகளுக்கு கல்வி நிலையங்கள் மூடப்பட்டு விடும். அவர்கள் அறிவைப் பெறுவது நல்ல தொழில்களைத் தேடிக் கொள்வதற்கான வழிகள் மற்றும் மனித கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதும் அவர்களுக்கு தவிர்க்கப்பட்டு விடும். இதனால் இலட்சக் கணக்கான மக்களின் வாழ்வியல் பழாகிப் போகும்.

அரசியல்வாதிகளும் நிறுவனங்க ளின் தலைவர்களும் தமது சொந்த நலன்களுக்காகவும் புகழுக்காகவும் தமது சுயநல அதிகார ஆசை விளையாட்டுக்களில் ஈடுபடும்போது அவர்கள் பொது மக்களின் வாழ்க்கையுடன் விளையாடுகிறார்கள் என்பதை உணர வேண்டும். இவைகளின் எதிர் விளைவுகளை ஒரு நாள் தமது பதவிகளின் போது செய்த தவறுகளுக்காக அவர்களின் வாழ்வு மயானங்களில் அல்லது சவச் சாலைகளிலும் முடிவுறும் போது அவைகளின் பலன்களை அனுபவித்தே ஆவார்கள்.

**பிஜிஐஎம் உயர் கல்வி அமைச் சின் கீழ் வருகின்றது. அதே சமயம் எஸ். எல். எம்.சி. சுகாதார அமைச்சின் கீழ் வருகின்றது. இருக்கும் பிரச்சினையை மேலும் சிக் கலாக்குவதாக இவைகளுக்கிடையில் சில பல விருப்பங்கள் இப்போது உருவாகியுள்ளன.**



சர்வதேச வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மருதனார்மடம் இராமநாதன் கல்லூரியின் நூலகத்தினால் நூலக தின விழாவும் இராம ஒளிநூல் வெளியீட்டு விழாவும் கல்லூரி அதிபர் திருமதி கி.கமலராணி தலைமையில் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றன. நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீடாதிபதி பேராசிரியர் வி.பி.சிவநாதன் பிரதம விருந்தினராகவும் சிறப்பு விருந்தினராக கலாநிதி செஞ்சொற் செல்வர் ஆறு.திருமுருகனும் கலந்துகொண்டனர். விருந்தினர்கள் மற்றும் ஆசிரியர்கள், நலன்விரும்பிகள் ஊர்வலமாக மேடைக்கு அழைத்து வரப்பட்டனர். (ஒ-86)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மெல்லக் கொல்லும் கழிவுகள்



சி.நற்குணலிங்கம்
நெல்லியடி

மனிதனால் சுற்றாடலுக்கு தினமும் சேர்க்கப்படுகின்ற குப்பைகள், கழிவுகளின் அளவு அதிகரித்துச் செல்கின்றது. எதிர்காலத்திலும் அரசு எதிர்நோக்க வேண்டியுள்ள பிரதான பிரச்சினைகளில் ஒன்றாக இந்தப் பிரச்சினையைக் குறிப்பிடலாம். இலங்கை யில் ஒரு நாளுக்கு உற்பத்தி செய்யப்படுகின்ற குப்பைகளின் அளவு 2740 மெற்றிக்தொன்னென்பதிலிருந்துஇதனை விளங்கிக் கொள்ளலாம்.

**பாதிப்புக்கள்**

மக்களால் கழிவுப் பொருள்கள் ஒழுங்கற்ற முறையில் சில பகுதிகளில் கொட்டப்படும் காரணத்தினால் அங்கு வீசும் காற்றால் சூழல் மாசடைகின்றது. வடிகால்களில் கழிவு நீர் அகற்றப்படாத நிலையில் துர் நாற்றம் வீசுவதும் காற்றால் சூழல் மாசடைகின்றது. அத்துடன் இதனால் நுளம்புகள் பெருக்கமடைந்து நோய்வருவதற்கான அறிகுறிகளும், சுவாச நோய்கள் ஏற்படுவதற்கான வாய்ப்புகளும்உள்ளது.

**போக்குவரத்துக்குப் பாதிப்பு**

குப்பைகள், கழிவுப் பொருள்கள் கண்ட இடங்களிலும் கண்டபாட்டுக்கு கொட்டப்படுவதால் இவை விலங்குகளாலும், பறவைகளாலும் போக்குவரத்துப் பாதைகளில் சிந்தப்படுவதாலும் மக்கள் போக்குவரத்துச் செய்வதில் சிரமங்களை எதிர் கொள்கின்றனர்.

**மாசடைதல்**

இன்று கழிவுகள், குப்பைகளால் என்றுமில்லாத அளவில்சுற்றுச்சூழல் மாசடைதல், இயற்கை வளங்களின் பேரிழப்பு, நஞ்சுப் பொருள்கள் குவிதல், காடுகளின் அழிவு மற்றும் அவற்றினால் ஏற்படும் பேரழிவு, நிலம் மற்றும் நிலத்தடி நீர் மாசடைதல் போன்றன மனித மற்றும் இதர உயிரினங்களுக்கும் ஆபத்தை ஏற்படுத்துகின்றன.

மேலும் சரியாக வடிவமைக்காத, சரியாக நிர்வகிக்காத நிலப் பகுதிகளில் குப்பைகள், கழிவுகள் வீசப்படுவதால் பல வகையான எதிரிடையான சுற்றுச்சூழல் பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. எதிர்க் காற்றுக்கு உட்படும் குப்பைகள், கழிவுகள் அடித்துச் செல்லப்பட்டு மீண்டும் சுத்தம் செய்யப்பட்ட பகுதிகளை அசுத்தமாக்கி மீளவும் சுத்தம் செய்ய வேண்டிய தேவைப்பாட்டை தோற்றுவித்தல், ஊறுவிளைவிக்கும் பூச்சிகளை ஈர்த்தல், மற்றும் ஒழுங்கற்ற குப்பை நிரப்பு நிலங்களில் பொதுவாக கிடைக்கப்பெறும் பக்க விளைவுப் பொருளான மெதேன் வாயு, காபனீரொட்சைட் வாயு போன்றவை, கழிவுப் பொருள்களை காற்றிலா முறையில் மக்கி உருச் சிதைக்கும் போது உற்பத்தியாகின்றன. இவ் வளியானது இந்தப் பகுதியால் மக்கள் செல்ல முடியாத, அண்மித்து வாழ முடியாத நிலையை உருவாக்குவதுடன் இவ் வளியின் துர்நாற்றமானது மேற்பரப்பில் தாவரங்களின் வளர்ச்சியையும் குன்றவைக்கும்தன்மை கொண்டது.

எனவே குப்பைகள், கழிவுகளை வீசும், கொட்டும் விடயத்தில் மக்கள் மிகவும் அவதானத்துடன் நடந்து கொள்ள வேண்டும். இல்லையேல் மக்கள் தாமே தமக்கு தீமையை ஏற்படுத்துவதாக அமையும்.

கழிவுப் பொருள்களை ஒழுங்கற்ற முறையில் வீசுவதால் பல்வேறு வகையான பிரச்சினைகள், நோய்கள் என்பவற்றுக்கு மக்கள் முகங் கொடுக்க நேரிடுகின்றது. இந்தப் பிரச்சினை மக்களால் மக்களுக்கு ஏற்படும் பிரச்சினையாகும். இவற்றிலிருந்து விடு பட பல்வேறு வழிகள் உள்ளன. அவற்றில் மக்கள் கூடிய கவனம் செலுத்துவதன் மூலமும், கழிவுகளால் ஏற்படும் பாதக விளை வுகளை உணருவதன் மூலமும், பொருத்தமான வழி முறைகளைக் கையாளுவதன் மூல மும் இலகுவாக கழிவுகளால் ஏற்படும் பாதிப் புக்களிலிருந்து விடுபடலாம்.

**கழிவு முகாமைத்துவம்**

இந்த நிலையில் இருந்து விடுபட "கழிவு மேலாண்மை" முக்கியமானதாகும் கழிவுப் பொருள் மேலாண்மை என்பது கழிவுப் பொருள்களை சேகரித்தல், கொண்டு செல்லல், பாதிப்பில்லாத உருவுக்கு மாற்றுதல், மீள சுழற்சிக்கு உள்ளாக்குதல் அல்லது நீக்குதல் மற்றும் கழிவுப்பொருள்களை கண்காணித்தல் ஆகிய செயற்பாடுகளை உள்ளடக்கியதாகும்.

கழிவுப் பொருள்களை சரியான முறையில் வடிவமைக்கப்பட்ட மற்றும் நன்கு நிர்வகிக்கப்பட்ட குப்பை நிரப்பு நிலமானது கழிவுப் பொருள்களை அகற்ற, நீக்க, சுகாதாரமானதாகவும் சிறந்த முறையாகவும் ஒப்பீட்டளவில் குறைந்த செலவுடையதாகவும் இருக்கும். ஒரு நவீன குப்பை நிரப்பு நிலவடிவமைக்கும் முறையின் சிறப்பியல்பு களிமண் அல்லது பிளாஸ்ரிக்கால் ஆன அக உறைகள் (Lining) கொண்ட தொட்டிகளை திரவக் கரைசல் வெளியேறாமல் இருக்க தொட்டிகளுக்குள்ளேயே அடக்குவதற்காக அமைப்பதாகும்.

கழிவுப் பொருள்களை எரித்துச் சாம்பல் ஆக்குவது ஒரு சிறந்த முறையாகும். இதனால் திண்மக் கழிவுப் பொருள்கள் நிறையளவில் 20-37 வரைக்கும் குறைவடைகின்றது. ஜப்பானில் இம்முறை பொதுவாக பின்பற்றப்படுகின்றது. நிலப் பற்றாக்குறைப் பிரதேசங்களுக்கும், நாடுகளுக்கும் இம் முறை பொருத்தப்பாடுடையதாகும்.

செடிகளின் இலை, தழை போன்ற பொருள்களை (Plant material) மக்குதல் மற்றும் கெரித்தல் (digestion) போன்ற முறைகளை பயன்படுத்தி கனிமப் பொருளை மக்கி- உருச் சிதைத்து (decompose) விடலாம். இதன் பயனாக கிடைக்கும் கனிமப் பொருளை மீளச் சுழற்சி செய்து கூட்டுரமாக (compost) வேளாண்மைக்கு பயன்படுத்தலாம்.

கழிவுப் பொருள்களை ஒழுங்காக நிர்வகிப்பதன் மூலம் கழிவுப் பொருள் உள்ளடக்கிய சக்தியை அதை நேராக ஒரு எரிபொருள் போல் பயன்படுத்திக் கொள்ளலாம். வெப்ப பக்குவ முறையைக் கையாண்டு மீள் சுழற்சி செய்வதற்கு கழிவுப் பொருள்களை ஒரு எரிபொருளாக சமைக்கவோ அல்லது சூடேற்றவோ பயன்படுத்தலாம்.

கழிவுப் பொருள் நிர்வாகத்தில் முக்கிய முறையாகக் கருதப்படுவது கழிவுப் பொருள் உற்பத்தியாவதை குறைப்பது, புதிதாக பொருள்களை வாங்காது உடைந்த பொருள்களை வீசாது சரி செய்து கூடியளவு உச்சப் பயன்பாட்டை பெறுதல், திரும்ப திரும்ப பயன்படுத்தக் கூடிய வகையில் பொருள்களை வடிவமைத்தல் என்பவற்றில் கூடிய கவனம் செலுத்துதல்.

இலங்கையில் கழிவுப் பொருள் பெரிய ஒரு பிரச்சினையாக உள்ளது. எப்படி வீசுவது, எங்கே வீசுவது, எப்போது வீசுவது என்பவற்றில் மக்களது அக்கறை குறைவாக உள்ளதால் மக்கள் மத்தியில் கழிவு முகாமைத்துவம் பற்றிய விழிப்புணர்வு ஏற்படுத்தப்படல் அவசியம். அதாவது கழிவுப் பொருள் மற்றும் கழிவுப் பொருள் நிர்வாகம் பற்றிய அறிவு, விழிப்புணர்வின் மூலம் வழங்கப்படல் வேண்டும். இல்லையேல்கழிவுப்பொருள்களின்பிரச்சினை மேலும் வலுவடைய வாய்ப்புண்டு. எனவே மெல்லக் கொல்லும் கழிவுகள் விடயத்தில் எல்லா மக்களதும் கவனம் அவ சியமானதாகும்.

# மறக்க முடியாத பெருந்தகை பேராசிரியர் துரைராஜா

**என்றுமே மறக்க முடியாத அமரர் பேராசிரியர் அழகையா துரைராஜாவின் 79 ஆவது பிறந்த தினம் நேற்றாகும்.**

கலாநிதி த.கலாமணி
(சிரேஷ்ட விரிவுரையாளர்),
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

பேராசிரியர் அழகையா துரைராஜா இன்றிருந்தால் அவருக்கு வயது 79 வயதாக ஆகியிருக்கும். தமது ஐம்பத்தொன்பதாவது வயதில் 11.06.1994 இல் அவர் மறைந்தார். அவர் மறைந்து பத்தொன்பது வருடங்கள் கடந்தும் பேராசிரியர் அழ கையா துரைராஜா என்ற அவர் நாமம் இன்றும் வாழ்கிறது. அவர் புகழ் இன்றும் மங்காச் சுடராக ஒளி வீசிக் கொண்டி ருக்கிறது.

நெருக்கடியான ஒரு கால கட்டத்தில் பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொறியியல் பீடத்தின் பீடாதிபதிப் பதவி யைத் துறந்து, யாழ்ப்பாணப் பல்க லைக் கழகத்தின் துணைவேந்தர் பதவியை அவர் பொறுப்பேற்றார். அன்று முதல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் வளர்ச்சிக்காக அரும்பணி ஆற்றினார்.

பேராசிரியர் துரைராஜா தமது பொறியியற்றுறை சார்ந்த நிபுணத்துவத்துடன் கூடிய வர்ணனையாளராக மாத்திரமன்றி, சிறந்த நிர்வாகியாகவும் விளங்கினார். நெருக்கடியான காலகட்டத்தில் வடமராட்சியிலுள்ள தன[illegible]ருந்து சைக் கிளில் வந்[illegible] யாக திகழ்ந்து அந்த நெருடிக்கடியான கால கட்டத்தின் சவால்களை ஏனையோரும் எதிர்கொள்ளத் துணை நின்றார். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பெண் ஊழியர்களும், பெண் விரிவுரையாளர்களும் கூட இந்தச் சவால்களை எதிர்கொண்டு சைக்கிள் ஓடப் பயின்றனர். அதேவேளை தனது நிர்வாகத் துக்கு உட்பட்ட சகல பீடங்களையும், துறைகளையும் ஒருங்கிணைந்து அரவணைத்துச் சென்றதோடு, மாணவர்கள் இடையேயும் அமைதியை நிலைநாட்டினார்.

பேராசிரியர் துரைராஜா சிறந்த ஆய்வாளராகவும் விளங்கி புதிய கோட்பாட்டையும் உருவாக்கினார். பொறியியற்றுறை சார்ந்த சர்வதேச மாநாடுகளிலும் பங்கு பற்றி, தமது துறை சார் நிபுணத்துவத்தை நிறுவி எமது நாட்[illegible]தார். பல்வேறு [illegible]ரைகளை பல்வேறு மாநாடுகளில் படிப்பதற்கென இவர் எழுதி யுள்ளார். மண்ணியல் தொடர்பான நிபு ணத்துவ ஆலோசனைகளையும் அவ்வப் போது வழங்கி வந்தார். பிறநாட்டுப் பல்கலைக் கழகங்களிலும் வருகை விரிவுரை யாளராகவும் பேராசிரியராகவும் பணிபுரிந்தார்.

இக்கட்டான காலகட்டத்தில் உடல் வருத்தத்தையும் பாராது தமிழர் அபிவிருத்திக்காக உழைத்த வேளையில், உடல்நலம் பாதிப்படைந்த நிலையிலும் பேராசிரியர் துரைராஜா தனது கடமையிலிருந்து வழுவாது அவற்றை மேற்கொண்டார்.

எளிமையாகவும், பழக இனியவராகவும், நேர்மையானவராகவும் விளங்கி எல்லோருடைய மனங்களையும் அவர் கவர்ந்தார். எவரையும் வசீகரித்த அவரது புன்னகை என்றும் மறக்கக் கூடியதன்று. இதனாலேயே அவர் என்றும் எம் எல்லோர் மனங்களிலும் வாழ்கிறார். அவரின் மங்காப் புகழ் இன்று சுடர் விட்டு பிரகாசித்துக் கொண்டிருக்கின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தண்ணீர் இறைக்கும் இயந்திரம் திருட்டு

யாழ்ப்பாணம், நவ.11

வவுனியா செட்டிக்குளம் பகுதியில் 99 ஆயிரம் ரூபா பெறுமதியான தண்ணீர் இறைக்கும் இயந்திரம் களவாடப்பட்டுள்ளமை தொடர்பில் செட்டிகுளம் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கடந்த 5 ஆம் திகதி இடம்பெற்ற குறித்த திருட்டு தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர்.

மெனிக் பாமைச் சேர்ந்த சந்தேக நபர் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுள்ளார்.

இதேவேளை முல்லைத்தீவு, கேப்பாபிலவு, கோம்பாவில் பகுதியில் 2 லட்சத்து 60 ஆயிரம் மில்லி லீற்றர் கோடாவை வைத்திருந்த பெண் ஒருவர் சந்தேகத் தின் பெயரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த 4ஆம் திகதி கோம்பாவில் பிரதேசத்தில் கசிப்பு உற்பத்தி செய்வதற்கு பயன்படுத்தப்படும் கோடாவை வீட்டில் வைத்திருப்பதாக பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையிலேயே குறித்த பெண் கைது செய் யப்பட்டுள்ளார். (வ-14)




வடமராட்சி சுருக்கெழுத்துக் கழகத்தின் 28ஆவது ஆண்டு விழாவிலும், பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட பருத்தித்துறை மாவட்ட நீதிமன்றப் பதிவாளர் எஸ்.எம்.நஸீர், மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதைப் படத்தில் காணலாம். (வ-5)

### கடைகள் உடைத்து திருட்டு

## 4 முறைப்பாடுகள் கடந்த வாரத்தில்

யாழ்ப்பாணம், நவ.11

குடாநாட்டில் கடந்த வாரம் வீடு மற்றும் கடைகளை உடைத்து ஒரு லட்சத்து 32 ஆயிரத்து 390 ரூபா பெறுமதியான உடைமைகள் களவாடப்பட்டுள்ளமை தொடர்பாக 4 முறைப்பாடுகள் பதியப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பாக மேலும் தெரிவித்துள்ளதாவது:-

நல்லூர் வைமன் வீதிப் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி கடை ஒன்றை உடைத்து 23 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளும், இணுவில் மேற்குப் பகுதியில் கடந்த மாதம் 31 ஆம் திகதி கடை ஒன்றை உடைத்து 22 ஆயிரத்து 980 ரூபா பெறுமதியான உடைமைகளும், சுன்னாகம் பகுதியில் கடந்த 2 ஆம் திகதி கடையொன்றை உடைத்து 19 ஆயிரத்து 410 ரூபா பெறுமதியான உடைமைகளும், கோப்பாய் நாவலடி மத்தியிலுள்ள வீடு ஒன்றை உடைத்து 67 ஆயிரம் ரூபா பெறுமதியான உடைமைகளும் களவாடப்பட்டுள்ளன.

களவுகளுடன் தொடர்புடைய சந்தேகநபர்கள் தொடர்பான விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (வ-14)

## அங்கத்தவர் இணைப்பில் சங்கங்கள் ஆர்வமில்லை

### மாவட்ட கூ.ஆணையாளர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், நவ.11

குடாநாட்டில் உள்ள அனைத்து பலநோக்கு கூட்டுறவுச் சங்கங்களிலும் புதிய அங்கத்தவர்களை இணைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனினும் இந்தத் திட்டத்தில் சங்கங்கள் அதிகளவில் ஆர்வம் காட்டவில்லை என்று யாழ்.மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் வி.கே.அருந்தவநாதன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

சங்கங்களை மேம்படுத்தும் நோக்குடன் 91 ஆவது சர்வதேச கூட்டுறவுத் தினத்தை முன்னிட்டு புதிய அங்கத்தவர்களை சங்கத்தில் இணைக்கும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இந்தத் திட்டத்துக்கு அமைவாக ஊர்காவற்றுறை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் 504 புதிய அங்கத்தவர்களை இணைத்துள்ளது. யாழ்.மாவட்டத்தில் அதிக அங்கத்தவர்களை இணைத்துக் கொண்ட பெருமை இந்த சங்கத்தையே சேரும்.

எனினும் ஏனைய சங்கங்கள் பெரியளவில் இந்தத் திட்டத்தில் ஆர்வம் காட்டவில்லை. இதனை மாற்றி புதிய அங்கத்தவர்களை இணைத்துக் கொள்வதன் ஊடாக சங்கங்களை வளப்படுத்த அவை முன்வரவேண்டும் எனவும் தெரிவித்துள்ளார். (வ-14-17)

தருவது வித்தியா

## இன்றைய நாள்

### உங்களுக்கு எப்படி?



**மேடம்**: திறமையுடன் செயற்பட்டு சில காரியங்களை முடிப்பீர்கள். மனக்குழப்பங்கள் நீங்கும். உத்தியோகத்தில் மேலதிகாரியின் பாராட்டைப் பெறுவீர்கள். வேற்று மதத்தினரால் நன்மை கிடைக்கும்.



**இடபம்**: சவால்கள், ஏமாற்றங்களைத் தாண்டி வெற்றியடைவீர்கள். வெளிவட்டாரத்தில் மதிக்கப்படுவீர்கள். வீண் பதற்றம், அலைச்சல் நீங்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் பெறுவீர்கள்.



**மிதுனம்**: கடந்த காலத்தை நினைத்து அவ்வப்போது பதற்றமடைவீர்கள். நல்ல வாய்ப்புகளையெல்லாம் பயன்படுத்தாமல் விட்டுவிட்டோமே என்றெல்லாம் வருத்தப்படுவீர்கள். உத்தியோகத்தில் மறைமுக விமர்சனங்கள் உண்டு.



**கடகம்** : வெளியூரிலிருந்து நல்ல செய்தி வந்து சேரும். உத்தியோகத்தில் வேலை சுமை குறையும். வாழ்க்கைத்துணையின் ஒத்துழைப்பு அதிகரிக்கும்.



**சிங்கம்**: தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு சில வேலைகளைச் செய்து முடிப்பீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொல்லைகள் அகலும்.



**கன்னி**: எதிர்பார்த்த உதவிகள் தக்க சமயத்தில் கிடைக்கும். பிரியமானவர்களுக்காக அதிகம் செலவு செய்வீர்கள். வெளியூர் பயணங்கள் மகிழ்ச்சி தரும். வியாபாரத்தில் புதிய முயற்சிகளால் இலாபத்தை அதிகரிப்பீர்கள்.

**நாளை**

ஐப்பசி-26 செவ்வாய்க்கிழமை 12.11.2013
திதி: தசமி மு.இ.10.47 வரை
நட்சத்திரம்: சதயம் பி.ப.12.04 வரை
சுபநேரம்: 10.36 - 12.06 வரை
இராகுகாலம்: 03.06 - 04.36 வரை



**துலாம்**: எண்ணம்போல் செயற்பட வேண்டும் என எண்ணுவீர்கள். சொத்து சம்பந்தப்பட்ட பிரச்சினைகளுக்கு சுமுகமான தீர்வு கிட்டும். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் விலகும். பயணங்களால் ஆதாயம் உண்டு.



**விருச்சிகம்**: பேச்சில் கம்பீரம் பிறக்கும். தடைபட்ட காரியங்களை உடனே முடிப்பீர்கள். ஆன்மிகத்தில் நாட்டம் அதிகரிக்கும். வெளியூர் பயணங்களால் ஆதாயம் உண்டு.



**தனுசு**: எதிர்பார்ப்புகள் பூர்த்தியாகும். உங்களைச் சுற்றியிருப்பவர்களால் இருந்து வந்த தொந்தரவுகள் விலகும். உத்தியோகத்தில் சக ஊழியர்களின் ஆதரவு கிடைக்கும்.



**மகரம்**: ஒரே நாளில் முக்கியமான நான்கைந்து வேலைகளை பார்க்க வேண்டி வரும். மற்றவர்களை முழுமையாக நம்பிக் கொண்டிருக்க வேண்டாம்.



**கும்பம்**: யாரையும் பகைத்துக் கொள்ளாதீர்கள். முக்கிய கோப்புகளைக் கையாளும் போது அலட்சியம் வேண்டாம். வியாபாரத்தில் வேலையாள்கள் அதிருப்தி அடைவார்கள்.



**மீனம்**: சோர்வு நீங்கி புத்துணர்ச்சியுடன் காணப்படுவீர்கள். நீங்கள் பார்க்க நினைத்த [illegible] இருக்கும். வியாபாரத்தில் மறைமுகப் போட்டிகளை வெல்வீர்கள்.

## சுடோக்கு

### என் விளையாட்டு

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | | | | 8 | | 6 | 4 | 1 |
| 2 | | 6 | | | | | 9 | |
| | 1 | | | | | 8 | 7 | |
| | 4 | | | | 7 | | | 9 |
| 8 | 6 | 9 | | 3 | | 2 | 1 | 7 |
| 5 | | | 2 | | | | 8 | |
| | 2 | 5 | | | | | 3 | |
| | 9 | | | | | 7 | | 4 |
| 7 | 3 | 1 | | 2 | | | | 5 |

### நேற்றைய சுடோக்கின் விடை

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 9 | 5 | 7 | 3 | 8 | 2 | 6 | 4 | 1 |
| 2 | 8 | 6 | 7 | 4 | 1 | 5 | 9 | 3 |
| 3 | 1 | 4 | 6 | 9 | 5 | 8 | 7 | 2 |
| 1 | 4 | 2 | 8 | 6 | 7 | 3 | 5 | 9 |
| 8 | 6 | 9 | 5 | 3 | 4 | 2 | 1 | 7 |
| 5 | 7 | 3 | 2 | 1 | 9 | 4 | 8 | 6 |
| 4 | 2 | 5 | 9 | 7 | 6 | 1 | 3 | 8 |
| 6 | 9 | 8 | 1 | 5 | 3 | 7 | 2 | 4 |
| 7 | 3 | 1 | 4 | 2 | 8 | 9 | 6 | 5 |


சுடோக்கு ஒரு எண் விளையாட்டு. தர்க்க ரீதியான ஒழுங்கு படுத்தல்தான் இதன் அடிப்படை. 1-9 வரையான எண்களை ஒழுங்குபடுத்தி ஒரே கோலத்தை ஏற்படுத்த வேண்டும். இந்தப் பெட்டி 9 நிரல்களையும் 9 நிரைகளையும் கொண்டது. 3X3ஆக உள்ளேயும் 3 நிரல்களையும் 3 நிரைகளையும் கொண்டிருக்கிறது. (உள்ளே இருப்பவற்றை பெட்டிகள், கட்டங்கள், பகுதிகள், உபசதுரங்கள் என்றும் அழைக்கிறார்கள்). இந்த ஒவ்வொரு நிரையிலும் நிரலிலும் 1-9 வரையான எண்கள், இரண்டு தடவைகள் (மீண்டும் மீண்டும்) வரா நிரப்பப்பட வேண்டும். அவ்வாறு நிரப்பப் படுகையில் உள் பெட்டிகளுக்குள்ளும் அவ்வாறே 1-9 இலக்கங்கள் இரட்டைப் படாமல் வரவேண்டும். சில கட்டங்கள் ஏற்கனவே நிரப்பப்பட்டிருக்கும் தர்க்க ரீதியில் ஏனையவற்றை நிரப்ப வேண்டியதே வேலை. சுடோக்கு என்பது ஜப்பானியச் சொல். அதன் பொருள் தனி எண் என்பதாகும். 1986 இல் ஜப்பானிய நிறுவனம் நிகோலி இதனை அறிமுகப்படுத்தி வெற்றிகரக பரவலாக்கியது. 2005இல் இது உலக அளவில் பிரபல்யமானது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடையாத விலங்கு

சீதன முறைமை என்பது நிலவு டைமை யின் கீழ் ஆணாதிக்க வரம்புகளுக்கு உட் பட்டதாகும். இந்த நடைமுறை சாதியம் போன்று தமிழ்ச் சூழலில் மிகவும் கெட்டி யானதாக இருந்து வருகின்றது. பெண் பிள்ளை களைப் பெற்ற பெற்றோர் தமது இளமைக் காலத் திலிருந்தே இச் சீதனம் கொடுப் பதைத் தமது கடமை என மனதில் வைத் துக் கடும் உழைப் பிலும் சேமிப்பிலும் ஈடுபட்டு வருவது மரபாக எழுதப்படாத விதியாகப் பின்பற்றப் படுகிறது. தமது அன்றாட உணவைக் கூடக் கட்டுப்படுத்தி தமது பெண்களைக் கரை சேர்க்கவெனப் பாடுபடுகின்றனர்.

சுபானுஜன்



**தெ**ன்னாசியப் பிராந்தியம் முழுவதையும் எடுத்து நோக்கும் போது ஏனைய ஒடுக்குமுறைகள் போன்று பெண்கள் மீதான ஒடுக்குமுறை என்பது பல்வேறு வடிவங்களில் நீடித்து வருகின்றது. அதில் ஒன்றே சீதனம் . பெண்களுக்கான திருமண நிறைவேற்றத்திற்கு இச் சீதனம் என்பது ஒரு கட்டாய நிபந்தனையாக இருந்து வருகிறது.

இலங்கையில் இச் சீதன முறையானது பரந்தளவில் பல்வேறு அளவுகளில் காணப்படுகிறது. சிங்கள மக்களிடம் குறைந்தளவிலும் தமிழ், முஸ்லிம், மலையகத் தமிழ் மக்கள் மத்தியில் வெவ்வேறு அளவுகளிலும் இருந்து வருகிறது. இச் சீதன முறைமையினால் பாதிக்கப்படுவது பெண்கள் மட்டுமன்றி அவர்களது பெற்றோர், சகோதரர்களாகவும் காணப்படுகின்றனர். திருமண வயதை அடைந்துள்ள நிலையில் சீதனம் கொடுக்க வசதியற்ற குடும்பச் சூழலில் முதிர்கன்னியர் என்ற நிலையில் பல ஆயிரக்கணக்கான இளம் பெண்கள் சமூகத்தில் இருந்து வருவதை அவதானிக்க முடியும். திருமண வாழ்வில் ஈடுபடவும் கணவன், குழந்தைகள், குடும்பம் என்பதனுள் தம்மை ஈடுபடுத்தவும் இளம் பெண்கள் விரும்பிய போதும் அவ்வாறு செயற்படுவதற்குச் சீதனம் என்ற அவமானகரமான முறையானது தடையாகவே இருந்து வருகிறது. இதனால் முதிர்கன்னியர்களாகி வரும் இளம் பெண்கள் அனுபவித்து வரும் சமூக வேதனைகளும் சோதனைகளும் சொல்லில் அடங்காதவைகளாகும்.

இச் சீதன முறைமை என்பது நிலவுடைமையின் கீழ் ஆணாதிக்க வரம்புகளுக்கு உட்பட்டதாகும். இந்த நடைமுறை சாதியம் போன்று தமிழ்ச் சூழலில் மிகவும் கெட்டியானதாக இருந்து வருகின்றது. பெண் பிள்ளைகளைப் பெற்ற பெற்றோர் தமது இளமைக் காலத் திலிருந்தே இச்சீதனம் கொடுப்பதைத் தமது கடமை என மனதில் வைத்துக் கடும் உழைப்பிலும் சேமிப்பிலும் ஈடுபட்டுவருவது மரபாக எழுதப்படாத விதியாகப் பின்பற்றப்படுகிறது. தமது அன்றாட உணவைக் கூடக் கட்டுப்படுத்தி தமது பெண்களைக் கரை சேர்க்கவெனப் பாடுபடுகின்றனர். தத் தமது ஆண் பிள்ளைகளுக்குப் பெரும் குடும்பப் பொறுப்பு இருப்பதாகச் சிறு வயதில் இருந்தே மூளையில் பதிய வைத்து அக்கா, தங்கைக்கு சீதனம் வழங்குவது ஆண் சகோதரர்களின் தவிர்க்கவியலாத கடமையென விதிக்கப்படுகிறது. தமது பெண் சகோதரர்களுக்கு சீதனம் கொடுப்பதையே லட்சியமாகக் கொண்டு உள்நாட்டிலும் வெளிநாடுகளிலும் பணம் தேடுவதற்காகக் கடும் உழைப்பில் ஈடுபடும் ஆண்கள் பலர் நாற்பத்தைந்து ஐம்பது வயதாகியும் திருமணம் செய்யாது இருந்து வருவதையும் பல இடங்களில் காண முடியும்.

ஒரு பெண் கல்வி கற்று அரச தொழில் பெற்று மாதாந்தம் நிரந்தர வருமானம் பெறுபவராக இருந்தும், கூட அப் பெண்ணுக்கு சீதனம் என்ற பெயரில் லட்சங்களும் தங்கமும் நிலமும் வழங்கியே ஆக வேண்டிய நிர்ப்பந்தம் நமது தமிழ்ச் சூழலில் நிலைத்து நீடித்து வருகின்றது. அவ்வாறு ஆண் வீட்டார் கேட்டும் சீதனத்தை கடன்பட்டுக் கொடுத்து தமது பெண்ணைக் கரைசேர்க்கும் பெற்றோர் அக்கடனுக்குத் தமது ஆண் மகனைப் பொறுப்பாக்குவதுடன் அதே மகனுக்குப் பெண் பார்க்கும் போது தாம் மகளுக்குக் கொடுத்த அளவையும் விடக் கூடுதலாகச் சீதனம் பெற்றுக் கொள்ளவும் முன்நிற்கின்றனர். எனவே சீதனம் கொடுப்பதும் வாங்குவதும் ஒரு சுழல் வட்டத்தில் தொடர்கிறது. இதனால் ஏற்படும் துன்ப துயரங்கள் பாதிப்புக்கள் யாவும் ஒட்டு மொத்த சமூகத் துயரமாகவும் அவமானமாகவும் தொடருவதையிட்டுப் பழைமைபேண்வாதிகள் கவலைப்படுவதில்லை. அதனை நியாயப்படுத்தவே முன்நிற்கின்றனர்.

மேலும் இச் சீதன முறைமையை தமிழர்களிடையே பின்பற்றப்பட்டு வரும் தேச வழமைச் சட்டம் வலுவாக்கி நிற்கிறது. அத்துடன் மதம், பண்பாடு, மரபு, வழமை, குடும்பக் கௌரவம் என்பனவும் சீதன முறைமையைச் செழுமைப்படுத்தி நிற்கின்றன. ஊடகங்கள் எதுவுமே இச் சமூகப் பிற்போக்குத்தனம் அல்லது பெண்கள் மீதான அநீதி பற்றிக் கேள்வி எழுப்பிக் கொள்வதில்லை. இன்றும் தமிழ், ஆங்கில ஊடகங்களில் திருமணப் பந்தம் தேடும் விளம்பரங்களில் சாதி பற்றித் தவறாது குறிப்பிடப் படுவதுடன் சீதனம் பேசித் தீர்க்கப்படும் அல்லது தகுந்த சீதனம் வழங்கப்படும் என்றே வாராந்தம் வந்து கொண்டிருக்கிறது. தமிழர்கள் மத்தியில் மண்ணடிமை, பெண்ணடிமை, சாதிய டிமை போன்ற கசடு கொண்ட ஒடுக்குமுறைகளும் அடிமைத்தனங்களும் நீடிக்கும் நிலையில் எவ்வாறு இனவிடுதலை என்பதைச் சாத்தியமாக்க முடியும். இதனை எந்தத் தமிழ்த் தேசிய வாதிகளாவது காதில் போடத் தயாரா? தமிழ் மொழி தமிழ் இனம் எனச் சிலிர்த்து தமது தொன்மை, மேன்மை பற்றி வாய் கிழியப் பேசும் எந்தக் கனவானும் தமிழர் மத்தியிலான இவ் இழிவுகள் பற்றிப் பேசுவதில்லை.

எனவே தமிழ்த் தேசிய இனம் பேரினவாத முதலாளித்துவ இன ஒடுக்குமுறையால் மட்டுமன்றி தமக்குள் தேக்கி வைத்திருக்கும் இரண்டாயிரம் ஆண்டுகால நிலவுடைமை வழி வந்த பழைய சுமைகளாலும் ஒடுக்கப்பட்டு வருகின்றது. அதில் பெண் ஒடுக்குமுறையின் ஓர் அம்சமாகக் காணப்படுவது சீதனமாகும். இச் சீதன முறையை ஒழிப்பதற்குரிய சமூக விழிப்புணர்வை மாற்றுக் கருத்துப் பரப்புரைகளின் மூலம் முன்னெடுக்க வேண்டும்.

சீதனம் கொடுப்பதும் இல்லை. வாங்குவதும் இல்லை என்பது நடைமுறை யாக்கம் பெறும் வகையில் பரந்து பட்ட இயக்கம் முன்னெடுக்கப்பட வேண்டும். மேட்டுக்குடி உயர்வர்க்கக் குடும்பங்களில் சீதனம் ஒரு சமூக அந்தஸ்தாகவும் தனிச் சொத்துடமை பேணுதலாகவும் சொத்து விரிவாக்கமாகவும் முன்னெடுக்கப்படுகிறது. அதுவே சாதாரண உழைக்கும் மக்களுக்கு குறிப்பாகப் பெற்றோருக்கும் பிள்ளைகளுக் கும் பெண்களுக்கும் ஒருவகையான உடைக்க முடியாத விலங்காக இருந்து வருகின்றது. இதனை உடைக்கப் பெண்கள் மட்டுமன்றி சமூக அக்கறை மிக்க ஆண்களும் மாற்றுக் கருத்துக்களை அறிவியல் பூர்வமாக முன் வைக்க வேண்டும்.

## கூண்டுக் கிளி

கூண்டில் கிளி
படபடத்ததுசிறகடித்து
துடிதுடித்தது.
சிறகில் வண்ணங்கள்
கழுத்தில் அணிகலன்
அணியப்படும் வரை .
பின்
சொன்னதைச்...
சொல்லத் தொடங்கிவிட்டது.
கூண்டு திறக்கப்பட்டது.
பறந்த கிளி மீண்டும்
வழியறியாது
கூண்டிற்குள் அமர்ந்தது.
[illegible]
கூண்டைத்தூக்கிப்
பறந்தது.
மலைகளுக்கிடையில்
வெகுஉயரத்திலிருந்து
கூண்டை விடுத்தது
கூண்டுக்கம்பிகள்
உருத்தெரியாமல்
சிதறியதைப்
பரவசத்துடன் பார்த்தது.
வழியறிந்தது பறந்தது.
[illegible]ற்கு...
கூண்டுகளைத் தேடி.........!



சாரங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆத்மசாந்திப் பிரார்த்தனை

அமரர்
**பரமு இராசரத்தினம்**
[இளைப்பாறிய அதிபர்]



உதிப்பு
06 . 09 . 1925

உதிர்வு
10 . 10 . 2013

கடந்த 10.10.2013 அன்று கனடாவில் இறைபதமடைந்த எமது அன்புத் தெய்வத்தின் மறைவுச் செய்தி அறிந்துவருகை தந்த அனைத்து உள்ளங்களுக்கும் எமது மன்மார்ந்த நன்றிகள். இன்று (11.11.2013) திங்கட்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதியபோசனத்திலும் பங்குபற்றுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

16/11, புகையிரத நிலைய ஒழுங்கை,
சாவகச்சேரி.
(C/2782)(3.6.4)
குடும்பத்தினர்.

# 7ஆம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
18.04.1928

மறைவு
30.10.2006

அமரர்
**செல்லையா தியாகராஜா**
(இளைப்பாறிய தொழில்நுட்ப உத்தியோகத்தர் தரம்-1)

அன்பிற்கும் பண்பிற்கும் இலக்கணமாய் வாழ்ந்து-எமை
அவனியிலே வாழ்வாங்கு வாழவைத்த தந்தையே!
நித்தமும் உங்களது ஆத்மசாந்திக்குப் பிரார்த்திக்கின்றோம்.

"ஸ்ரீஅகம்"
சுதுமலை வடக்கு,
மானிப்பாய்.
மனைவி, மக்கள், மருமக்கள்,
(39971)(4.6.3) பேரப்பிள்ளைகள்.

# நிறைவு நிகழ்வும் பரிசில் வழங்கலும்

சாவகச்சேரி பிரதேச சபையின் நாவற்குழி பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு வாசகர்களுக்கான இணையத் தள ஆரம்ப நிகழ்வும், தேசிய வாசிப்பு மாத நிறைவு நாள் நிகழ்வும் பரிசில் வழங்கலும் நாளை மறுதினம் புதன்கிழமை பி.ப. ஒரு மணிக்கு பொது நூலக மண்டபத்தில் இடம் பெறும்.

பிரதேச சபை தலைவர் சி.துரைராசா தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வுகளுக்கு முதன்மை விருந் தினராக வடமாகாண சபை அவைத் தல்லைவர் சி.வீ.கே. சிவ ஞானம் கலந்து கொள்வார்.

சிறப்பு விருந்தினர்களாக நாவற்குழி மகா வித்தியாலய அதிபர் திருமதி வ.மேக லிங்கம், பிரதேச சபைச் செயலாளர் செல்வி சி.தர்சினி, சனசமூக அலுவலர் திருமதி செ.ஜெக தீஸன் ஆகியோரும் கலந்து கொள்வர்.

எழுத்தாளர் பி.முத்துலிங்கம் கௌரவிக்கப் படல் நூல்கள் அன்பளிப்பாகப் பெற்றுக் கொள் ளல், அன்பளிப்பாக வழங்கல், இலவச அங்கத் துவம் வழங்கல், கணினி அன்பளிப்பு, இணைய வசதிகளை ஆரம்பித்தல், ஐந்தாம் தரப் புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தி பெற்ற மாணவர்கள் கௌர விப்பு ஆகியவையும் தேசிய வாசிப்பு மாதத்தினை முன்னிட்டு நடத்தப்பட்ட போட்டிகளில் வெற்றி பெற்றோருக்கு பரிசில்கள் வழங்கலும் இதன்போது இடம்பெறும். (ந-9)

# கலந்துரையாடல்

சுகாதார சுதேச வைத் தியத்துறை அமைச்சர் மற்றும் தனியார் ஆயுள்வேத வைத்தியர் களுக்குமிடையிலான கலந்துரையாடல் நாளை செவ் வாய்க்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு சுதேச வைத்தியத்துறை அமைச் சின் கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்தக் கலந்துரையாடலில் வடமாகாணத் தில் உள்ள சகல தனியார் ஆயுள்வேத வைத் தியர்கள் அனை வரையும் கலந்துகொள்ளு மாறு வடமாகாண சுதேச மருத்துவத் திணைக் கள ஆணையாளர் வைத்தியர் திருமதி சி.துரைரட்ணம் அறிவித்துள்ளார். (ந-14)

# மூன்றாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்
01.02.1939

மறைவு
15.11.2010

அமரர்
**இராசையா கார்த்திகேசு**
(இளைப்பாறிய வடமாகாண வருமானவரி பொறுப்பதிகாரி)

குடும்பத்தினர்.
(39857) (6.3.4)
39/2,
சோமசுந்தரம் லேன்,
யாழ்ப்பாணம்.

# இரண்டாண்டு நினைவலைகள்



பிறப்பு
30.04.1941

இறப்பு
19.11.2011

அமரர்
**கதிரிதம்பி வன்னியசிங்கம்**
திதி: நவமி

பாசக்கடல் வற்றிப்
போனதுவோ இரண்டாண்டுகள்?
நேசக் கரையின்னும் காயவில்லை
எம் நெஞ்சில் மோதும் உம் நினைவலைகள்
இன்றைக்கும் ஓயவில்லை.......

பழைய வீதி, கோப்பாய் தெற்கு,
கோப்பாய்.
(39832)(3.4.6)
குடும்பத்தினர்.

# விண்ணக வாழ்வின் இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

சீவியத்தில் நேசித்தோம்
மரணத்திலும்
மறவோம் அப்பா!



தோற்றம்
01.01.1934

மறைவு
11.11.2011

அமரர்
**கபிரியேல்பிள்ளை மரியாம்பிள்ளை**

ஈராண்டுகள் மறைந்துவிட்டன அப்பா!
அகலுமா உங்கள் பிரிவின் சோகம்
மாண்டவர் மீண்டும் வருவதில்லை
மறையுமா உங்கள் நினைவின் பாசம்
குடும்ப ஒளிவிளக்காய்த் திகழ்ந்த
அன்புத் தந்தையே!
எங்களை நிர்க்கதியாய் விட்டு
எங்கு சென்றீர்கள் அப்பா!
காலங்கள் ஆயிரம் போனாலென்ன
மறக்க முடியுமா உங்கள் நினைவை
உலகில் உயிருள்ள வரைக்கும்
உங்கள் நீங்காத நினைவுகள்
எம்முடன் தொடரும்.

சில்லாலை வடக்கு,
பண்டத்தரிப்பு.
(39820) (7.6.3)
குடும்பத்தினர்.

# இரண்டாம் ஆண்டு நினைவலைகள்

தோற்றம்
11*05*1968



மறைவு
11*11*2011

அமரர் **சிவசுப்பிரமணியம் தயாபரன்**
(அதிபர், கரம்பைக்குறிச்சி அ.த.க. பாடசாலை)
(Sc.Trd, BA, Dip in Edu, MA in Planing, M.Ed)

வாழ்க்கை என்னும் நீரோட்டத்தில்
ஆண்டுகள் இரண்டு போய்விட்டதே
நீ வாழ்ந்த நாள்கள் யாவும்
மற்றவர்க்கு உதவி செய்தாய்
மனைவியின் உயர்வுக்காய்
உறவினரின் நல்வாழ்வுக்காய்
ஊரவர்க்கு உத்தமனாய் வாழ்ந்தாயே!
இன்று எம்மைத் தவிக்கவிட்டு எங்கு சென்றாய்
உமது நல்ல அறிவுரையால் நாம் இன்று
தலை நிமிர்ந்து நிற்கின்றோம்
அதைக் காண மீண்டும் நீ எம்முடன் வாராயோ!
நீ போன பாதை நீண்ட நெடும் பாதையோ?
மீண்டும் நீர் எவ்வுருவில் வருவீரோ - என
ஏங்கித் தவிக்கின்றோம்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

[illegible] மேற்கு,
மீசாலை.
(சி/12229) (7.6.3)
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாரணர் அபிவிருத்தி தொடர்பாக கல்வி அமைச்சருடன் சந்திப்பு

யாழ்ப்பாணம், நவ.11

வடக்கு மாகாண சபையின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சரை கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினர் கடந்த 28 ஆம் திகதி திங்கட்கிழமை சந்தித்தனர்.

இதன்போது 2015 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் இடம்பெறுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள 'தேசிய ஜம்போரி' தொடர்பாகவும் ஜம்போரி அமையவுள்ள இடத்தை ஒதுக்கீடு செய்தல் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதில் கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்துக்கான தலைமைக் காரியாலயத்தை அமைத்தல், சின்னம் பெற்றவர்கள் அனைவரையும் ஒருங்கிணைத்து எதிர்காலத்தில் சாரணியத்தை முன்னேற்றுவதற்கு ஆலோனை, வடமாகாண சாரணர்களுக்குப் பயிற்சி முகாம் வழங்குவதற்கான நிலம் பெறுதல் என்பன தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இவை தொடர்பாக அமைச்சரால் உரியவர்களுக்குப் பணிப்புரைகளும் வழங்கப்பட்டன.

இந்தச் சந்திப்பில் மாவட்ட ஆணையாளர் கே.விக்னராஜா, கௌரவ ஆணையாளர் எம்.புவனேந்திரன், அபிவிருத்தி, பொதுத் தொடர்புகள் மற்றும் ஊடகத்துக்கான உதவி மாவட்ட ஆணையாளர் வை.கேதீசன், நிர்வாகத்துக்கான உதவி மாவட்ட ஆணையாளர் எஸ்.விக்கினேஸ்வரன், சாரணர் பிரிவு உதவி மாவட்ட ஆணையாளர் எம்.ஜெகதீஸ்வரன், திரிசாரணர் பிரிவு உதவி மாவட்ட ஆணையாளர் ஈ.தவகோபால், தென்மராட்சி பிரதேச உதவி மாவட்ட ஆணையாளர் என்.கருணாகரன், பளைப் பிரதேச உதவி மாவட்ட ஆணையாளர் எஸ்.செல்வம் ஆகியோர் அடங்கிய குழுவினர் கலந்துகொண்டனர். (க)



வடக்கு மாகாண சபை யின் கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சரை கிளிநொச்சி மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினர் சந்தித்தனர்.

# திருவாசகர் விழாவுக்கான பண்ணிசைப் போட்டி

வடமராட்சி, நவ.11

ஆரம்பமாகவுள்ள திருவெம்பாவைக் காலத்தில் தொண்டமானாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை, பண்பாட்டுப் பேரவை நடத்தும் திருவாசக விழாவையொட்டி மாணவர்களிடையே பண்ணிசைப் போட்டியை நடத்தவுள்ளது.

தரம்- 5 தொடக்கம் 10 வரையான மாணவர்கள் இடையே நடத்தப்படும் இந்தப் போட்டியில் தரம்-5, 6 மாணவர்கள் சிவ புராணத்திலும் தரம் 7, 8 மாணவர்கள் திருவெம்பாவையிலும் தரம்- 9,10 மாணவர்கள் திருப்பள்ளி எழுச்சியிலும் நடுவர்கள் கேட்கும்பாடல்களைமோகன ராகத்தில் பாடிக்காட்ட வேண்டும்.

அத்துடன் போட்டியில் பங்குபற்றும் அனைத்துத் தர மாணவர்களினதும் சமய பாடம் தொடர்பான பொது அறிவும் எழுத்து மூலம் பரீட்சிக்கப்படும்.

போட்டியில் பங்குபற்றும் மாணவர்கள் கல்வி கற்கும் தரம், பாடசாலை, பிறந்த திகதி என்பன வற்றைக் குறிப்பிட்டு அதிபர் அல்லது வகுப்பாசிரியரால் உறுதிப்படுத்தப்பட்டு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் திருவாசகப் போட்டி ஏற்பாட்டுக் குழு, சந்நிதியான் ஆச்சிரமம், செல்வச்சந்நிதி தொண்டமானாறு என்ற முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

பண்ணிசைப் போட்டிகள் எதிர்வரும் டிசெம்பர் மாதம் 8 ஆம் திகதி நடைபெறும்.

வெற்றிபெறும் மாணவர்களுக்கான பரிசில்கள் டிசெம்பர் 13 ஆம் திகதி இடம்பெறும் திருவாசக விழாவில் வைத்து வழங்கப்படும். (வ-8)

# சங்கானை- அரசடி வீதி சீராக்கப்படுமா?

## வலி. மேற்கு மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், நவ.11

வலி.மேற்கில் தினமும் ஆயிரக்கணக்கானோர் பயணிக்கும் சங்கானை- அரசடி வீதியைக் கடந்த 40 வருடங்களாக பிரதேச சபை புனரமைக்க முன்வரவில்லை.

இந்த விடயத்தை உள்ளூராட்சி அமைச்சு கூடுதல் கவனம் செலுத்தி மக்கள் அதிகமாகப் பயணிக்கும் குறித்த வீதியை மீள்புனரமைக்க முன்வரவேண்டும் என வலி.மேற்கு சங்கானை மக்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

மீள் எழுச்சித்திட்டம் என்பது மக்களினால் முன்னுரிமை தெரிவில் முன்னுரிமைப் படுத்தும் திட்டம். ஆனால் முன்னுரிமை தெரிவில் அரசியல் புகுந்துள்ளது.

யாழ்.பொன்னாலை முதலாம் ஒழுங்கைக்கு கோடி ரூபா செலவில் 292 மீற்றர் நீளமான கொங்கிறீட் வீதி போட அரசு முனைகிறது. மேலும் இந்த வீதி போக்குவரத்துக்கு பயனற்ற 8 அடி வீதியாகவே உள்ளது. அந்த வீதியை அகலிக்க மக்கள் எவரும் இதுவரை சம்மதமும் தெரிவிக்கவில்லை. அதற்கான கடிதங்களும் முன் வந்து வழங்கவில்லை. இந்த நிலையில் 16 குடும்பங்கள் உள்ள இவ்வீதி ஏன் புனரமைப்பு செய்யப்பட வேண்டும் என கேள்வி எழுப்புகின்றனர் மக்கள்.

யாழ்.பொன்னாலை முதலாம் ஒழுங்கையின் முடிவு விவசாய நிலத்தையே சென்றடைகின்றது. இந்த நிலையில் இவ்வீதி அபிவிருத்தியில் உள்நோக்கம் உள்ளதாக சபையின் உறுப்பினர்கள் ஆதங்கப்படுகின்றனர். சங்கானையில் 86 முக்கியமான பிரதேச சபை வீதிகள் மீள்புனரமைப்பு இன்றியுள்ளன.

எனவே இதன் அபிவிருத்தி தொடர்பில் வடமாகாண சபை கூடுதல் கவனம் செலுத்த வேண்டும் என மக்கள் கேட்டுள்ளனர். (வ)





சாவகச்சேரி பிரதேச சபையின் மிருசுவில் பொது நூலகத்தில் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு நடத்தப்பட்ட இறுதி நாள் நிகழ்வுக்கு முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சபை உறுப்பினர் கேசவன் சயந்தன் மங்கல விளக்கேற்றுவதையும் அங்கு இடம்பெற்ற கலை நிகழ்வினையும் படங்களில் காணலாம். (வ-9)

# விவசாயக் கடனுக்கு வங்கிகள் கட்டுப்பாடு

## நெற்செய்கையாளர் திண்டாட்டம்

தென்மராட்சி, நவ.11

தென்மராட்சி பிரதேசத்தில் காலபோக நெற்செய்கைக்காக வங்கிகளால் வழங்கப்படும் கடனுக்குக் கட்டுப்பாடுகள் விதித்ததை அடுத்து கடன் பெற முடியாதுள்ளதாக நெற் செய்கையாளர்கள் தெரிவித்தனர்.

கடந்த வருடம் காலபோக நெற்செய்கைக்கு அந்தந்த கமக்கார அமைப்புக்கள் ஊடாக ஒரு லட்சம் ரூபா வரைகடன் வழங்கப்பட்டது.

இந்த வருடம் ஏக்கருக்கு 15 ஆயிரம் ரூபா மட்டும் வழங்கப்படும் எனவும் அதனைப் பெறுவதற்குப் பயிர்க் காப்புறுதிக் கட்டணம், வங்கி வைப்பு ஆகியவற்றுக்கும் பணம் செலுத்த வேண்டும் என கூறப்படுவதாகவும் இதனால் கடன் பெற முடியாதுள்ளதாகவும் தெரிவித்தனர். (வ-9)

# நிரந்தர வீடுகளை வழங்குமாறு ஆனந்தபுரம் மக்கள் கோரிக்கை

முல்லைத்தீவு, நவ.11

முல்லைத்தீவு ஆனந்தபுரம் கிராமத்தில் மீளக்குடியமர்ந்துள்ள 67 குடும்பங்கள் நிரந்தர வீடுகள் கிடைக்காததால் தற்போது பெய்து வரும் மழையினால் பல்வேறு அசௌகரியங்களை எதிர்கொண்டு வருகின்றன.

முல்லைத்தீவு மாவட்டத்தில் இறுதிப் போர் இடம்பெற்ற பகுதிகளில் ஒன்றான ஆனந்தபுரம் கிராம அலுவலர் பிரிவில் உள்ள ஒன்பது கிராமங்களில் தற்போது 225 குடும்பங்கள் மீள்குடியமர்ந்துள்ளன.

இதில் 67 குடும்பங்களுக்கு இதுவரை நிரந்தர வீடுகள் எவையும் வழங்கப்படவில்லை. இந்தக் குடும்பங்களே பாதிக்கப்பட்ட நிலையில் காணப்படுகின்றன.

இங்கு வசிக்கும் 225 குடும்பங்களில் ஒரு அங்கத்தவரைக் கொண்ட குடும்பங்களுக்கு தலா ஒரு லட்சம் ரூபா பெறுமதியான நிரந்தர வீடுகள், பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்தினூடாக வழங்கப்பட்டுள்ளதோடு சில குடும்பங்களுக்கு இந்திய வீட்டுத் திட்டமும் வழங்கப்பட்டுள்ளது.

ஆனால் நிரந்தர வீடுகள் கிடைக்காத குடும்பங்கள் தமக்கு நிரந்தர வீடுகளை வழங்குவதற்கு உரிய அதிகாரிகள் விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரிக்கை விடுத்துள்ளன. (க-6)

# சேமக்காலை முரண்பாடு முடிவுக்கு

கிறிஸ்தவர்களின் சேமக்காலை தொடர்பாக 2 கிராம மக்களுக்கு இடையே எழுந்த முரண்பாடு பேராயர், பங்குத்தந்தை மற்றும் இளவாலை பொலிஸாரின் தலையீட்டால் தீர்த்து வைக்கப்பட்டது.

இளவாலை சீந்திப்பந்தல் கிறிஸ்தவ சேமக்காலைக்கு மதில் கட்டி கதவு அமைத்து பாதுகாப்பு ஏற்படுத்தல் தொடர்பில் இரு கிராமங்களிடையே முரண்பாடு ஏற்பட்டது. அதனையடுத்து பேராயர்மற்றும் பங்குத்தந்தை இளவாலை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆகியோர்தலையிட்டு இரு கிராம மக்களையும் அழைத்து கலந்துரையாடி இரு பகுதி மக்களும் அமைதியான முறையில் பாதுகாப்பு மேற்கொள்ள ஒப்புதல் அளித்துள்ளனர். (வ-86)


# இடர் முகாமைத்துவப் பிரிவு வழங்கியது சூரிய மின்கலங்களை

அக்கராயன், நவ.11

கிளிநொச்சி மாவட்டத்தில் வெள்ள அபாயம் ஏற்படும் போது மக்களைத் தங்க வைக்கக் கூடிய வசதியைக் கொண்ட 12 பாடசாலைகளுக்கு கிளிநொச்சி மாவட்ட இடர் முகாமைத்துவப் பிரிவினரால் சூரிய மின் கலத்தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளன.

கடந்த காலங்களில் வெள்ளத்தால் இடர் ஏற்பட்டு மக்கள் பாடசாலைகளுக்கு இடம்பெயர்ந்து சென்று தங்கியிருக்கும் போது வெளிச்சமில்லாததால் இருளில் அல்லற்பட வேண்டிய நிலை காணப்பட்டது.

இதனைத் தவிர்க்கும் பொருட்டு மக்கள் இடம்பெயர்ந்து தங்கக் கூடிய 12 பாடசாலைகளுக்கு இந்த சூரிய மின் கலத்தொகுதிகள் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (க-18)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'பரிசுக்கு வரி பத்தாயிரம்' பிசுபிசுத்துப்போன மோசடி

தென்மராட்சி, நவ.11

"அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் உங்களுக்கு 10 லட்சம் ரூபா பரிசு கிடைத்துள்ளது. ஆனால் 10 ஆயிரம் ரூபா வரி செலுத்த வேண்டும்.- என்று கூறி பணமோசடி செய்ய முயன்ற ஒருவரிடம் கெட்டித்தனமாகத் தப்பியுள்ளார் கெருடாவில் வாசி.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை சாவகச்சேரி கெருடாவிலில் இடம்பெற்றது.


சம்பவம் பற்றித் தெரியவருவதாவது:-

இந்தப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் வெளி நாட்டில் இருந்து வருகை தந்திருந்தார். அவரது தொலைபேசிக்கு நேற்று முன்தினம் 0774198862 என்ற இலக்கத்திலிருந்து தொலைபேசி அழைப்பொன்று வந்தது. டயலொக் நிறுவனத்தினரால் நடத்தப்பட்ட சீட்டிழுப்பில் 10 லட்சம் ரூபா பரிசு உங்களுக்கு வீழ்ந்துள்ளது. இந்தக் கொடுப்பனவைப் பெறுவதற்கு வரியாக 10 ஆயிரம் ரூபா செலுத்த வேண் டும்.. பணத்துடன் சாவகச்சேரிக்கு வாருங்கள் என்று கூறப்பட்டது. எனினும் இது மோசடி வேலைதான் என்பதைப் புரிந்து கொண்ட அந்தநபர் பத்து லட் சம் ரூபா பரிசு கிடைத்தது குறித்து மகிழ்ச்சி. எனினும் இப்போது என்னிடம் காசில்லை தாங்கள் பத்தாயிரம் ரூபாவைக் கடனாக தந்துதவினால் அதனைச் செலுத்தி விட்டு பரிசுத் தொகை எடுத்தும் வட்டியுடன் தருகிறேன்" என்று கூறியுள்ளார்.

உடனேயே தொலைபேசி தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது தொடர்பாக சாவகச்சேரி டயலொக் கிளையுடனும் டயலொக் தலைமை அலுவலகத்துடனும் தொடர்பு கொண்ட போது. தாங்கள் எந்தத் தொடர்பும் கொள்ளவில்லையெனவும் இது தொடர்பாக பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யுமாறும் கூறப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (ந-9)


## கண்ணீர்க் காணிக்கை

### முத்தையா மகேந்திரராஜா



கொக்குவில் இந்துவின் கோமகனானீர்
கூடிக் கற்றதால் சோதரரானீர்
பக்குவமாக பள்ளியை உயர்த்திட
பற்றுடன் உழைத்த பண்புடையாளன்
தக்கவாறு சமூகநல் பணியும்
சார்ந்தவர் துயர்களை சிந்தனையூற்றாய்
எக்கணமும் எழுந்துகை கொடுப்பாய்
ஏங்கவைத்து எங்கு சென்றாயோ.

எமது பழைய மாணவ சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினரான முத்தையா மகேந்திரராஜா அவர்களின் திடீர் மறைவையொட்டி எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்வதுடன், அவர்களின் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

பழைய மாணவர் சங்கம்,
கொக்குவில் இந்துக் கல்லூரி,
கொக்குவில்.

(39977)(7.6.3)



## மரண அறிவித்தல்

### திருமதி மகேஸ்வரி சபாரட்ணம்



கொக்குவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் சங்குவேலியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மகேஸ்வரி சபாரட்ணம் 09.11.2013 காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துத்தம்பி-நாகம்மா தம்பதியினரின் அன்பு மகளும், காலஞ்சென்ற சபாரட்ணத்தின் அன்பு மனைவியும், பத்மகாந்தன், ரவிகாந்தன் (நோர்வே), ஞானகாந்தன், காலஞ்சென்ற திருக்காந்தன் மற்றும் ராதாகாந்தன் (கனடா), கீதாமதி (கொலண்ட்), சிவாகாந்தன் (லண்டன்), காலஞ்சென்ற விமலகாந்தன் ஆகியோரின் அன்புத் தாயாரும், சுமித்திராதேவி, மஞ்சுளா காந்தி (நோர்வே), யசோ (கனடா), பத்மநாதன் (கொலண்ட்), சிவாஜினி (லண்டன்) ஆகியோ ரின் மாமியும், சபாநாதன் (கனடா), இராஜேந்திரன் (ஜேர்மனி), சிறி (கொக்குவில்), மிறேமநாதன் (கனடா), காலஞ்சென்ற தெய்வ மனோகரன் மற்றும் ராணி (கொக்குவில்) ஆகியோரின் சகோதரியும், ஷர்மிளன் (நோர்வே), ஷகிலன் (நோர்வே), மிதுரா (கனடா), ஷானுஜா (கனடா), பிரசன்னா (கொலண்ட்), பிரசாந் (கொலண்ட்), சுஜித்தா (கொலண்ட்), மிதுரன் (லண்டன்), சைனுஜா (லண்டன்) ஆகியோரின் அருமைப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11.11.2013) திங்கட்கிழமை பிற்பகல் ஒரு மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி இந்து மயானத்துக்கு தகனக் கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சங்குவேலி, பாடசாலை ஒழுங்கை,
மானிப்பாய்.
T.P : 021 321 3336

(39974) (7.6.3)

தகவல்:
குடும்பத்தினர்.




தீபாவளிப் பெருநாளுக்காக வட மாகாண சமூக சேவைகள் திணைக்களத்தின் ஏற்பாட்டில் கைதடி அரச முதியோர் இல்லத்தில் தங்கி வாழும் முதியவர்களுக்கு உடு புடைவைகள் வழங்கப்பட்டன. (ந-51)

# மழையால் சேறும் சகதியுமாய் திருநெல்வேலி பொதுச் சந்தை

யாழ்ப்பாணம், நவ.11

தற்பொழுது பெய்து வரும் மழையைத் தொடர்ந்து திருநெல்வேலி பொதுச் சந்தை மோசமான நிலையில் காணப்படுகின்றது. சந்தையின் கீழ்த் தளம் வாழைக் குலைச் சந்தை என்பன சேறும் சகதியும் நிறைந்து மக்கள் நடமாட முடியாத நிலையில் உள்ளதாக வியாபாரிகளும் பொது மக்களும் தெரிவிக்கின்றனர்.

சந்தை புனரமைப்பு வேலைகள் இடம்பெறவுள்ளதாகக் கூறப்படும் நிலையில் கீழ்ப் பகுதிகளில் வெள்ளம் தேங்கி நிற்கக் கூடிய நிலைகளை மாற்றியமைத்து சந்தைப் பகுதியில் மக்கள் சிரமமின்றிச் செல்லக் கூடியதான நடவடிக்கைகளை நல்லூர் பிரதேச சபை முன்னெடுக்க வேண்டும் எனவும் கூறப்படுகின்றது. (ந-7)

# வாசிப்பு மாத போட்டி முடிவுகள்

தென்மராட்சி, நவ.11

சாவகச்சேரி பிரதேச சபை யின் சரசாலை பொது நூலகத்தினர் தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு மாணவர்களுக்கிடையே நடத்திய போட்டிகளின் முடிவுகள் அறி விக்கப்பட்டுள்ளன. முதல் மூன்றுஇடங்களையும் பெற்ற மாணவர்களின் விவரம் வருமாறு :-

படம் பார்த்து கதை கூறுதல்

சு.தேனிலா- மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூரி. அ.மதுரா-மட்டுவில் சந்திர மௌலீசவித்தி.,அ.அபர்ணா-மட்டுவில் கமலாசனி வித்தி.

பேச்சு - பிரிவு I

சி.கம்சனா-மட்டுவில் சந்திர மௌலீச வித்தி., கு.அசனிகா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி. ம.டினோசன் - மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.

பேச்சு -பிரிவு III

தே.தீபிகா-மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூரி. க.லாவண்யா- மீசாலை வீரசிங்கம் மத்திய கல் லூரி. ப.பவிநயா-மட்டுவில் சந்திர மௌலீச வித்தி.

கட்டுரை -பிரிவு IV

த.பாசுபதன்-மீசாலை வீரசிங்கம் மத்திய கல்லூரி.
செ.இலக்கியன்- மீசாலை வீரசிங்கம் மத்திய கல் லூரி.
த.கஸ்தூரி- மட்டு வில் சந்திர மௌலீச வித்தி.

உள்ளூராட்சி வாரம் -பிரிவு I

ச.கிருஷணா-மீசாலை வீரசிங்கம் மத்திய கல் லூரி.
ர.சிலக்ஸன்- மீசாலை வீர சிங்கம் மத்திய கல்லூரி.
அ.சாம்பவி - சரசாலை ஸ்ரீ கணேசா வித்தி. (ந-9)


## மரண அறிவித்தல்

### புவேந்திரா இராஜக்கோன்

(ஓய்வு பெற்ற அரசாங்க மருந்தாளர்)



ஏழாலை வடக்கு, தபாற்கந்தோரடியைச் சேர்ந்த புவேந்திரா இராஜக்கோன் (ஓய்வு பெற்ற அரசாங்க மருந்தாளர்) 09.11.2013 சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற ஏணஸ்ட் வைத்திலிங்கம் இராஜக்கோன் மற்றும் மேரிகிருபையம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற ஆசிரியர்களான இலகுப்பிள்ளை இராசதுரை - பாக்கியம் தம்பதியினரின் மருமகனும், திருமதி இராஜலக்சுமி(கருணா- ஓய்வு பெற்ற பிரதி அதிபர், யா/ஏழாலை சைவ மகாஜன வித்தியாலயம்) அவர்களின் அன்புக் கணவரும், தெய்வேந்திரா (இளைப்பாறிய விவசாயப் பணிப்பாளர், மட்டக்களப்பு), இந்திராணி ரட்ணபிரகாசம் (இளைப்பாறிய ஆசிரியர்), ஜெயந்திரா இளைப்பாறிய மின் அத்தியட்சகர்), இராஜேந்திரா (ஜேர்மனி), குலேந்திரா (கனடா), யோகேந்திரா (ஐக்கிய அமெரிக்கா) ஆகியோரின் அன்புச் சகோதரரும்,.ஈஸ்வரதேவி (புகையிரத பொறியியலாளர்), மனோகரன், சிவமலர், இரட்ணபிரகாசம், பொலின், ரதி, அருந்ததீ, Dr.பாமா ஆகியோரின் அன்பு மைத்துனரும், றூபா, நிமலன், நிரஞ்சன் ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (11.11.2013) திங்கட்கிழமை பி.ப. 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெறும் இறுதி ஆராதனையுடன் ஏழாலை வடக்கு சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

ஏழாலை வடக்கு, ஏழாலை.
(உபதபாற்கந்தோர் முன்பாக)
071 439 8019

(39975)(3.6.4)

தகவல்:
சகோதரன்
ஜெயந்திரா இராஜக்கோன்.



## துயர் பகிர்கின்றோம்

### குணசேகரம் குணசிங்கம்

(ரவி-கொழும்பான்)



09.11.2013 அன்று அகால மரணமடைந்த எமது சங்க அங்கத்தவர் குணசேகரம் குணசிங்கம் அவர்களுக்கு எமது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிப்பதுடன், இவரின் குடும்பத்தவரின் துயரிலும் பங்கு கொள்கின்றோம்.

கிளிநொச்சி மாவட்ட அழகக தொழில் முயற்சியாளர்கள் அபிவிருத்திக் கூட்டுறவுச்சங்கம் - கிளிநொச்சி.



## 31 ஆம் நாள் நினைவும் வீட்டுக்கிருத்திய அழைப்பும்

பிறப்பு 12.10.1940
இறப்பு 13.10.2013

### அமரர் ஆழ்வார் கந்தப்பு

(தமிழரசுக் கந்தப்பு)

[முன்னாள்-ஊழியர், கட்டைவேலி ப.நோ.கூ.ச, முன்னாள் சாவகச்சேரி நகரசபை உறுப்பினர்]



கடந்த 13.10.2013 ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர் ஆழ்வார் கந்தப்பு அவர்களின் வீட்டுக்கிருத்தியம் நாளை (12.11.2013) செவ்வாய்க்கிழமை மு.ப. 6.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நிகழவிருப்பதால் அத்தருணம் தாங்களும் வருகை தந்து அவரின் ஆத்மசாந்திப்பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறவிருக்கும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளும் வண்ணம் அன்புடன் கேட்டுக் கொள்வதுடன், அவரின் பிரிவுத் துயரில் பங்கு கொண்ட அனைவருக்கும் எமது நன்றிகளையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

காட்டுப்புலம், கரவெட்டி கிழக்கு
077 551 2303, 077 665 3288

(39976)(3.6.4)

குடும்பத்தினர்.
மகன்மார்: க.சேனாதிராசா, க.குணராசா.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காலபோக நெற்செய்கைக்கு கிளிநொச்சியில் மானிய உரம்

கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த ஆண்டு மேற்கொள்ளப்பட்டுள்ள கால போக நெற்செய்கைக்கு 55ஆயிரத்து 267ஏக்கருக்குரிய மானிய உரம் வழங்குவதற்கான அனுமதி கிடைத்துள்ளதாக மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளர் ஈ.தயாரூபன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் நடப்பாண்டில் மேற்கொள்ளப்பட்டுள்ள காலபோக நெற்செய்கைக்குரிய மானிய உரத்தை விநியோகிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன. இந்த நிலையில் 55ஆயிரத்து 267ஏக்கருக்கான மானிய உரத்தை விநியோகிப்பதற்கான அனுமதி தமக்கு கிடைத்துள்ளது என்றும் தற்போது விவசாயிகளுக்குத் தலா 5 ஏக்கர் என்ற அடிப்படையில் உரம் விநியோகிக்கப்படுவதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அண்மையில் கிளிநொச்சி மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற மாவட்ட விவசாய ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டத்திலேயே அவர் இதனைத் தெரிவித்தார். (க-6)

### மானிப்பாய் மருத்துவமனையில்

## அடிப்படை வசதிகளின் அபிவிருத்திக்கு ஏற்பாடு

யாழ்ப்பாணம், நவ.11

மானிப்பாய் அரசினர் மருத்துவமனையில் நாளாந்தம் சிகிச்சைக்கு வருகை தரும் நோயாளர்களது எண்ணிக்கை அதிகரித்து வருவதால் வைத்தியசாலையின் அடிப்படை வசதிகளை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

வைத்தியசாலையின் நோயாளர் நலன்புரி சங்கத்தின் மாதாந்தக் கூட்டம் கடந்த வாரம் வைத்தியசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இதன்போது வைத்தியசாலையின் அடிப்படை வசதிகள், நோயாளர் நலன்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது.

நாளாந்தம் சிகிச்சை பெறும் நோயாளர்களது எண்ணிக்கை அதிகரித்து வருவதால் தேநீர்ச்சாலையும், சைக்கிள் பாதுகாப்பு நிலையமும் அமைக்கப்பட வேண்டும் என்று புதிய வைத்திய பொறுப்பதிகாரி ஆ.காந்தநேசன் குறிப்பிட்டார்.

"-"

**தோல்வியாதி, முழங்கால் தேய்வு, சளி, முட்டு போன்ற நோய்களுக்கும் கிளினிக் நடத்தப்பட வேண்டும்**

அத்துடன் பிரதி புதன்கிழமைகளில் நடைபெற்று வரும் மருத்துவக் கிளினிக் வேறு நாள்களிலும் நடத்தப்பட வேண்டும். தோல்வியாதி, முழங்கால்தேய்வு, சளி, முட்டு போன்ற நோய்களுக்கும் கிளினிக் நடத்தப்பட வேண்டும் என்று அங்கு தெரிவிக்கப்பட்டது.

இதனைவிட வைத்தியர், தாதியர்கள் தங்குவதற்கு விடுதிவசதிகள் அமைத்துக் கொடுக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையும் முன்வைக்கப்பட்டது. (ஒ-14-100)

### வேலணை மத்திய கல்லூரியில் இன்று

## 'இணைந்து கற்றுக் கொள்வோம்'நிகழ்ச்சி

**சப்ரகமுவ மாணவர்களுடன் முதலமைச்சரும் வருகிறார்**

யாழ்ப்பாணம், நவ.11

வடமாகாண கல்வி அமைச்சும் சப்ரகமுவ மாகாண கல்வி அமைச்சும் ஜி.ஐ.சற்.அனுசரணையுடன் தெனுவர மிதுறு என்ற "இணைந்து கற்றுக் கொள்வோம்" நிகழ்ச்சித்திட்டத்தை நேற்று வேலணை மத்திய கல்லூரியில் ஆரம்பித்துள்ளன.

தீவக வலய கல்விப் பணிப்பாளர் ரி.ஜோண் குயின்ரஸ் தலைமையில் நாளைமறுதினம் புதன்கிழமை பிற்பகல் வரை இது தொடர்பான பயிற்சி நெறிகள் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் இன்று திங்கட்கிழமை சப்ரகமுவ மாகாண முதலமைச்சர் மகிந்த ஹேரத், கல்வி அமைச்சர் போகுனுமுனுப் பிரிய, செயலாளர் வீரசூரிய சப்ரகமுவ மாகாண கல்விப் பணிப்பாளர், ஜி.ஐ.சற் அதிகாரி திருமதி லலிதா ஆகியோர் கலந்து கொள்ளுவார்கள்.

தீவக வலயத்தைச் சேர்ந்த 75 மாணவர்களும் சப்ரகமுவ மாகாணத்தைச் சேர்ந்த 75 மாணவர்களும் இதில் கலந்து கொள்ளுகிறார்கள். (ஓ-7)

## நோயாளர்கள் அதிகரிப்பு மேலதிக சேவை நாள் தேவை

யாழ்ப்பாணம், நவ.11

நவாலியில் இயங்கும் சுதேச ஆயுள்வேத மத்திய மருந்தகத்துக்கு கூடுதலான மக்கள் சிகிச்சைக்கு வருவதால் மேலதிகமாக ஒரு நாளை அனுமதிக்க வடமாகாண சுதேசிய வைத்திய பணிப்பாளர் முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

வலி.தென்மேற்கு பிரதேச மக்களின் நன்மை கருதி நவாலி கொத்துக்கட்டி வீதியில் உள்ள ஹேமலதா நிறுவன மத்திய மருந்தகத்தின் சேவை வாரத்தில் ஒவ்வொரு வியாழக்கிழமைகளிலும் இடம்பெறுகின்றது. இத்தினங்களில் 70முதல் 80வரையான மக்கள் முழு மருத்துவ சேவையினால் பெரிதும் பயனடைகின்றனர். எனவே வலி.தென்மேற்கு மக்கள் முழுமையாக நவாலி ஹேமலதா ஞாபகார்த்த ஆயுள்வேத மத்திய மருந்தகத்தினை பயன்படுத்த வாரத்தில் மேலதிகமாக ஒரு நாளை ஒதுக்கி இரு நாள் சேவை இடம்பெற வழியமைக்க வேண்டும் எனத் தெரிவிக்கப்படு கின்றது. (ந-41)

## நெஞ்சக் கதவைக் கொஞ்சம்........

செல்வ வேலாயுதம்

### சோலி தரும் போலி நோட்டு

சுமார் ஏழு கோடி ரூபாவுக்கு மேலான போலி 2,000 ரூபா நாணயத்தாள்கள் புழக்கத்துக்கு வந்துள்ளதுடன் இவற்றின் ஒரு பகுதி குடாநாட்டுக்குள்ளும் நுழைந்து விட்டன என்ற தகவல் மெய்யோ பொய்யோ எச்சரிக்கையூட்டவும் இழப்புக்களைத் தவிர்க்கவும் உதவும். கிட்டத்தட்ட 35,000 இற்கு மேற்பட்ட குறித்த போலி நாணயத்தாள்கள் மூலம் நாட்டின் பொருளாதாரத்துக்குக் கணக்குவிட்ட கணக்கு மாஸ்ரர் ஏற்கெனவே கணக்குவிட்டு ருசி கண்ட பூனையாம். வழக்கமாக பண நோட்டுகளை அச்சிடும் அரசுகளுக்கே டிமிக்கி விடுவது என்றால் காசா இலேசா. கொள்வோருக்கும் கொடுப்போருக்குமிடையில் சிக்கலற்ற கொடுக்கல் வாங்கலுக்காகவென இடையீட்டுக் கருவியாக மனிதன் பணத்தை உருவாக்கி உயிர் கொடுக்க அது அவனது உயிரையே காவு கொள்ளும் ஒன்றாகவும் மாறிவிட்டது. பணம் உலோகக் காசுகளாக அச்சில் வடிக்கப்பட்ட புராதன காலத்திலேயே போலி உலோகக் காசுகளும் அச்சில் வார்க்கப்பட்டனவெனில் காகிதப் பணம் அச்சிடப்பட்டது கள்ளநோட்டு அச்சிடலுக்கு இலகுவழி காட்டியானது. உலகின் பல நாடுகள் கள்ளநோட்டுக்களை ஒழிக்கும் முயற்சியில் தலையைப் பிய்த்துக் கொண்டிருக்கின்றன. ஆனானப்பட்ட இந்தியாவில் கூட 500 மற்றும் 1000 ரூபாக்களில்தான் கள்ள நோட்டுக்கள் அச்சிடப்பட்டுள்ளனவாம். ஆனால் இங்கோ கடுகதிப் பணக் காரனாகும் ஆசையே போலி 2000 ரூபா நாணயத் தாள்கள். கொமிசன் அடிப்படையில் செயல்படும் முகவர்கள் மூலமே கள்ள நோட்டுகள் பரம்பலடைகின்றன. கந்த சஷ்டிச் சூரன் போன்று பல்வேறு வடிவங்களில் பல்வகை உத்திகளைக் கவனக் கலைப்பான்களாக்கி கை வரிசையைக்காட்ட முயல்வர். வங்கிகளில் உத்தியோகத்தர்களே கள்ள நோட்டைக் கண்டறிய இயந்திரங்களை நாடும்போது, வர்த்தக மையங்களின் கதி? கைக்கு வந்த 2000 ரூபா கள்ளநோட்டாக இருந்து விட்டால் பொருள் போனதுடன் பொலிஸும் வரலாம். சரி எதற்கும் உங்களிடமுள்ள 2000 ரூபா தாள்களை ஒரு தடவை கவனமாகப் பார்த்து விடுங்களேன்.

## இருவேறு சம்பவங்கள்; இருவர் ஆஸ்பத்திரியில்

தென்மராட்சி, நவ.11

மழையில் நனைந்திருந்த தென்னை மரத்தில் ஏறியவர் தவறிவீழ்ந்து காயமடைந்தார். இந்தச் சம்பவம் சனிக்கிழமை சரசாலை அந்தணத்திடல் பகுதியில் இடம்பெற்றது.

அதே இடத்தைச் சேர்ந்த சின்னத்தம்பி சுப்பிரமணியம் (வயது-58) என்பவர் இதன்போது காயமடைந்து சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டார்.

இதேவேளை, மழையில் நனைந்திருந்த ஓலையினை அப்புறப்படுத்திய மூதாட்டி அதற்குள் மறைந்திருந்த நாகபாம்பினால் கடியுண்டார்.

இந்தச் சம்பவம் சனிக்கிழமை வரணி கரம்பைக் குறிச்சியில் இடம்பெற்றது.

இதே இடத்தைச் சேர்ந்த சின்னக்குட்டி தெய்வானைப்பிள்ளை (வயது-77) என்பவர் பாம்பினால் கடியுண்ட நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். (ந-9)

**லங்கா சிமெந்து நிறுவனம்**
**Lanka Cement PLC (Reg No. PQ 194)**

லங்கா சிமெந்துத் தொழிற்சாலையில் பங்குகள் பெற்ற சகல பங்குதாரர்களின் கவனத்திற்கு

இலங்கைப் பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு (SEC) சுற்றறிக்கை பிரகாரம் சகல பங்குதாரர்களும் தங்கள் பங்குச் சான்றிதழ்களை (Shares Certificates) பங்குத் தரகர்கள் மூலம் (CDS(Pvt) Ltd.) மத்திய வைப்புத் திட்டம் கணக்கில் வைப்பிலிட வேண்டும்.

இதற்கமைய லங்கா சிமெந்து நிறுவனப் பங்குதாரர்கள் தங்கள் பங்குகளை உடனடியாகக் கீழ்க் காணும் பங்குதாரர்கள் மூலம் தகுந்த நடவடிக்கை எடுக்கவும்.

| பங்குதாரர்கள் | விலாசம் |
|---|---|
| 1) Bartleet Religare Securities Ltd, | 147/2/3 K.K.S. Road - Jaffna |
| 2) Lanka Securities Ltd, | 147/2/3 K.K.S. Road - Jaffna |
| 3) Capital Trust Securities Ltd, | 147/2/3 K.K.S. Road - Jaffna |
| 4) Asha Philip Securities Ltd, | 147/2/3 K.K.S. Road - Jaffna |
| 5) Asia Securities Ltd, | 147/2/3 K.K.S. Road - Jaffna |

*மேலதிக விவரங்களுக்கு:*

1) உதவி பொதுமுகாமையாளர்
லங்கா சிமெந்து நிறுவனம்
130, W.A.D ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு-02.
Tel No : 011 239 9243

2) மு.திலீபன்
முகாமையாளர்
கொழும்பு பங்கு பரிவர்த்தனை,
147/2/3 K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
Tel No : 021 222 1455

(39837) (7.6.3)

**Sunjeya Food Land**

சனி, ஞாயிறு, புதன் ஆகிய நாள்களில் விசேடமான யாழ்-நகர ஒடியல் கூழ் 150/= மட்டும். (பார்சலாகவும் எடுத்துச் செல்லலாம்) 12 மணிக்கு மேல் சுவைத்து மகிழ அசைவக் கூழ்.

713, Hospital Road, Jaffna. (சி/12231) (7.6.3)
T.P : 077 677 7500, 021 221 7070

**விசேடமாக பாடசாலை மாணவர்களுக்கு ஐந்து ஈஸ்வரங்களுக்கான யாத்திரை**

ஆண்டு 8 இற்கு மேல் கல்வி கற்கும் ஆண் மாணவர்களுக்காக இரண்டு நாள்களில் நகுலேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், முன்னேஸ்வரம், மட்டக்களப்பு தான்தோன்றீஸ்வரம், திருக்கோணேஸ்வரம் ஆகிய ஐந்து ஈஸ்வரங்களுக்கும் சென்றுவர போக்குவரத்து (A/C Adjustable Seat TV) உணவு, தங்குமிடம் என்பவற்றுக்கு மொத்தக் கட்டணம் 5000/= மட்டுமே.

முதல் பதிவு செய்யும் 10 மாணவர்களுக்கு ஒரு School Bag இலவசம்.

பயணத் திகதி எதிர்வரும் சனிக்கிழமை 16.11.2013 காலை 6.30 மணிக்கு சென்று 17.11.2013 இரவு நிறைவு பெறும்.

ஆசனப் பதிவுகளுக்கு முந்துங்கள்

தொடர்புகளுக்கு : **Sunjeys Tourism**
713, Hospital Road, Jaffna.
T.P : 021 221 7070, 077 747 4111, 021 567 1671

வரணி புக்கிங் சென்ரர்
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
தொ.பே : 021 222 2868,
021 490 0955 (சி/12230) (7.6.3)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனித உரிமைகள் குறித்து

# தொழிற்சங்கப் பிரதிநிதிகளை தெளிவுபடுத்த நடவடிக்கை

கொழும்பு,நவ.11
மனித உரிமைகள் தொடர்பில் தொழிற்சங்கப் பிரதிநிதிகளை தெளிவுபடுத்துவதற்கான விரிவான திட்டத்தை மனித உரிமைகள் ஆணைக்குழு ஆரம்பித்துள்ளது.

"மனித உரிமைகள் மீறப்படுகின்ற சந் தர்ப்பங்களில் செயற் பட வேண்டிய விதம் தொடர் பில் ஊழியர்களுக் கும் தெளி வூட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

சேவை வழங்குநர்களுக்கும், ஊழியர்களுக்கும் இடையிலான பிரச்சினைகளின் போது மனித உரிமைகள் மீறப்படுகின்றமை தொடர்பில் விளக்கமளிக்கப்படவுள்ளது என்று ஆணைக்குழுவின் சட்டப் பிரிவு செயலர் சட்டத்த ரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

மனித உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களில் செயற்பட வேண்டிய விதம் தொடர்பில் ஊழியர்களுக்கும் தெளி வூட்டல்கள் வழங்கப் படவுள்ளன என்று அவர் கூறினார்.

இதற்கான ஒழுங்குகள் மாவட்ட மட்டத்தில்செய்யப்பட்டுள்ளன என்று மனித உரிமைகள் ஆணைக் குழு குறிப்பிட்டுள்ளது. (ச)

## மரண அறிவித்தல்

### குட்டிப்பிள்ளை அரசேஸ்வரன் (அரசு)

( ஆசிரியர் யா/கந்தர்மடம் சைவப்பிரகாச வித்தியாலயம்)



கல்வியங்காட்டைப் பிறப்பிடமாகவும், 56 மலர்மகள் வீதி அரியாலையை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டிப் பிள்ளை அரசேஸ்வரன் (அரசு) 10.11.2013 ஞாயிற்றுக் கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

56, மலர்மகள் வீதி, அரியாலை. (39984.14) தகவல் குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

### அற்புதம் ரஜீத்தன் (கமல்)



முருகன் வீதி, திருநெல்வேலியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட அற்புதம் ரஜீத்தன் (கமல்) நேற்று (10/11/2013) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் அற்புதம்-பூமணி (குஞ்சு) தம்பதியரின் அன்பு மகனும், வேலுமணி - லூர்த்தம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ஜெனீற்றாவின் அன்புக் கணவரும், பத்மேஸின் பாசமிகு தந்தையும், அனித்தா (ரூபி), ஸ்ரீபன், பவிதா (காமினி) ஆகியோரின் பாசமிகு சகோதரனும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (11/111/2013) திங்கட்கிழமை 94, பாற்பண்ணை வீதி, திருநெல்வேலியில் உள்ள சகோதரியின் இல்லத்தில் பி.ப.2 மணியளவில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

94, பாற்பண்ணை வீதி,
திருநெல்வேலி. (12232.14) தகவல்: குடும்பத்தினர்

உதயன்
விளம்பரத் தொடர்புகளுக்கு
advt@uthayan.com

## மரண அறிவித்தல்

### முத்தையா மகேந்திரராஜா (சிறீ)



கொக்குவில் மேற்கைப் பிறப்பிடமாகவும் கொக்குவில் கிழக்கு தேவாலய வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட முத்தையா மகேந்திரராஜா (சிறீ) கடந்த (08.11.2013) வெள்ளிக் கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்தையா-நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கந்தையா-மகேஸ்வரி தம்பதியரின் அன்பு மருமகனும், ரஜனிகாராணியின் (மல்லிகா) அன்புக் கணவரும், சுஜீவன், சர்மிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற கனகராசா, பத்மநாதன் (கனடா), குணராசன் (கனடா), சுசீலாதேவி (நியூசிலாந்து), காலஞ்சென்ற சுவேந்திரராசா, ஜெயராசா (கொழும்பு), பத்மாதேவி (ராதா- கனடா), விஜயராசா (கொக்குவில்), பாலராசா (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும், பவளரத்தினம், இராஜேஸ்வரி (கனடா), பவானி (கனடா), பரந்தாமன் (நியூசிலாந்து), காலஞ்சென்ற புஸ்பதேவி, பங்கஜலீலா (கொழும்பு), காலஞ்சென்ற சிவப்பிரகாசம், காலஞ்சென்ற சுமதி, ஞானரஞ்சினி (லண்டன்), தனபாலசிங்கம் (ஆஸ்திரேலியா), இந்திரதாஸ் (கனடா), சிறீதாஸ் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக இன்று (11.11.2013) திங்கட்கிழமை பி.ப. 2.00 மணியளவில் கோம்பயன் மணல் மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தேவாலய வீதி, கொக்குவில்
மேற்கு, கொக்குவில்.
தொ.பே:-021 222 2947 (39981.14.17)

தகவல்:
குடும்பத்தினர்.



திருகோணமலை வில்லூன்றி கந்தசுவாமி ஆலயத்தில் இடம்பெற்ற சூரன்போர் நிகழ்வு. (ச-40)

# மாநாட்டையொட்டி பட்டம் விடவும் தடை

பொதுநலவாய நாடுகளின் மாநாடு நடைபெறும் காலப் பகுதியில் மாநாடு நடைபெறும் மண்டபங்கள் மற்றும் அரச தலைவர்கள் தங்கியிருக்கும் ஹோட்டல்களுக்கு அருகில் பட்டங்கள் பறக்கவிடுவதற்கு தடை செய்யப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

அரச தலைவர்களுக்குத் தேவையான உச்ச பாதுகாப்பை வழங்கும் நடவடிக்கையாகவே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பொலிஸ் அத்தி யட்சகர் அஜித் ரோஹன தெரிவித்தார்.

அரச தலைவர்களின் பாதுகாப்புக்காக பொலிஸ் போக்குவரத்து பிரிவைச் சேர்ந்த 5000 பேரும் ஏனைய பாதுகாப்பு பணிகளுக்காக 2000 பேரும் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் என்று அவர் கூறினார். (ச)

THE ROYAL COLLEGE OF JAFFNA
சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்க இலக் கணம் பயில By: ந. விக்னேஸ்வரன் ஆச்சாரி.
வகுப்புக்கள் யாழ்ப்பாணம், சங்கானை.
T.P: 077 675 1649 (39979) (6.3.4)

## ஓராண்டு நினைவஞ்சலி



திருமதி
தவமணி அப்பாப்பிள்ளை

| தோற்றம் | மறைவு |
|---|---|
| 1948 -01-10 | 2012 -10-23 |

திதி: பூர்வபட்சநவமி 11-11-2013, திங்கட்கிழமை

ஆண்டொன்று ஆனதம்மா
நெஞ்சத்து நினைவுகளில் - நின்
நினைவு மறக்கவில்லை
கண்கள் இரண்டிலும் - உந்தன்
உருவம் உயிருடன் உலாவுதம்மா
பாசமழை பொழிந்து பார்
போற்றிட வளர்த்த அன்னையே
காலமுள்ள காலம் வரை - உந்தன்
நினைவுகளுடன் உம்மடி
போற்றி வாழ்ந்திடும்......

பாசமுள்ள
பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்

## மரண அறிவித்தல்

### திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் ( செல்லம்மாக்கா)



பன்னாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் தற்போது கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லம்மா சுப்பிரமணியம் நேற்று (10.11.2013) ஞாயிற்றுக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வைரமுத்து - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான வெற்றிவேலு-தங்கப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமக ளும் காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் பாசமிகு மனைவியும் இராசமலர் கதிர்காம நாதன் (நீதி முகாமையாளர் வேல்ட் கென்சேன்ட்), பவா (சுவிஸ்), கலாநிதி (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், அருந்தவராஜா, சைலஜா, பேபி (சுவிஸ்), ரஞ்சன் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும், சிந்துஜன், ஜனனி, அர்ச்சனா, அபிஷேக், செந்தூரணி, நிறோஜன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் காலஞ்சென்ற வர்களான அன்னலட்சுமி, இராசேந்திரம், மற்றும் வரலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான வைரவப்பிள்ளை, சிவகாமிப்பிள்ளை, கதிர்காமத்தம்பி ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் கல்கிசை மகிந்த மலர்ச் சாலையில் நாளை (12.11.2013) செவ்வாய்க்கிழமை காலை 8.00 மணிக்கு அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நண்பகல் 12.00 மணியளவில் இறுதிக்கிரியைகள் நடைபெற்று கல்கிசை மயானத்தில் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார் உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(39983.14) தகவல்: குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இளைஞர் மாநாடு அம்பாந்தோட்டையில் நேற்று கோலாகலமாக ஆரம்பம்

இலங்கையில் எதிர்வரும் 15ஆம் திகதி ஆரம்பமாக வுள்ள பொதுநலவாய மாநாட் டின் ஆரம்ப நிகழ்வான பொது நலவாய இளைஞர் மாநாடு நேற்று அம்பாந் தோட்டையில் அமைந் துள்ள புகுனுபுர சர்வதேச கேட்போர் கூடத்தில் கோலா கலமாக ஆரம்பமாகியது.

முற்பகல் 11 மணியளவில் ஜனாதிபதி மஹிந்த ராஜ பக்ஷ தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வில் பொது நலவாய மாநாட்டின் செய லாளர் கமலேஷ் சர்மா உட் பட அமைச்சர்களும், நாடா ளுமன்ற உறுப்பினர்களும் சர்வதேச பிரதிநிதிகளும் கலந்துகொண்டனர்.

இந்த ஆரம்ப நிகழ்வில் 56 நாடுகளின் பிரதிநிதிகள், கண்காணிப்பாளர்கள் மற் றும் 5 வினைத்திறன் படை யணிகளும் வருகைதந்தி ருந்தன. இத்துடன் இலங் கைக்கான 25 பிரதிநிதிக ளும், 20 கண்காணிப்பா ளர்களும், கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

இரண்டு வருடத்திற்கு ஒரு தடவை நடைபெறும் இந்த இளைஞர் மாநாடானது இளைஞர்களுடைய அபி விருத்திக்கு திருப்பு முனை யாக அமையுமென பொது நலவாய மாநாட்டின் செய லாளர் அலுவலகத்தின் இளைஞர் விவகார பணிப் பாளர் கெதரின் ஹெலின் தெரிவித்தார்.

(ஜ-சி)

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### பொதுநலவாய

யாளர்களிடம் கருத்து வெளி யிட்ட இந்திய வெளிவிவகார அமைச்சர் குர்ஷித்.

"தேச நலனைக் கருத்திற் கொண்டு பிரதமர் இதே போன்று ஏற்கனவே பல மாநாடுகளில் பங்கேற்கா மல் இருந்தார். கடந்த முறை ஆஸ்திரேலிய போர்த் நகரில் நடைபெற்ற பொதுநல வாய மாநாட்டுக்கு பிரதமருக்கு பதிலாக குடியரசுத் துணைத் தலைவரே கலந்துகொண் டார். அதற்கு முன் வெளியுறவு அமைச்சர்கள் பங்கேற்றி ருந்தனர். எனவே, பிரதமர் இலங்கை செல்லா ததால் இருநாட்டு உறவு பாதிக்கப் படும் என்றோ, இரு நாடுக ளுக்கு இடையே எதிர் காலத் தில் பேச்சுகள் நடை பெறாது என்றோ நினைக்கக் கூடாது" என்று கூறியுள்ளார்.

கொழும்பில் நடைபெறும் பொது நலவாய மாநாட்டில் பங்கேற்பதா அல்லது அதை புறக்கணிப்பதா என தீர்மான மொன்றை எடுக்கமுடியா மல் தடுமாறிவந்த இந்தியப் பிரதமர் மன் மோகன் சிங், ஆரம்பத்தில் மாநாட்டில் பங்கேற்கும் நிலைப்பாட்டி லேயே இருந்தார். இந்த முடிவை பகிரங்கமாக அறி வித்தால், தமிழகத்தில் ஏற் பட்டுள்ள கொந்தளிப்பு நிலை மேலும் உக்கிரமடையலாம் என்ற அச்சத்தா லேயே இது விடயத்தில் இன்னும் இறுதி முடிவு எடுக்கப்படவில்லை என்று அறிவிக்கப்பட்டது.

கொழும்பு மாநாட்டில் பிரத மர் கட்டாயம் கலந்து கொள்ள வேண்டும் என்றே சவுத் புளொக்கும் பரிந்துரை செய்திருந்தது. யாழ்ப்பாணத் துக்கு சென்று விட்டு பின் னர் மாநாட்டுக்கு செல்லு மாறு அது வியூகம் வகுத் துக்கொடுத்தது.

எனினும், இலங்கையில் நடை பெறும் பொதுநலவாய மாநாட்டில் இந்தியாவின் சார்பில் எவரும் பங் கேற்கக் கூடாது என ஆரம்பம் முதலே வலியுறுத்தி வந்த தமிழகம் சட்டசபை யிலும் இதனை மீள வலியுறுத்தி ஏகமனதாக தீர்மானமொன்றை நிறை வேற்றியது.

அத்துடன், தமிழகத்தில் மாநாட்டு எதிர்ப்புப்போராட் டங்கள் வெடித்ததால் மாநாட்டு விடயத்தில் இலங்கைக்கு சார்பான முடிவொன்றை எடுக்கும் விடயத்தில் பிரதம ருக்கு கடும் நெருக்கடி ஏற்பட் டது. இவை ஒருபுறமிருக்க மறு புறத்தில் மத்திய அமைச் சர்களான ப.சிதம்பரம், வாசன், ஜெயந்தி நடராஜன், அன்ரனி ஆகியோரும் மாநாட்டுக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கியதால் தீர்மா னம் எடுக்கும் விட யத்தில் பிரதமருக்கு மேலும் நெருக் கடி ஏற்பட்டது.

இவ்வாறு எதிர்ப்புகள் வலுத் தாலும், இந்திய வெளியுற வுத் துறை- மாநாட்டில் பிரத மர் கட்டாயம் பங்கேற்க வேண்டும் என பரிந்துரை செய்தது. இதனை யடுத்து, இதுவிடயத்தில் முடி வெடுக்கும் அதிகாரத்தை பிர தமரிடம் ஒப்படைத்துவிட்டு மத்திய கூட்டணி அரசின் பிர தான கட்சியான காங் கிர ஸும் அதிலிருந்த நழுவி யது.

அதன்பின்னர் காங்கிரஸின் உயர் மட்டக்குழுக் கூட்டம் இரண்டு தடவைகள் கூடியி ருந்தாலும் முடிவு எட்டப் பட வில்லை. அமைச்சரவைக் கூட்டத்திலும் சாதக முடிவு எட்டப்படவில்லை. இந்த நிலையில், கொழும்பு மாநாடு தொடர்பில் உறுதியான தொரு முடிவை எடுப்பதற் காக காங்கிரஸின் உயர் மட்டக்குழு நேற்றுமுன் தினம் மதியம் பிரதமரின் இல்லத்தில் மூன்றாவது தட வையாகவும் கூடி ஆராய்ந் தது.

இந்தக் கூட்டத்தில், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, பிரதமர் மன்மோகன்சிங், மூத்த அமைச்சர்கள், ஏ.கே. அன்ரனி, ப.சிதம்பரம், சுசில் குமார் ஷிண்டே, கபில் சிபல், சல்மான் குர்ஷித், சோனியாவின் அரசியல் ஆலோசகர் அகமது பட்டேல் ஆகியோர் கலந்து கொண்ட னர். இதன்போது, தெரிவிக் கப்பட்ட எதிர்ப்பை அடுத்தே, கொழும்புப் பயணத் திட் டத்தை இந்தியப் பிரதமர் கைவிட்டுள்ளார் என்று டில்லி இராஜதந்திரச் செய்தி கள் தெரிவிக்கின்றன.

"பொதுநலவாய மாநாட்டில் பிரதமர் மன்மோகன்சிங் கலந்து கொண்டால், அது தமிழகத்தில் அரசியல் ரீதி யாக பெரியளவில் பாதிப்பை ஏற்படுத்தும் என்றும் கட்சி யின் நலனை கருதி, தமிழ் மக்களின் உணர்வுகளை மதிக்கும்வகையிலும்பிரதமர் அதில் கலந்துகொள்ளக் கூடாது என்றும் மூத்த அமைச்சர் கள் ஏ.கே. அன்ரனி, ப.சிதம் பரம் ஆகியோர் சுட்டிக்காட் டியுள்ளனர்.

எனினும், இதற்கு கூட்டத் தில் ஆட் சேபனையும் தெரி விக்கப்பட்டுள்ளது. "பிரதமர் மன்மோகன்சிங் மாநாட்டில் கலந்துகொள்ளாவிட்டால் அது அனைத்துலக அளவில் குறிப்பாக பொதுநலவாய நாடுகளிடையே இந்தியா வின் நிலையை பாதிக்கும்" என்று சல்மான் குர்ஷித் உள்ளிட்டசிலர் வாதிட்டுள்ளனர். இதனால், இறுதி முடிவை எட்ட முடியாமல் குழப்பம் மேலும் நீடித்துள்ளது.

இறுதியில், தமிழக எதிர்ப்பு, நடை பெறவுள்ள நாடாளு மன்றத் தேர்தல் உட்பட நான்கிற்கும் மேற்பட்ட விட யங்களைக் கருத்திற்கொண்டு மாநாட்டில் பங்கேற்பதை கைவிடும் முடிவை பிரதமர் மன்மோகன் சிங் எடுத்துள் ளார். இந்தியாவிலுள்ள முன் னணி ஊடகங்கள் அனைத் தும் இதை உறுதிப்படுத்தி யுள்ளன.

#### உத்தியோக பூர்வ அறிவிப்பு இல்லை

"பொதுநலவாய மாநாடு தொடர்பில் இந்தியப் பிரதமர் மேற்கொண்டுள்ள முடிவு தொடர்பில் இலங்கைக்கு இன்னும் உத்தியோகபூர்வ மாக அறிவிக்கப்படவில்லை" என்று வெளிவிவகார அமைச் சின் செயலாளர் கருணா திலக அமுனுகம நேற்றுப் பிற்பகல் தெரிவித்தார்.

இந்தியப் பிரதமரின் கடிதம் கிடைத்துள்ளதா என்று ஜனா திபதியின் ஊட கப் பேச்சா ளரிடம் நேற்று மாலை வின வியபோது,

" இது தொடர்பில் பலரும் என்னிடம் கேட்டனர். எனி னும், ஜனாதிபதி பொது நல வாய நிகழ்வில் கலந்து கொண்டுள்ளதால் அவரை தொடர்புகொள்ள முடியாமல் உள்ளது. அவரது செயலாள ரையும் தொடர்புகொள்ள முயற்சித்தேன் அது முடிய வில்லை' - என்றார் மொஹான் சமரநாயக்க. கடிதம் கிடைத் ததா அல்லது இல்லையா என்பதை அவர் உறுதிப் படுத்தவில்லை. (ங-5)

### 3 கிராம

டுள்ளது. இருப்பினும் இந்த மீள்குடியமர்வு எப்போது இடம்பெறும் என்பது இந்த அறிவிப்பில் இடம்பெற வில்லை.

எனவே குறித்த மூன்று கிராம சேவையாளர் பிரிவுக ளைச் சேர்ந்த மக்களை, வலி.வடக்கு மற்றும் வலி. கிழக்குப் பிரதேச செயலாளர் பிரிவுகளில் இன்று முதல் மீள்குடியமர்வுக்காக பதிவு செய்யுமாறு அவர் கேட்டுக் கொண்டுள்ளார்.

வலி.வடக்கு உயர் பாது காப்பு வலயத்தினுள் அடங் கும் பலாலி கிழக்கு, பலாலி வடக்கு, வளலாய் பிரதேசங்க ளுக்கு, நலன்புரி நிலையங் களிலுள்ள மக்களை சில தினங்களுக்கு முன்னர் அழைத்துச் சென்று இராணு வத்தினர் காண்பித்திருந்தனர். இந்த நிலையில் தெல்லிப் பழை பிரதேச செயலகத்தில் நேற்றுக் காலை அவசர கலந்துரையாடல் நடத்தப்பட் டது. இதில் யாழ்.மாவட்ட அரச அதிபர் சுந்தரம் அரு மைநாயகம், தெல்லிப்பழை பிரதேச செயலர் க.ஸ்ரீமோக னன், கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன், உடு வில் பிரதேச செயலர் மு.நந்த கோபாலன் மற்றும் வலி. வடக்கு உயர்பாதுகாப்பு வல யத்தினுள் உள்ளடங்கும் 24 கிராம சேவையாளர் பிரிவுகளுக்குமுரிய கிராம அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

இந்தக் கலந்துரையாடலின் பின்னர், வலி.வடக்கு பிர தேச செயலாளர் பிரிவுக்குட் பட்ட பலாலி கிழக்கு மற்றும் பலாலி வடக்கை சொந்த இடமாகக் கொண்ட மக்களை மாத்திரம் வலி.வடக்கு பிர தேச செயலகத்தில் மீள்குடிய மர்வுக்கான பதிவுகளை மேற் கொள்ளுமாறும் வலி.கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட் பட்ட வளலாயை சொந்த இடமாகக் கொண்ட மக்களை மாத்திரம் வலி.கிழக்கு பிர தேச செயலகத்தில் மீள்குடிய மர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அரச அதிபர் அறிவுறுத்தியுள்ளார்.

குடும்ப அட்டை, தேசிய அடையாள அட்டை, காணி உறுதி அல்லது சான்றுபடுத் தக் கூடிய ஆவணங்களைக் கொண்டு சென்று மீள்குடிய மர்வுக்கான பதிவுகளை மேற்கொள்ளுமாறும் அவர் அறிவுறுத்தியுள்ளார். இருப் பினும் எப்போது இந்த மீள் குடியமர்வு இடம்பெறும் என் பது தொடர்பில் அவர் எந்தத் தகவலையும் தெரிவிக்க வில்லை.

இதேவேளை - வலி.வடக்கு மீள்குடியமர்வை வலியுறுத்தி நாளைய தினம் போராட்டம் ஒழுங்கு செய்யப்பட்டுள் ளதுடன், கொழும்பில் பொது நலவாய அமர்வுகள் இடம் பெறும் சூழ்நிலையிலேயே அரச அதிபரின் இந்த அறி விப்பு வெளியாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.. (ங-5)

### ஆஸி., நியூஸி.

வித்தார். இந்தச் செயல் மிக வும் கண்டிக்கத்தக்கது என் றும் அவர் மேலும் குறிப் பிட்டார்.

இதேவேளை, பயணிகள் விஸாவிலேயே குறித்த இரு வரும் இலங்கைக்குள் வந்த தாகவும் ஆனால் குறித்த விஸாவில் உள்ள விதிமுறை களை மீறி அவர்கள் இருவ ரும் கொழும்பில் ஊடகவிய லாளர் மாநாட்டை நடத்த முயன்றபோதே, அவர்களை விசாரணைக்குட்படுத்தி திருப்பி அனுப்பியுள்ளதாக வும் குடிவரவு மற்றும் குடிய கல்வு அதிகாரிகள் தெரிவித் துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை இலங்கை வந்த குறித்த இரு நாடாளுமன்ற உறுப்பி னர்களும் வடக்குக்கு பய ணம் செய்து அங்குள்ள தற் போதைய நிலைமைகள், இராணுவ ஆக்கிரமிப்பால் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகள், மனித உரிமை மீறல்கள் குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் கள், வடக்கு மாகாண முதல மைச்சர், மாகாண சபை அமைச்சர்கள், உறுப்பினர் கள் மற்றும் பொதுமக்கள் ஆகியோரின் கருத்துகளைக் கேட்டறிந்திருந்தனர் என்று கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் ஈ.சரவணபவன் தெரிவித் தார். (ங-சி)

### உண்மை

விடுத்துள்ளார் என்று பாது காப்பு அமைச்சின் செயலா ளர் கோத்தபாய ராஜபக்ஷ. கொழும்பிலிருந்து வெளியா கும் ஆங்கில ஊடகமொன் றுக்கு கருத்துத் தெரிவிக்கை யிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். வடக்குக்கு பயணம் மேற்கொள்ளும் பிரிட்டன் பிரதமர் டேவிட் கமரூனை சந்தித்து மனித உரிமை நிலைமைகள் தொடர்பில் ஆவணம் கைய ளிக்கவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரி வித்துள்ளமை தொடர்பில் குறித்த ஆங்கில ஊடகம் கேள்வியெழுப்பிய போதே அவர் இவ்வாறு தெரிவித் துள்ளார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு சொல்வதை விடுத்து அவர்கள் நேரடியாக வடக் குக்குச் சென்று நிலைமை களை அவதானிக்க முடியும். இதன்போது யாழ். நகரம் மற்றும் கிளிநொச்சி நகரம் ஆகியவற்றின் அபிவிருத்திக ளையும் பார்வையிட முடி யும். தமிழீழ விடுதலைப் புலிகள் சிறுவர்களை படை யில் இணைத்து வைத்திருந் தார்கள். இன்று நாங்கள் அவர்களுக்கு புனர்வாழ்வு வழங்கி சிறந்த இலங்கைப் பிரஜைகளாக்கியுள்ளோம் - என்றார். (ங-5)

### மீள்குடியமர்வை

ளால் நாளை செவ் வாய்க் கிழமை முதல் தொடர் போராட்டங்கள் முன்னெடுக் கப்படவுள்ளன.

கொழும்பில் பொதுநலவாய மாநாடு இடம்பெறும் சம காலப்பகுதியில், அதில் கலந்து கொள்ளும் சர்வதேச சமூகத் தின் கவனத்தை ஈர்க்கவும், வடபகுதிக்கு வருகைதரும் தலைவர்களுக்கு உண்மை நிலையை எடுத்துக் காட்ட வும் கவனயீர்ப்புப் போராட் டம் ஒழுங்கு செய்யப்பட் டுள் ளது. வலி.வடக்கு மீள்குடிய மர்வுக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள, இந்தப் போராட்டம் நாளை காலை 8 மணிக்கு மாவிட்டபுரம் கந்தசுவாமி கோயிலில் ஆரம்பமாகவுள்ளது.

மக்களின் வாழ்வுரிமைக் காக நடத்தப்படும் இந்தப் போராட்டத்தில் சகல நாடா ளுமன்ற உறுப்பினர்களை யும், மாகாண சபை மற்றும் நகர, பிரதேச சபைகளின் உறுப்பினர்களையும் கலந் துகொள்ளுமாறும் நாடா ளுமன்ற உறுப்பினரும் கட் சியின் செயலாளருமான மாவை.சேனாதிராசா கேட் டுக் கொண்டுள்ளார்.

(ங-5-86)

### சர்வதேச

லாளர்கள் கொழும்புக்கு வருகை தரவுள்ளனர்.

இவ்வாறு வருகை தரும் சர்வதேச ஊடகவியலாளர் கள் விரும்பினால், வடபகு திக்குச் சென்று நிலைமை களை நேரில் பார்வையிடுவ தற்கும் செய்தி சேகரிப் பதற்கும் உரிய ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும். இதற் கென அவர்களுக்கு விசேட அடையாள அட்டையையும் வழங்கத் நாம் தயாராக இருக்கின்றோம். எனினும் வடக்குக்கு செல்லும் ஊடக வியலாளர்கள் எமக்கு தக வல் வழங்கிய பின்னரே அங்கு செல்ல முடியும்" என்று தகவல் திணைக்க ளப் பணிப்பாளர் தெரி வித்தார். (ங-5)

### அரசுக்குத்

முடிவு செய்திருப்பது எங்க ளின் மாநாட் டின் வெற்றி யைப் பாதிக்காது. அதனை நாங்கள் ஒரு பிரச்சினை யா கவே கருத வில்லை. அவ ரது முடிவு எங்களுக்குத் தோல்வி அல்ல, நாங்கள் அவரை அழைத்தோம். அவர் வந்திருந்தால் நாங்கள் மகிழ்ச்சி அடைந்திருப்போம். அவ்வளவுதான்" என்றும் அவர் தெரிவித்தார். (ங-சி)

### தமிழர்


ளது. மாநாட்டில் பிரதமர் பங் கேற்றாலும், பங்கேற்கா விட் டாலும் தமிழர்களின் பக் கமே இந்தியா நிற்கும் என் பதில் மாற்றுக்கருத்துக்கு இடமில்லை" என்றும் அவர் குறிப்பிட்டார். (ங-சி)

### சிறுமிகளை

வதாக கூறிவிட்டு சென்ற னர். எனினும் நேற்றுவரை அவர்கள் வீடு திரும்பாததை யடுத்தே பெற்றோர்கள் வவு னியா பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர். இந்தச் சிறுமிகள் தொடர்பாக பொலிஸார் விசாரணை களை முன்னெடுத்துள்ள னர். (ங-402)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





இளையோரிடம் உதைபந்தாட்ட வளர்ச்சியை ஊக்குவிக்கும் நோக்குடன் சென்.ஜோன்ஸ் கல்லூரி நடத்திய அமலசீலன் உதைபந்தாட்ட விழா நேற்று முன்தினம் சனிக்கிழமை சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்றது.
பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட சென்.ஜோன்ஸ் கல்லூரியின் முன்னாள் பிரதி அதிபர் அமலசீலன் இதில் பங்குபற்றிய உதைபந்தாட்டப் பயிற்றுநர் ஒருவருக்கு உதைபந்து வழங்குவதையும், உதைபந்தாட்ட விழாவில் பங்குபற்றிய வீர வீராங்கனைகளையும் படத்தில் காணலாம். (ஙு-23)

## அறிவொளி சம்பியன்

யாழ்ப்பாணம், நவ.11
உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு கரைச்சி பிரதேச சபையின் கீழ் பதிவு செய்யப்பட்ட சன சமூக நிலையங்களுக்கு இடை யிலான விளையாட்டு விழாவில் பெண்களுக்கான வலைப்பந்தாட்ட சுற்றுப்போட்டியில் வட்டக்கச்சி அறிவொளி சனசமூக நிலைய அணி சம்பியன் ஆனது. நேற்று ஞாயிற்றுக்கிழமை கனகபுரம் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் வட்டக்கச்சி அறிவொளி சனசமூக நிலைய அணியை எதிர்த்து செல் வநகர் வள்ளுவர் சனசமூக நிலைய அணி மோதிக் கொண்டது.
இதில் வட்டக்கச்சி அறிவொளி சனசமூக நிலைய அணி 41:0 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றி பெற்று சம்பியன் ஆனது.
(ஙு-23)

# மத்திய கல்லூரி வென்றது

யாழ்ப்பாணம், நவ.11
அகில இலங்கை பாடசாலை துடுப்பாட்டச் சங்கம் நடத்தும் 13 வயதுப் பிரிவினருக்கான பிரிவு III இற்கான கிரிக்கெட் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வாரம் சென். ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் யாழ். மத்திய கல்லூரி அணி வெற்றி பெற்றது.
இந்த ஆட்டத்தில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியை எதிர்த்து யாழ்.மத்திய கல்லூரி அணி மோதிக் கொண்டது.
முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணியினர் 20 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 58 ஓட்டங்களைப் பெற்றனர்.
இதில் ஐ.ஐதைன் 23 ஓட்டங்களையும், யதுஷன் 8 ஓட்டங்களையும் ,யதுகுலன் 6 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் அனஸ்ராஜ் 8 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 13 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும் ,இயல் அரசன் 6 பந்துப்பரிமாற்றங்கள் பந்து வீசி 13 ஓட்டங்களுக்கு 3 இலக்குகளையும் மதுஷன் 9 பந்து பரிமாற்றங்கள் பந்து வீசி 23 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தனது முதலாவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய யாழ். மத்திய கல்லூரி அணியினர் 35 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 204 ஓட்டங்களை பெற்றனர்.
இதில் மதுஷன் 44 ஓட்டங்களையும் ,ஜெயதர்சன் 24 ஓட்டங்களையும், நிதர்ஷன் 31 ஓட்டங்களையும், நிலோஷன் 25 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் சென்.ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி சார்பாக சர்மா 6 பந்துப் பரிமாற்றங்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் லோஜிதன் 5 பந்துப் பரிமாற்றங்கள் பந்து வீசி 25 ஓட்டங்களுக்கு 2 இலக்குகளையும் வீழ்த்தினர்.
தொடர்ந்து 2ஆவது இன்னிங்ஸுக்காக துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ் கல்லூரி 'பி' அணி 28 பந்துப் பரிமாற்றங்கள் நிறைவில் சகல இலக்குகளையும் இழந்து 97 ஓட்டங்களையே பெற்றது.
இதில் பிரணவன் ஆட்டம் இழக்காமல் 48 ஓட்டங்களையும் யதுஷன் 15 ஓட்டங்களையும் லோஜிதன் 8 ஓட்டங்களையும் தமது அணி சார்பாகப் பெற்றனர்.
பந்துவீச்சில் யாழ்.மத்திய கல்லூரி அணி சார்பில் மதுஷன் 10 பரிமாற்றங்கள் பந்து வீசி 34 ஓட்டங்களுக்கு 6 இலக்கையும் அனஸ்ராஜ் 10 பந்துப்பரிமாற்றங்கள் பந்துவீசி 29 ஓட்டங்களுக்கு 2 இலக்கையும் வீழ்த்தினர். இதன் மூலம் ஒரு இன்னிங்ஸ் மற்றும் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சென். ஜோன்ஸ் கல்லூரி "பி" அணியை வீழ்த்தியது யாழ். மத்திய கல்லூரி. (ஙு-23)

## யங்ஹென்றிஸ் பணிந்தது சென். மேரிஸிடம்

யாழ்.உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் ஊரெழு றோயல் விளையாட்டுக்கழகம் நடத்தும் 'யாழ்ப்பாண சமர்' உதைபந்தாட்ட சுற்றுப்போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை உரும்பிராய் இந்துக்கல்லூரி மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் இளவாலை யங்ஹென்றிஸ் விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி மோதிக் கொண்டது.
இதில் நாவாந்துறை சென். மேரிஸ் விளையாட்டுக்கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது. (ஙு-23)

# வனதாரகையை வீழ்த்தி இராணுவ அணி வாகை

அக்கராயன், நவ.11
அக்கராயன் பொலிஸ் நிலையத்தால் நடத்தப்பட்ட 8 பந்துப்




பரிமாற்றங்கள் கொண்ட கிரிக்கெட் தொடரில் இராணுவ அணி வெற்றியீட்டியது. ஸ்கந்தபுரம் இல 1 பாட சாலை மைதானத்தில் அண்மையில் அக்கராயன் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி சதுரங்க தலைமையில் நடைபெற்ற இறுதியாட்டத்தில் ஸ்கந்தபுரம் இராணுவ அணியும் யூனியன்குளம் வனதாரகை விளையாட்டு அணியும் மோதின.
முதலில் துடுப்பெடுத்தாடிய இராணுவ அணி 8 பந்துப்பரிமாற்றங்களில் 7 இலக்கு இழப்புக்கு 95 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்காடிய வனதாரகை அணி 8பந்துப்பரிமாற்றங்களில் 9 இலக்குகளை 31 ஓட்டங்கள் மட்டும் பெற்று தோல்வியடைந்தது.
மக்களிடம் நெருக்கத்தையும் நட்புறவையும் வளர்க்கும் வகையில் இந்தப்போட்டி நடத்தப்பட்டதாக அக்கராயன் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி தெரிவித்தார். (ஙு-18)

## 786 அணி பந்தாடியது கோல்டன் பிறதர்ஸை

யாழ்ப்பாணம்,நவ.11
வவுனியா உதைபந்தாட்ட லீக்கினால் அங்கத்துவக் கழகங்களுக்கு இடையே பண்டார வன்னியன் ஞாபகார்த்த வெற்றிக் கிண்ணத்துக்காக நடத்தப்படும் உதைபந்தாட்டச்சுற்றுப் போட்டித் தொடரில் நேற்று முன்தினம் சனிக்கிழமை வவுனியா வைரவ புளியங்குளம் யங்ஸ்ரார் விளையாட்டுக்கழக மைதானத்தில் இடம்பெற்ற ஆட்டத்தில் 786 விளையாட்டுக்கழக அணியை எதிர்த்து கோல்டன் பிறதர்ஸ் விளையாட்டுக் கழக அணி மோதிக் கொண்டது.
இதில் 786 விளையாட்டுக்கழக அணி 2:0 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(23)

# நட்சத்திர உதைபந்தாட்ட முடிவுகள் சில

வடமராட்சி.நவ.11
மாலி சந்தி மைக்கல் விளையாட்டுக்கழகம் யாழ். மாவட்டத்திலிருந்து அழைக்கப்பட்ட கழகங்களுக்கு இடையே நடத்தும் நட்சத்திர அணிகளின் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டித் தொடரில் கடந்த வெள்ளிக்கிழமை இடம்பெற்ற



ஆட்டங்களில் வெற்றி பெற்ற அணிகளின் விவரம் வருமாறு:-
வதிரி பொமர்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் கம்பர் மலை யங்கம்பன்ஸ் விளையாட்டுக் கழக அணிக்கும் இடையேயான ஆட்டத்தில் வதிரி பொமர்ஸ் விளையாட்டுக்கழக அணி 8:2 என்ற கோல் கணக்கில் அபார வெற்றி பெற்றது.
மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக்கழக அணிக்கும் உடுப்பிட்டி நவஜீவன் விளையாட்டுக்கழக அணிக்கும் இடையேயான ஆட்டத்தில் மயிலங்காடு ஞானமுருகன் விளையாட்டுக் கழக அணி 3:1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.
(ஙு-8)

# முதலிடம் பிடித்தார் அஸ்வின்

மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிராக சதம் அடித்ததன் பலனாக, ஐ.சி.சியின் டெஸ்ட் சகல துறை ஆட்டக்காரருக்கான தரவரிசைப் பட்டியலில் முதலிடத்தை ரவிச்சந்திரன் அஸ்வின் பிடித்துள்ளார்.
மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதல் டெஸ்டில் இந்திய அணி ஓர் இன்னிங்ஸ் மற்றும் 51 ஓட்ட வித்தியாசத்தில் வெற்றி பெற்றது.
அப்போட்டியில், இந்திய அணி இக்கட்டான சூழலில் இருந்தபோது ரோஹித் சர்மாவின் பக்க பலமாக இருந்ததுடன், சதம் அடித்து அணியை சரிவிலிருந்து மீட்டார் அஸ்வின். அந்த ஆட்டத்தில் அஸ்வின் 124 ஓட்டங்கள் குவித்ததுடன், 5 இலக்குகளையும் வீழ்த்தினார்.
இதனால் சகலதுறை ஆட்டக்காரருக்கான தரவரிசையில் அஸ்வின் 81 புள்ளிகளைப் பெற்று முதல் இடத்தைப் பிடித்தார். முன்னிலையில் இருந்த பங்களாதேஷின் ஷாகிப் அல்ஹசன் மற்றும் தென்னாபிரிக்காவின் ஜக் கலிஸ் பின்னுக்குத் தள்ளப்பட்டனர். தற்போது, 2ஆம் இடத்தில் உள்ள ஹசனை விட 43 புள்ளிகள் முன்னிலையில் உள்ளார் அஸ்வின்.
அதேபோல், டெஸ்ட் துடுப்பாட்ட தரவரிசைப் பட்டியலிலும் அஸ்வின் 18 இடங்கள் முன்னேறி 45ஆவது இடத்தையும், பந்து வீச்சுப் பட்டியலில் இரண்டு இடங்கள் முன்னேறி 6ஆம் இடத்தையும் பிடித்துள்ளார்.
கொல்கத்தா போட்டியில் அறிமுகமான ரோஹித் (177 ஓட்டங்கள்), முகமது சமி (9 இலக்குகள்) ஆகியோரும் தரவரிசையில் ஏற்றம் கண்டுள்ளனர். துடுப்பாட்ட தரவரிசையில் ரோஹித் 63ஆவது இடத்தையும், பந்து வீச்சில் சமி 53ஆவது இடத்தையும் பிடித்துள்ளனர்.
(த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டேல் ஸ்ரென் அபார ஆட்டம்; தொடர் தென்னாபிரிக்கா வசம்



ஐக்கிய அரபு இராச்சியத்துக்குக் கிரிக்கெட் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள தென்னாபிரிக்க அணிக்கும், பாகிஸ்தான் அணிக்குமிடையிலான 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை தென்னாபிரிக்க அணி கைப்பற்றியுள்ளது. 4ஆவது போட்டியில் வெற்றிபெற்றே அவ்வணி இத்தொடரைக் கைப்பற்றியுள்ளது.

அபுதாபியில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற தென்னாபிரிக்க அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 பந்துப் பரிமாற்றங்களில் 5 இலக்குகளை இழந்து 266 ஓட்டங்களைப் பெற்றது.

முதலாவது இலக்குக்காக 87 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி, தொடர்ச்சியாக ஓட்டங்களைக் குவித்திருந்தது.

துடுப்பாட்டத்தில் தென்னாபிரிக்க அணி சார்பாக குயின்டன் டீ கொக் 135 பந்துகளில் 112 ஓட்டங்களையும், ஹசிம் அம்லா 50 பந்துகளில் 46 ஓட்டங்களையும, ஏபி.டி.வில்லியர்ஸ் 40 பந்துகளில் 30 ஓட்டங்களையும், றயன் மக்லரன் 21 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 28 ஓட்டங்களையும், ஜே.பி.டுமினி 21 பந்துகளில் 25 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் பாகிஸ்தான் அணி சார்பாக மொஹமட் ஹபீஸ், ஜுனைட் கான் இருவரும் தலா 2 இலக்குகளையும், மொஹமட் இர்பான் ஒரு இலக்கையும் கைப்பற்றினர். 267 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு துடுப்பெடுத்தாடிய பாகிஸ்தான் அணி 49.2 பந்துப்பரிமாற்றங்களில் சகல இலக்குகளையும் இழந்து 238 ஓட்டங்களைப் பெற்று 28 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

முதலாவது இலக்குக்காக 74 ஓட்டங்களைப் பகிர்ந்த அவ்வணி,3 இலக்குகளை இழந்து 174 ஓட்டங்களுடன் பலமான நிலையில் காணப்பட்ட போதிலும், அதன் பின்னர் இலக்குகளைத் தொடர்ச்சியாக இழந்து தோல்வியைத் தழுவியது.

துடுப்பாட்டத்தில் பாகிஸ்தான் அணி சார்பாக மிஸ்பா உல் ஹக் 76 பந்துகளில் 65 ஓட்டங்களையும், சொஹைப் மசூத் 54 பந்துகளில் 56 ஓட்டங்களையும், அஹமட் ஷெஷாத் 59 பந்துகளில் 43 ஓட்டங்களையும், மொஹமட் ஹபீஸ் 60 பந்துகளில் 33 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக டேல் ஸ்ரெய்ன் 25 ஓட்டங்களுக்கு 5 இலக்குகளையும், லொன்வபோ சொற்சொபி, றயன் மக்லரன், இம்ரான் தாஹிர் ஆகியோர் தலா ஒரு இலக்கையும் கைப்பற்றினர். இப்போட்டியின் நாயகனாக டேல் ஸ்ரெய்ன் தெரிவானார். (த)

இதற்காக ரூபா 2 லட்சம் மதிப்புள்ள விண்ணப்பங்கள் மும்பாய் வான்கடே மைதானத்தில் நவம்பர் 11ஆம் திகதி முதல் டிசெம்பர் 7ஆம் திகதி வரை கிடைக்கும்.



## இந்திய கிரிக்கெட் அணிக்கு புதிய அனுசரணையாளர்

இந்திய அணிக்கு புதிய அனுசரணையாளரைத் தெரிவு செய்ய ஏலம் அறிவிக்கப்பட்டுள்ளது. கடந்த 2001ஆம் ஆண்டு ஜுன் 2ஆம் திகதி இந்திய கிரிக்கெட் அணியின் அனுசரணையாளராக சகாரா நிறுவனம் ரூபா 4723 கோடிக்கு ஒப்பந்தம் செய்யப்பட்டது.

கடந்த 11 ஆண்டுகளாக இந்திய கிரிக்கெட் வீரர்களின் உடையில் பெரும் பங்காற்றிய சகாரா, பின்னர் 2008ஆம் ஆண்டில் ஐ.பி.எல் தொடங்கப்பட்ட போது. ஒரு அணியை வாங்க முயற்சித்தது.

ஆனால் பல்வேறு காரணங்களால் இம்முயற்சியினை இந்தியக் கிரிக்கெட் சபை நிறுத்திவிட்டது.

பின்னர் 2010இல் ஒரு வழியாக புனே அணியை வாங்கியது. இது தொடர்பாக இந்தியக் கிரிக்கெட் சபையுடன் கருத்து வேறுபாடு ஏற்பட்டதைத் தொடர்ந்து இந்தியா மற்றும் புனே அணியின் அனுசரணையாளரில் இருந்து கடந்த பெப்ரவரி மாதம் விலகுவது தொடர்பாக பேச்சு நடைபெற்றது, ஆனால் இதில் எவ்வித முன் னேற்றமும் ஏற்படவில்லை.

இதனைத் தொடர்ந்து கடந்த ஒக்ரோபர் 27இல் புனே அணி உரிமத்தை இந்தியக் கிரிக்கெட் சபை ரத்து செய்தது. இப்போது 9 மாதங்கள் கழித்து இந்திய அணிக்கு புதிய அனுசரணையாளரைத் தெரிவு செய்ய ஏல அறிவிப்பு வெளியிடப்பட்டது.

இதுகுறித்து இந்தியக் கிரிக்கெட் சபைச் செயலர் சஞ்சய் படேல் வெளியிட்டுள்ள அறிக்கையில், இந்திய ஆண்கள் 19 வயது 'ஏ' அணி மற்றும் பெண் கள் அணிக்கு 2014ஆம் ஆண்டு ஜனவரி முதலாம் திகதி முதல் 2017ஆம் ஆண்டு மார்ச் 31ஆம் திகதி வரை அனுசரணை செய்ய புதிய ஒப்பந்தங்கள் வரவேற்கப்படுகின்றன.

இதற்காக ரூபா 2 லட்சம் மதிப்புள்ள விண்ணப்பங்கள் மும்பாய் வான்கடே மைதானத்தில் நவம்பர் 11ஆம் திகதி முதல் டிசெம்பர் 7ஆம் திகதி வரை கிடைக்கும்.

பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் டிசெம்பர் 9ஆம் திகதி பிற்பகல் 3.00 மணி வரை ஏற்கப்படும் என்றும், அன்றைய தினங்களில் ஒப்பந்தங்கள் சரிபார்க்கப்பட்டு தெரிவு செய்யப்பட்ட அனுசரணையாளர் பற்றி அறிவிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (த)



## லாரா கவலை

இந்தியாவுக்கு எதிரான முதல் டெஸ்ட் கிரிக்கெட் போட்டி மூன்றே நாள்களில் முடியும் என நினைக்கவில்லை என்று மேற்கிந்தியத் தீவுகள் அணியின் முன்னாள் கிரிக்கெட் வீரர் லாரா தெரிவித்தார்.

இந்தியாவின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர், மேற்கிந்தியத் தீவுகளுக்கு எதிரான தொடருடன் கிரிக்கெட்டிலிருந்து விடைபெற போவதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில் சச்சினின் 199ஆவது டெஸ்ட் போட்டி, கொல்கத்தாவின் ஈடன் கார்டன் மைதானத்தில் நடைபெற்றது. இந்த மைதானத்தில் சச்சின் விளையாடும் கடைசிப் போட்டி என்பதால் மேற்குவங்க கிரிக்கெட் சங்கம் விமரிசையாக கொண்டாட பல நிகழ்ச்சிகளுக்கு திட்டமிட்டிருந்தது. அதில் ஒரு நிகழ்ச்சியாக, ஆட்டத்தின் இறுதி நாளான 5ஆம் நாளின் போது, மேற்கிந்தியத் தீவுகள் கிரிக்கெட் அணியின் முன்னாள் வீரர் லாராவைக் கொண்டு, சச்சினை கௌரவிக்க திட்டமிடப்பட்டிருந்தது.

எனினும், ரோஹித் சர்மா மற்றும் முகமது சமி ஆகியோர் ஆட்டத்தின் போக்கையே மாற்றி அமைத்து, மூன்றே நாள்களில் முதல் டெஸ்ட் போட்டியை முடிவுக்குக் கொண்டு வந்தனர்.

இந்நிலையில், ஏற்கனவே ஏற்பாடு செய்திருந்த நிகழ்ச்சிக்காக லாரா நேற்று கொல்கத்தா வந்திருந்தார்.

இதன்போது செய்தியாளர்களிடம் பேசிய லாரா, இந்தப் போட்டியில் மேற்கிந்தியத் தீவுகள் அணியின் துடுப்பாட்டம் என்னை மிகவும் பாதித்துவிட்டது. இந்த டெஸ்ட் போட்டி மூன்றே நாளில் முடிவுக்கு வரும் என சற்றும் எதிர்பார்க்கவில்லை. எனினும், மேற்கிந்தியத் தீவுகள் அணி போராடி மீண்டும் முன்னிலை பெறும். சச்சினின் ஆட்டத்தைக் காண ஆவலுடன் வந்தேன். இருப்பினும், மும்பையில் நடைபெறும் அவருடைய இறுதி ஆட்டத்தை நேரில் சென்று காண்பேன் என்று லாரா தெரிவித்தார். (த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாடியது மழை



இலங்கை மற்றும் நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான முதலாவது ஒரு நாள் போட்டி மழையால் கைவிடப்பட்டது. மகிந்த ராஜபக்ஷ மைதானத்தில் நேற்று இந்தப் போட்டி நடைபெற்றது.
நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற நியூசிலாந்து அணி முதலில் இலங்கையை துடுப்பெடுத்தாடுமாறு பணித்தது. இலங்கை அணி சார்பாக கருணாரத்தனாவும் டில்சானும் ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களாக களமிறங்கினார். முதலாவது பந்துப்பரிமாற்றத்தின் முதலாவது பந்திலேயே இலங்கைக்கு அதிர்ச்சி அளித்தார் அன்டர்சன். முதலாவது பந்திலேயே கருணாரத்தன ஓட்டம் எதனையும் பெறாது ஆட்டமிழந்து வெளியேறினார்.
இதனை அடுத்து களமிறங்கிய குமார்சங்ககார டில்சானுடன் இணைந்து அதிரடியாக துடுப்பெடுத்தாடி அணியின் ஓட்ட எண்ணிக்கையை உயர்த்தினார். இருவரும் அரைச்சதம் கடந்து 137 ஓட்டங்களை பெற்றிருந்த போது சங்ககார 79 ஓட்டங்களுடனும் டில்சான் 81 ஓட்டங்களுடனும் அடுத்தடுத்து ஆட்டமிழந்து வெளியேறினர். அடுத்து களமிறங்கிய ஜெயவர்த்தன ஒரு ஓட்டத்துடன் வெளியேற களம் இறங்கி அணித் தலைவர் மத்தியூஸ் ஒரு முனையில் அதிரடியாக துடுப்பெடுத்து விளையாடினாலும் மறு முனையில் பின்கள வீரர்கள் நிலைத்து நின்றாட மறுத்தனர் .இதனால் இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 பந்துபரிமாற்றங்களில் 9 இலக்குகளை இழந்து 288 ஓட்டங்களைப் பெற்றது இலங்கை அணி. மத்தியூஸ் இறுதி வரை ஆட்டமிழக்காமல் 74 ஓட்டங்களைப் பெற்றார்.
பந்து வீச்சில் மில்ஸ் 3 இலக்குகளையும் மக்லிங்கன், டேவிச் ஆகியோர் தலா 2 இலக்குகளையும் மக்குலம், அண்டர்சன் தலா ஓர் இலக்கையும் கைப்பற்றினர்.
இதனையடுத்து 289 என்ற வெற்றி இலக்கை கொண்டு துடுப்பொடுத்தாடக் களமிறங்கிய நியூசிலாந்து அணி மலிங்கவின் முதலாவது பந்துப்பரிமாற்றத்தில் இறுதிப் பந்தில் டேவிச்சின் இலக்கை பறிகொடுத்தது. இவர் ஓட்டம் எதனையும் பெறாது பவிலியன் திரும்பினார். இதனையடுத்து லதம், நிக்கோல் இருவரும் இணைந்து துடுப்பாடிக் கொண்டிருக் கையில் 4.2 பந்துப்பரிமாற்றங்களில் 13 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளை மழை குறுக்கிட்டதால் ஆட்டம் இடைநிறுத்தப்பட்டது.
தொடர்ந்து மழை பெய்ததன் காரணமாக போட்டியை தொடர முடியாத சூழ்நிலையில் போட்டி கைவிடப்பட்டதாக நடுவர்களால் அறிவிக்கப்பட்டது.
நியூசிலாந்து அணி சார்பாக லதம் 4 ஓட்டங்களையும் நிக்கோல் 1 ஓட்டத்துடனும் களத்தில் இருந்தனர். இரண்டாவது போட்டி நாளை இடம் பெறும்.

(400)

## காயம் காரணமாக தொடரில் இருந்து வெளியேறினார் ஹேமர் ரோச்

டரன் சமி தலைமையிலான மேற்கிந்தியத்தீவுகள் கிரிக்கெட் அணி இந்தியாவில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.
இரு அணிகளுக்கும் இடையேயான 2 டெஸ்ட் போட்டித் தொடரில் கொல்கத்தா ஈடன் கார்டன் மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா இன்னிங்ஸ் மற்றும் 51 ஓட்டங்கள் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. 2ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் மும்பை வான்கடே மைதானத்தில் எதிர்வரும் 14ஆம் திகதி (வியாழக்கிழமை) தொடங்குகிறது.
இந்தப் போட்டியிலும் மேற்கிந்தியத்தீவுகள் அணியின் வேகப்பந்து வீரர் கேமர் ரோச் ஆடவில்லை. தோள் பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக அவர் நாடு திரும்பியுள்ளார். ஏற்கனவே கொல்கத்தாவில் நடந்த முதல் போட்டியிலும் ஆடவில்லை. காயத்தில் இருந்து குணமடைய வாய்ப்பு இல்லாததால் எஞ்சிய போட்டிகளில் ஆடாமல் நாடு திரும்பியுள்ளார்.
மேற்கிந்தியத்தீவுகள் அணியின் திறமை வாய்ந்த பந்து வீச்சாளரான ரோச் தரவரிசையில் 14ஆவது இடத்தில் உள்ளார். 23 டெஸ்டில் விளையாடி 85 இலக்குகளை கைப்பற்றியுள்ளார்.
அவருக்கு பதிலாக ஷேனான் கேப்ரியல் இடம் பெற்றுள்ளார். அவர் அணியோடு இணைந்து கொள்கிறார்.
இந்தியாவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் விளையாடும் மேற்கிந்தியத்தீவுகள் அணியில் பொலார்ட் இடம் பெறவில்லை. காயம் காரணமாக அவர் ஒருநாள் தொடரில் விளையாடவில்லை.
டெஸ்ட் அணியில் இடம் பெற்ற பாவெல், வீராசாமி பெருமாள், நரசிங் தியோனரின் ஆகியோர் ஒருநாள் போட்டி அணியிலும் இடம் பெற்றுள்ளனர்.
ஒருநாள் தொடருக்கான மேற்கிந்தியத்தீவுகள் அணி விவரம்:-
வெய்ன் பிராவோ (தலைவர்), கிறிஸ்கெய்ல், பாவெல், டாரன் பாவெல், சாமுவேல்ஸ், லெண்டில் சிம்மன்ஸ், ராம்தின், ராம் பால், டரன்சமி, ஹோல்டர், சார்லஸ், டினோ பெஸ்ட், நரசிங் தியோனரின், சுனில் நரீன், வீராசாமி பெருமாள்.

(400)

# ஒலிம்பிக் ஜோதியுடன் விண்வெளியில் வலம்

PyeongChang 2014
Candidate City

உலக வரலாற்றில் முதன் முறையாக ஒலிம்பிக் ஜோதியுடன் விண்வெளியில் ரஷ்ய வீரர் நடந்து சென்று சாதனை படைத்துள்ளார்.
ரஷ்யாவில் உள்ள சோச்சி நகரில் 2014ஆம் ஆண்டு பெப்ரவரி 7ஆம் திகதியிலிருந்து 23ஆம் திகதி வரை 22ஆவது குளிர்கால ஒலிம்பிக் போட்டிகள் நடைபெற உள்ளது.
ஒலிம்பிக் போட்டிகளை நடத்தும் நாடுகள். உலகின் முக்கிய நகரங்கள் வழியாக ஒலிம்பிக் ஜோதியை ஊர்வலமாக கொண்டு சென்று ரசிகர்களைத் தயார்படுத்துவது வழக்கம்.
ஆனால் உலக ஒலிம்பிக் வரலாற்றில் முதன்முறையாக பூமியில் இருந்து 420 கிலோ மீற்றர் உயரத்தில் ரஷ்ய விண் வெளி வீரர் ஒலெக் கோடோவ், ஆஸ்திரேலியா மீது இருந்த வாறு ஏற்றப்படாத ஒலிம்பிக் ஜோதியுடன் புகைப்படத்துக்கு போஸ் கொடுத்தார். அந்தக் காட்சியை நேரடியாக ஒளி பரப்பிய ரஷ்ய தொலைக் காட்சிகள். இந்தச் சாதனை நம்ப முடியாத வகையில் அமைந்திருந்தாலும் விளையாட்டு. விஞ்ஞானம் போன்றவற்றில் ரஷ்யாவுக்கு இணை ரஷ்யா தான் என்பதை நிரூபித்துள்ளதாகப் புகழாரம் சூட்டின.

(து)

# மெக்ராத்தை கேலி செய்தாராம் சச்சின்



கிரிக்கெட்டில் கேலி (சிலெட் ஜிங்) சகஜமான ஒன்று. களத்தில் ஆடும்போது வெறுப்படைய செய்து சீண்டி பார்ப் பது தான் கேலி. ஆஸ்திரேலியா, இங்கிலாந்து வீரர்கள் பெரும்பாலும் இது மாதிரியான செயல்களில் ஈடுபடுவார்கள்.
இந்த நிலையில் டெண்டுல்கர் தன்னை கேலி செய்ததாக ஆஸ்திரேலிய முன்னாள் வேகப்பந்து வீரர் மெக்ராத் கூறியுள்ளார். 2000-ம் ஆண்டு ஐ.சி.சி. சம்பியன்ஸ் கிண்ணப் போட்டியில் தன்னை டெண்டுல்கர் கேலி செய்ததாகவும், ஆனால் இது ஆட்டத்தில் ஒரு பகுதியே என்றும் அவர் கூறியுள்ளார்.
டெண்டுல்கரை அதிகமுறை ஆட்டமிழக்கச் செய்த பந்து வீச்சாளர்களில் முரளிதரன், பொலாக் ஆகியோருடன் இணைந்து மெக்ராத் 2 ஆவது இடத்தில் உள்ளார். 13 முறை ஆட்டமிழக்கச் செய்து உள்ளார். பிரெட்லீ அதிக பட்சமாக சச்சினை 14 முறை ஆட்டமிழக்கச் செய்துள்ளார்.

(400)

# தொடரை வெல்வதே நோக்கம்



இலங்கைக்குக் கிரிக்கெட் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள நியூசிலாந்து அணிக்கெதிரான ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரை வெல்வதே இலங்கை அணியின் முக்கிய நோக்கம் என இலங்கை அணியின் தலைவர் அஞ்சலோ மத்தியூஸ் தெரிவித்துள்ளார்.
நியூசிலாந்து அணி இலங்கைக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 3 ஒருநாள் இரண்டுசர்வதேசப் போட்டிகளிலும், 20/20 சர்வதேசப் போட்டிகள் இரண்டிலும் பங்குபற்றவுள்ளது. இதில் முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நேற்று ஆரம்பமானது.
இந்நிலையில் கருத்துத் தெரிவித்த அஞ்சலோ மத்தியூஸ், இத்தொடரை வெற்றி கொள்வதே தங்களது எண்ணமாக உள்ளதாகவும், தொடரை வெற்றி கொண்ட பின்னர் இளைய வீரர்களுக்கு வாய்ப்புக்களை வழாங்குவதைப் பற்றி ஆராயப்படுமெனவும் குறிப்பிட்டுள்ளார்.
அண்மையில் இடம்பெற்ற தென்னாபிரிக்க அணிக்கெதிரான தொடரில் இலங்கை அணி சிரேஷ்ட வீரர்களான குமார் சங்கக்கார, மஹேல ஜெயவர்த்தன, திலகரட்ண டில்ஷான் ஆகியோரில் ஒருவரை ஒவ்வொரு போட்டிக்கும் ஓய்வு வழாங்கியிருந்தது.
எனினும் அவ்வாறான நடைமுறை இம்முறை பின்பற்றப்படாது எனக் குறிப்பிட்ட அஞ்சலோ மத்தியூஸ், அறிவிக்கப்பட்டுள்ள இலங்கைக் குழாம் முதலிரு போட்டிகளுக்காக மாத்திரமே அறிவிக்கப்பட்டுள்ளதாகவும், எனவே முதலிரு போட்டிகளையும் வென்று தொடரைக் கைப்பற்றினால் மூன்றாவது போட்டிக்காக மாற்றங்கள் ஏற்படுத்தப்படலாம் எனவும் குறிப்பிட்டுள்ளார்.
நியூசிலாந்து அணியில் அதன் தலைவர் பிரென்டன் மக்கலம், சிரேஷ்ட வீரர் றொஸ் ரெய்லர் ஆகியோருக்கு ஓய்வு வழாங்கப்பட்டுள்ளதோடு, முக்கிய வீரரான கேன் வில்லியம்சன் உபாதை காரணமாக இத்தொடரில் பங்குபற்ற முடியாது போனதால், இத்தொடருக்கான தலைவராக கைல் மில்ஸ் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(கு)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்ரெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 11.11.2013 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.